# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 404

சனி, 15 ஆகஸ்ட், 2026 | பக்கங்கள் 22

www.ilakku.org













# மேய்ச்சல் தரையை மீட்பதற்காக மட்டக்களப்பில் பண்ணையாளர்கள் போராட்டம்!



பல வருடக் கணக்காக தமது மேய்ச்சல் தரைப் பகுதிக்காகப் போராடி வரும் கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது நீண்ட கால பிரச்சனைக்குத் தீர்வு காணுமாறு கோரி நேற்று(14) பாரிய அமைதி வழி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, போராட்டத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக காணியை இழந்த மன்னார் மக்கள், யாழ்ப்பாணம் வலி. வடக்கு மக்கள், முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய கேப்பாப்புலவு மக்கள் மற்றும் மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது, “பண்ணையாளர்கள் தமிழர்கள் என்பதால் தீர்வு வழங்குவதில் தாமதமா?”, “பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையைப் பதிவு செய்வதில் ஏன் தாமதம்”, “பல ஆண்டுகள் கடந்தும் மக்களின் காணிகளை ஒப்படைக்க காலம் போதாதா” என பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

## வறட்சியான வானிலை: 68,000க்கும் மேற்பட்டோர் பாதிப்பு



வறட்சியான வானிலை காரணமாக 68,041 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் பிரகீத் தனன்சூரிய குறிப்பிட்டுள்ளார். ”மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அதற்கமைய, 21,873 குடும்பங்களைச் சேர்ந்த 68,041 பேர் வறட்சியான வானிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள 3,495 குடும்பங்களைச் சேர்ந்த 12,291 பேருக்குத் தேவையான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக உள்ளூராட்சி அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது” என்றார்.

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்திலும் தொல்பொருள் திணைக்களம் தலையீடு!



மன்னார்-திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இரவோடு இரவாக வரலாற்றை மாற்ற தொல்பொருள் திணைக்களம் அத்துமீறல் முயற்சி மேற்கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தினைக் ஒருங்கிணைப்பு குழுவிற்கு தெரியப்படுத்தினார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில், திருக்கேதீஸ்வரம் ஆலய வளாகத்தில்,தொல்பொருள் திணைக்களம் ஆலய நிர்வாகத்திற்கு தெரியாமல் இரவு

தொடர்ச்சி: பக்கம் 13

# ட்ரம்ப்பைக் கொலை செய்யப் போவதாகப் போலியான தகவல் – அமெரிக்க உளவுத்துறைக்கு சந்தேகம்

இஸ்ரேல் மூலம் ட்ரம்ப்புக்கு எதிராக ஈரான் விடுத்ததாகக் கூறப்படும் கொலை மிரட்டல் குறித்தும், அதன் காரணமாகவே அவரை துருக்கியிலிருந்து ஒரு மாற்று இராணுவ விமானத்தில் இரகசியமாக வெளியேற்றியதாகவும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்ததாக, அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி ‘தி வாஷிங்டன் போஸ்ட்’ செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மிரட்டல் குறித்த தகவலை இஸ்ரேலிய அரசாங்கம் சிஐஏ-விடம் தெரிவித்ததாகவும், ஆனால் அந்த அமைப்பின் ஆய்வாளர்கள் அந்த உளவுத் தகவலை நம்பத்தகுந்ததாகக் கருதவில்லை என்றும், தங்கள் ஐயங்களை நிர்வாக அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. ட்ரம்ப்பின் உயிருக்கு அச்சுறுத்தல்கள் குறித்த அறிக்கைகள் அமெரிக்க அமைப்புகளை விட இஸ்ரேலிய ஆதாரங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தன என்றும், சில ஆய்வாளர்கள் அவற்றின் நம்பகத்தன்மை குறைவு எனக் கருதுவதாகவும் ‘தி வாஷிங்டன் போஸ்ட்’ செய்தி கூறுகிறது.

கடந்த மாதம் நடந்த நேட்டோ உச்சிமாநாட்டைத் தொடர்ந்து, துருக்கியின் அங்காராவில் உள்ள விமான ஓடுபாதையில் இரகசியமாக விமானத்தை மாற்றியதை செவ்வாயன்று செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப் உறுதிப்படுத்தினார். பாதுகாப்புப் பணியாளர்களின் வழிகாட்டுதலை மட்டுமே தான் பின்பற்றியதாகவும் அவர் கூறினார்.



## கொலம்பியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 200-க்கும் மேற்பட்டோர் பலி




கொலம்பியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததை அடுத்து, அந்நாடு மூன்று நாட்கள் தேசிய துக்கத்தை அறிவித்துள்ளது. இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியவர்களைக் கண்டுபிடிப்பதற்காக மீட்புக் குழுவினர் காலக்கெடுவுக்குள் செயல்பட்டு வருகின்றனர்.

“உயிரிழந்த அனைவருக்கும் மரியாதை செலுத்தும் விதமாக”, அதிகாரப்பூர்வ கட்டிடங்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள கொலம்பிய தூதரகங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று அரசாங்கம் புதன்கிழமை (12) அறிவித்தது.


திங்கட்கிழமை(10) ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம், கடந்த நூற்றாண்டில் நாட்டைத் தாக்கிய மிக சக்திவாய்ந்த நிலநடுக்கமாகும். இது மேற்கு கொலம்பியா முழுவதும் கட்டிடங்களைத் தரைமட்டமாக்கியது மற்றும் சாலைகளைச் சேதப்படுத்தியது. செவ்வாய்க்கிழமை பிற்பகல் வரை 100-க்கும் மேற்பட்ட பின் அதிர்வுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்தப் பேரழிவு, நிலநடுக்கம் ஏற்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு பதவியேற்ற ஜனாதிபதி அபெலார்டோ டி லா எஸ்பிரியெல்லாவுக்கு ஒரு ஆரம்பகட்ட சோதனையாகவும் அமைந்துள்ளது. பிளவுபடுத்தும் தேர்தலுக்குப் பிறகு முதல் முறையாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற இவர், தற்போது தனது பதவிக்காலத்தின் முதல் பெரிய நெருக்கடியை எதிர்கொள்கிறார்.

அரசாங்கப் புள்ளிவிவரங்களின்படி, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,595 ஆகவும், அதிகாரப்பூர்வமாக காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 195 ஆகவும் உள்ளது. இருப்பினும், குடிமக்களால் நடத்தப்படும் தரவுத்தளங்கள், கணக்கில் வராதவர்களின் எண்ணிக்கை 4,000-க்கு அருகில் இருக்கலாம் என்று தெரிவிக்கின்றன.

உயிர் பிழைத்தவர்களைத் தேடும் பணி மேலும் அவசரமடைந்துள்ளது. இடிந்து விழுந்த கட்டிடங்களுக்கு அடியில் உயிருடன் இருப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கு முதல் 48 முதல் 72 மணி நேரம் பொதுவாக மிகவும் முக்கியமானதாகும், இருப்பினும் தண்ணீர் மற்றும் உணவு கிடைத்தால் மக்கள் நீண்ட காலம் உயிர்வாழ முடியும் என்று உதவி நிறுவனங்கள் தெரிவித்தன.

## 27 ஆண்டுகளுக்குப் பின்பு ஐரோப்பாவில் முழு சூரியக் கிரகணம்



கடந்த புதன்கிழமை(12) ஐரோப்பாவின் சில பகுதிகளில் ஒரு அபூர்வமான முழு சூரிய கிரகணம் காணப்பட்டது. இதனால் வானம் இருள் சூழ்வதைக் காணும் வாய்ப்பு லட்சக்கணக்கான மக்களுக்குக் கிடைத்தது. ஐஸ்லாந்து மற்றும் வட ஸ்பெயின் ஆகியவை இதைக் காண்பதற்கான மிகச் சிறந்த இடங்களாக இருந்தன அங்கு முழு கிரகண நிலை சுமார் 2 நிமிடங்கள் நீடித்தது. ஸ்பெயினில் இது ஒரு சிறப்பான காட்சியாக அமைந்தது. ஏனெனில் சூரியன் அடிவானத்திற்குக் கீழே மறையும் தருவாயில், அதாவது சூரிய அஸ்தமனத்திற்குச் சற்று முன்பு இந்த கிரகணம் நிகழ்ந்தது; இதனால் சூரியன் மெல்லிய பிறை வடிவமாகத் தோன்றியது. ஐரோப்பாவின் பிற பகுதிகள், கனடா, அமெரிக்காவின் வடக்குப்

தொடர்ச்சி: பக்கம் 13

## காசா மக்களுக்கு தண்ணீர் வசதி இல்லை: ஐ.நா.



காசா பகுதி மக்கள் தொகையில் பெரும்பகுதியினருக்குப் போதுமான நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை வசதிகள் கிடைப்பதில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் (OCHA) தெரிவித்துள்ளது.

காசாவில் 13 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் - அதாவது அப்பகுதியின் மொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் - குடிப்பதற்கும் சமைப்பதற்கும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 6 லிட்டருக்கும் (1.6 கேலன்) குறைவான அளவிலேயே நீரைப் பெறுகின்றனர். மனிதாபிமானத் தரநிலைகளின்படி, அவசர காலங்களில் குடிப்பதற்கும், சுத்தம் செய்வதற்கும், சமைப்பதற்கும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 15 லிட்டர் (4 கேலன்) நீர் தேவைப்படுகிறது.

காசாவில் உள்ள மேலும் 7 லட்சம் மக்கள் - அதாவது மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் - ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 9 லிட்டருக்கும் (2.4 கேலன்) குறைவான அளவிலேயே நீரைப் பெறுகின்றனர். இது அவர்களின் தனிப்பட்ட சுகாதாரம், வீட்டைச் சுத்தம் செய்தல் மற்றும் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி

தொடர்ச்சி: பக்கம் 13

# ஆரம்பமானது "நீதியின் ஓலம் – 2" தொடர் போராட்டம்

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி வடக்கில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.



தாயகச் செயலணி அமைப்பின் ஏற்பாட்டில் 'நீதியின் ஓலம்' எனும் தலைப்பில் இன்று முதல் (14) எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அகழ்வுப்பணிகள் கடந்த 8ஆம் திகதியுடன் 100 நாட்களை எட்டியிருப்பதுடன், அந்த மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 500க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் அடையாளங்காணப் பட்டுள்ளன.



இந்தநிலையில் குறிப்பாக படுகொலை செய்யப்பட்டு, செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்ட மக்களுக்கும், அவர்களது உறவுகளுக்குமான நீதியைக் கோரியும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுமே 'நீதியின் ஓலம் - 2'

**தொடர்ச்சி: பக்கம் 13**

# 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்ற பெயரில் காணி உரிமை பறிப்பா? – தமுகூ கேள்வி




இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் காணி உரிமை தொடர்பில், அரசு பேசியே காலத்தை கடத்துகிறது. தற்போது புதிய, "மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகாரசபை" என்ற ஒரு புதிய சபையை கொண்டுவந்து, "காலநிலை, மண்சரிவு, நீர் பிடிப்பு" என்று விற்பனை ஆகும் சொற்களை சந்தைப்படுத்தி, ஒட்டுமொத்த பெருந்தோட்ட வாழ் மலையக தமிழருக்கும் காணி உரிமையை தந்திரமாக மறுக்கவும், அவர்களை வெளி பலான இடங்களில் குடியேற்றவும், தொடர்மாடி வீடுகளை கட்டி குடியேற்றவும், அரசு திட்டமிடுகிறது. இது இவர்களது பழைய ஜே.வி.பி கொள்கையாகும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இலங்கையில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், மனோ கணேசனுடன், அந்த கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கி சார்பில் அதன் பணிப்பாளர் ஷெனென் கோவ் லின், செயற்பாட்டுத் தலைவர் உட்பட உயர் மட்ட குழுவினரும் பங்கேற்றனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ள மனோ கணேசன், "இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில், மலையக மக்கள் வளர்ச்சி குன்றிய பிரிவினர். இதற்கு வரலாற்றுக் காரணங்கள் உள்ளன. இன்று எமது குடியுரிமை முழுமையடைய வேண்டும் என்றால், எமது காணிக்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். காணி உரிமை இல்லாவிட்டால், எமது குடியுரிமை முழுமையடையாது. அது கிடைத்தால், ஏனைய உரிமைகள் படிப்படியாக வந்து சேரும்.

**தொடர்ச்சி: பக்கம் 20**

## ஆசிரியர் தலையங்கம் | 15 ஆகஸ்ட், 2026

# ஈழத்தமிழர் இறைமை குறித்த நாடுகளின் கருத்துக்கள் அறியப்பட வேண்டும்

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அவர்களின் இலங்கைக்கான உத்தியோக பூர்வ வருகையின் பொழுது சிறிலங்கா கொண்டுவரவுள்ள புதிய அரசியலமைப்பில் இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகளை வந்துவிட்ட பாதி வழியில் இருந்து தொடர்வது நல்லது எனவும் மீளவும் முதலாவது கட்டத்திற்குச் சென்று தொடங்க வேண்டும் என்கிற தேவையில்லையெனவும் கூறியதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. அதாவது சிறிலங்காவின் அரசியலமைப்புக்கு 14. 11.1987 ம் திகதிய 13வது திருத்தத்தின் மூலம் அதன் 17 வது அத்தியாயமான நிதிக்கு உபபிரிவாக 17 அ பிரிவாக மாகாணசபைகளை தாபித்தல் தொடர்பாக இணைக்கப்பட்டனவற்றையே இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி "பாதி வழி" எனக் குறிப்பிட்டுள்ளார் என்பதே பலரினதும் கருத்தாக உள்ளது. சிறிலங்காவின் 2009 ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் நீதிக்கான கோரிக்கை அனைத்துலக மனித உரிமைகள் பேரவையில் எழுப்பப்பட்ட பொழுதும் இந்தியா தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கு வழியென இதனையே கூறியது. இன்றும் 17 ஆண்டுகளின் பின்னரும் அதனையே கூறுகிறது என்பதனையும் முள்ளிவாய்க்காலில் சிறிலங்கா ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்த 2009 க்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் 2015இல் இந்தியா இலங்கைத் தமிழர்களுக்கான கண்ணியமான வாழ்வை தான் அமைக்கப்போவதாகக் கூறிய பொழுதும் இதே மாகாணசபையினையே மையப்படுத்தி அதனைக் கூறியது என்பதையும் இலக்கு எடுத்துரைக்க விரும்புகின்றது.

இந்நேரத்தில் மாகாணசபைகள் குறித்த மீள்சிந்திப்பு காலத்தின் தேவையாகிறது. மாகாணசபைகள் வழி சிறீலங்காவின் நிதியினை மாகாணங்களுக்கு பகிர்வதன் மூலம் நிதிப்பரவலாக்கத்தால் சிறிலங்காவின் ஒற்றையாட்சி முறைமையுள் மாகாணங்களுக்கான பொருளாதார வளர்ச்சியை சமப்படுத்தி எல்லா மாகாணங்களதும் உற்பத்தியை பெருக்கிச் சிறிலங்காவின் பொருளாதாரத்தினைப் பலப்படுத்தி சிறிலங்காவை பலமான அரசாங்கமாக நிலைப்படுத்தலே இந்த மாகாணசபைகளின் நோக்கமாக உள்ளது. இந்த விடயத்தில் நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி சிறிலங்காப் பாராளுமன்றத்தினை கடந்து தனது நேரடி நிர்வாகத்தில் மாகாணசபைகளுக்கான ஆளுநர்களை நியமித்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபைகளின் முதலமைச்சர்களையும் உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் இந்த முறைமை சிறிலங்கா சனாதிபதிக்கு அதிகாரங்களை அளித்தது. அந்த வகையில் மாகாணசபைகளுக்கான நிலப்பயன்பாட்டு உரிமை மற்றும் அந்நிலத்தில் முதலீடுகளுக்கும் உற்பத்திகளுக்குமான பாதுகாப்புக்கான மாகாணசபைக்கான பொலிசார் என்பன மாகாணசபைகளுக்குரியதா இல்லை சனாதிபதிக்குரியதா என்பதில் பிரச்சினைகள் தோன்றி இன்றும் தொடர்கின்றன. மாகாணசபைகள் வழி சிறிலங்காவின் உற்பத்திப் பெருக்கம் என்பதனை மையப்படுத்தியே சனாதிபதிக்கான பட்டியல்களும் மாகாணசபைக்கான பட்டியல்களும் பொதுவான பட்டியல்களும் அட்டவணைப்படுத்தப்பட்டன. இவை எந்த வகையிலும் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமாக வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு (National Question) உரிய தீர்வாக 1987 இல் கட்டமைக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மை என்பதை இலக்கு மீள்நினைவூட்ட விரும்புகிறது.

இவ்விடத்தில் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினை என்பது அவர்களது இறைமையின் அடிப்படையில் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி தங்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்தல் என்பதனால் ஈழத்தமிழரின் இறைமை குறித்த வரலாற்றினையும் மீளவும் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. காலனித்துவ போரத்துக்கேய அரசால் யாழ்ப்பாண அரசின் இறைமை 116 ஆண்டு முயற்சியின் பின் 1621ல் போர்த்துக்கேய இறைமைக்குள் கைப்பற்றப்படடது. 1658 இல் டச்சுக்காரரிடம் போர்த்துக்கேய காலனித்துவ அரசின் இறைமை சென்றடைந்த பொழுது யாழ்ப்பாண அரசின் இறைமை டச்சுக்காரரைச் சென்றடைந்தது. 1796 இல் இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் இலங்கைத் தீவின் டச்சுக்காரரின் காலனித்துவ அரசின் இறைமை சென்றடைந்த பொழுது யாழ்ப்பாண அரசின் இறைமை அவர்களைச் சென்றடைந்து 1802 இல் பிரித்தானிய காலனித்துவ அரசிடம் சென்றடைந்தது. 1832 இல் பிரித்தானிய காலனித்துவ அரசிடம் வன்னிச் சிற்றரசு வீழச்சியுற்ற பொழுது கூட்டு மொத்தமாக யாழ்ப்பாண அரசின் இறைமையும் வன்னிச் சிற்றரசின் இறைமையுமான ஈழத்தமிழரின் இறைமை பிரித்தானிய முடிக்குரிய ஆட்சிக்கு உட்பட்டது. 1833 முதல் 1948 வரை 115 ஆண்டுகள் பிரித்தானிய முடிக்குரிய இறைமையாக இருந்த ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே அமைத்துக் கொள்ளும் அவர்களின் பிரிக்க இயலாத தன்னாட்சி உரிமையின் வழி பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட இலங்கைத் தீவின் சிங்களவர்களும் தங்கள் கோட்டே கண்டி ஆட்சியின் இறைமைகளை மீளவும் பிரித்தானியக் காலனித்துவத்திலிருந்து பெறப்போராடிய நிலையில் இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான விடுதலைப்போராட்டத்தில் தனித்தன்மைகளுடன் கூட்டாண்மையுள்ள பங்காண்மைகளாகப் போராடியமை உலக வரலாறாக உள்ளது.

இதனை ஏற்ற 1920களின் நடுப்பகுதிச் சிங்களத் தலைவரான எஸ் டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க பிரித்தானியா கைப்பற்றிய இலங்கைத் தீவின் மூன்று அரசுக்களின் பகுதிகளும் மூன்று சபைகளாக உள்ள முறைமையில் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென அவற்றை யாப்பானய ரட்ட சபாவ, கண்டி ரட்டசபாவ, கோட்டே ரட்ட சபாவ என சிங்களத்தில் பெயரிட்டு கண்டி ரட்டசபாவினை கண்டியில் நடைமுறைப்படுத்தவும் முயன்றமை இலங்கைத் தீவின் வரலாறு. இலங்கையின் இடதுசாரிக்கட்சிகள் எல்லாமே அக்காலகட்டத்தில் தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்காகக் குரல் கொடுத்தமையும் இலங்கையின் வரலாறாக உள்ளது. 01.08. 1944 இல் பிரித்தானியக் கடற்படையின் திருகோணமலை வைத்தியராகக் கடமையாற்றிய தமிழகத்தின் தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ் பொன்னையா அவர்கள் காலனித்துவ நாடுகளின் செயலாளர் ஸ்டான்லி ஒலிவர் பிரெட்ரிக் ஜோர்ஜ்க்கு அனுப்பிய " "தமிழ் சிலோனும் மற்றைய சிலோனும்" (Tamil Ceylon and the rest of Ceylon) என்னும் விண்ணப்பத்தில் ஈழத்தமிழர்களுக்கான தனியாட்சியாக யாழ்ப்பாண அரசினதும் வன்னியரசினதும் நிலப்பரப்புக்களை சுதந்திரம் மூலம் வழங்கும் படி கோரியிருந்தமை இந்தியத் துணைக்கண்டத்தினரும் ஈழத்தமிழரின் இறைமைக்கு கோரிக்கை விடுத்த வரலாறாக உள்ளது.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் 03.11.1945 இல் காலனித்துவச் செயலாளர் கோலுக்கு சோல்பரி அரசியலமைப்பு குறித்து அனுப்பிய விரிவான விளக்கத்தில் " சிறுபான்மை இனத்தவருள் தமிழர்கள் மிகமுக்கியமானவர்கள். அவர்களே நாட்டின் மூலமான குடிகள். தீவின் ஆட்சியாளர்கள் தனிப்பட்ட அரசுக்களை அமைத்து இலங்கை முழுவதிலும் நீண்ட ஆண்டு காலம் அதிகாரம் செலுத்தியுள்ளனர். தமிழர்கள் சிங்களஅரசர்கள் தமிழர்களின் இனக்கூறு என்பதனைப் பெருமையுடன் நினைவு கூறுகின்றனர். பிரித்தானியர் ஆட்சியைத் தொடங்குவதற்கு முன் நூற்றாண்டு முழுவதும் ஆட்சியாளர்களாகத் தமிழர்களே இருந்தனர் ( Of the Minorities, Tamils from the most important entity, they were the original inhabitants and rulers of the Island, who establish independent Kingdoms and even exercised sway over the entire Island over a long period of years. They remember with pride that the Kings of the Singalese were largely of Tamil extraction and that for quite a century till the British occupation the ruling dynasty was wholly Tamil) என ஈழத்தமிழர்களின் இறைமையின் தொன்மையையும் தொடர்ச்சியையும் சட்ட ஆவணப்படுத்தினார். 15.01. 1946 இல் அகில இலங்கைத் தமிழக்காங்கிரசின் செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் அக்கால லேபர்கட்சியின் பிரதமர் அட்லி அவர்களுக்கு அனுப்பிய கோரிக்கையில் உலகில் சிறுதேச இனங்களின் தன்னாட்சி உரிமைக்குக் குரல் கொடுத்த லேபர் கட்சி ஏன் ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்தவில்லையெனக் கடிதம் அனுப்பியிருந்தார். இவைகள் எல்லாம் ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவில் இறைமையுள்ள மக்கள் என்பதற்கான வரலாற்று ஆவணங்கள்.

ஆயினும் பிரித்தானியா ஈழத்தமிழர்களின் இறைமையை தனியாக மதித்து ஈழத்தமிழர்களின் தன்னாட்சியை உறுதி செய்யாது, தான் செயற்கையாக உருவாக்கிய சிலோன் என்ற அரசின் சிலனிஸ் என்ற தேசியத்துக்கான சுதந்திரமாக 04.02. 1948 இல் சுதந்திரத்தை வழங்கியது. இதனால் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத அனைத்துலக நாடுகளின் மன்றத்தால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக ஈழத்தமிழர் தேசிய பிரச்சினை இன்று வரை தொடர்கிறது. சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் ஈழத்தமிழர்களின் விருப்பின்றி சோல்பரி அரசியலமைப்பின் மூலம் ஈழத்தமிழர்களின் இறைமையைப் பிரித்தானிய காலனித்துவ அரசு உட்படுத்தியது. ஆயினும் அக்கால ஈழத்தமிழர்களின் அரசியல் தலைவர்களின் எதிர்ப்பினை ஈடுசெய்யும் வகையில் சோல்பரி அரசியலமைப்பின் 29(2) இன் படி சிறுபான்மை மதங்களுக்கோ இனங்களுக்கோ எதிரான சட்டம் சிலோன் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால் பிரித்தானிய பிரிவிக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யலாமென அரசியலமைப்புப் பாதுகாப்பு பிரித்தானியாவால் வழங்கப்பட்டது.

இதனாலேயே 1948 முதல் 1956 வரை எட்டு ஆண்டுகள் பிரித்தானியாவிடமே சிலோனின் மீயுயர் இறைமை தொடர்ந்தும் உள்ளதெனச் சிலோனுக்கு தனி உறுப்புரிமை கொடுக்கக் கூடாதென ரஸ்யா இருமுறை பாதுகாப்புச் சபையில் தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தியது. 1964 இல் ரணசிங்கி என்பவரின் வழக்கில் பிரித்தானிய பிரிவிக் கவுன்சில் 1833ம் ஆண்டு நீதிச்சாசனத்தின் கீழேயே தொடர்ந்தும் சிலோனின் நீதித்துறை உள்ளதெனத் தீர்ப்பளித்த பின்னணியில் 1969 கோடீஸ்வரன் வழக்கில் சிங்களம் மட்டும் சட்டம் அரசியலமைப்புக்கு எதிரானதென பிரிவிக் கவுன்சில் அளித்த தீர்ப்பு ஈழத்தமிழர்களின் இறைமையின் மீயுயர் இறைமையாளராகப் பிரித்தானிய முடியே உள்ளதென்பதை உறுதிப்படுத்தியது. இதனாலேயே 22.05. 1972 இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி இடதுசாரிகள் கூட்டாட்சி, சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்தி தன்னிச்சையாக சிலோன் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியே நவரங்கலாவில் சிங்கள பௌத்த சோசலிசக் குடியரசை பிரகடனப்படுத்தி பிரித்தானிய அரசி மாண்பமை 2வது எலிசபேத் அவர்களினது தலைமை ஆளுநர் என்ற தலைமைத்துவத்திலிருந்து விலகி ஈழத்தமிழர்களை அரசற்ற தேசஇனமாக சிறிலங்கா மாற்றியது.

இதனால் ஈழத்தமிழர்களின் இறைமை 22.05. 1972 இல் ஈழத்தமிழர்களிடம் இயல்பாகவே மக்கள் இறைமையாக மீண்டதன் வரலாறே 1978 முதல் 2009 வரையான ஈழத்தமிழர்களின் நடைமுறையரசும் 2009 இல் அதனை சிறிலங்கா இனஅழிப்பால் ஒடுக்கியதும் இன்றுவரை ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை மீளுறதி செய்வதற்கு சனநாயக வழியில் போராடுவதுமான வரலாறு. இது எந்த வகையிலும் பிரிவினையல்ல. பிரிக்க இயலாத அடிப்படை மனித உரிமையான தன்னாட்சி உரிமைக்கான ஈழத்தமிழினத்தின் மனித உரிமைப்போராட்டம் என்பதனை ஈழத்தமிழர்களின் "இசட்" "அல்பா" இளையதலைமுறையினர்க்கு தாய்தந்தையரும் மற்றோரும் எடுத்துரைக்க வேண்டிய காலமிது என்பதனை இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது. இந்த வரலாற்றை ஈழத்தமிழர்கள் தெளிவாகத் தாம் தெளிந்து உலக மக்களுக்கு எடுத்துரைத்து இது குறித்த உலக நாடுகளின் தலைவர்களின் கருத்து என்ன என்பதனை அறிய வேண்டும். அப்பொழுதுதான் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினையென்றால் என்ன என்பதனை இன்றைய உலகம் அறிந்து அவர்களின் வெளியக தன்னாட்சி உரிமையினை அங்கீகரித்து அவர்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் உறுதிப்படுத்த உதவ முடியுமென்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**




## 22ஆவது திருத்தச் சட்டம்: தீர்க்கமாக நகரும் அநுரவின் அரசு

**விதுரன்**

இலங்கையின் அரசியல் மற்றும் நீதித்துறை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதித்துறையின் சுயாதீனத்திற்கும் இடையிலான முரண்பாடு உச்சக்கட்டத்தை எட்டியிருக்கிறது.

மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை முறையே 63 இலிருந்து 65 ஆகவும், 65 இலிருந்து 67 ஆகவும் உயர்த்தும் வகையிலும், பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை வரையறுக்கும் உள்ளடக்கங்களுடனும் 22ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைவை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளமை, நாட்டின் சட்ட வல்லுநர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் பௌத்த மதபீடங்கள் மத்தியில் கடுமையான கொந்தளிப்பையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.



'மாற்றம்', 'ஊழலற்ற ஆட்சி' மற்றும் 'சுயாதீனம்' என்ற சுலோகங்களை முதன்மைப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றிய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், பரந்தளவிலான கலந்தாலோசனைகளின்றி, தன்னிடம் உள்ள பாராளுமன்ற பெரும்பான்மை பலத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் மட்டுமே நம்பி இத்தகையதொரு தீர்மானத்தை அவசர அவசரமாக எடுத்திருப்பது, பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

பொதுவாக, அரசியலமைப்புத் திருத்தம் போன்ற நாட்டின் அடிப்படைச் சட்டக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள், அனைத்து பங்குதாரர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் பொதுமக்களின் நீண்டகாலக் கலந்துரையாடல்களுக்குப் பின்னரே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் மேற்படி ஜனநாயக நடைமுறைகளையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. நாட்டின் பிரதான பிரச்சினைகளான அதிகாரப்பகிர்வு, புதிய அரசியலமைப்பு உருவாக்கல் அல்லது மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து வலியுறுத்தப்படும்போதெல்லாம், 'பரந்துபட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும்' என்ற பதிலையே வழங்கும் அரசாங்கம், இந்த 22ஆவது திருத்தத்தின் போது மட்டும் எந்தவொரு முன் கலந்தாலோசனைகளுமின்றி தன்னிச்சையாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கிறது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடனான சந்திப்பில் கருத்துவெளியிட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அன்றைய தினம் காலையில் சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை வெளியிட்டமை திறந்த மனதுடனான உரையாடலுக்குத் தடையாக அமைந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும், அரசாங்கம் சட்டத்தரணிகள் சங்கத்துடனோ அல்லது நீதித்துறை சார்ந்த ஏனைய அமைப்புகளுடனோ எவ்வித முதற்கட்ட உரையாடலையும் நடத்தாமல், நேரடியாக வர்த்தமானியில் திருத்தத்தை வெளியிட்ட பின்னரே பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தது என்பதும், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீதே உரையாடலை நடத்த முற்பட்டது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

அதிகாரத்தின் மூலம் நகர்வுகளைத் தீர்மானித்து விட்டு, பின்னர் திறந்த மனதுடனான உரையாடல் பற்றிப் பேசுவது ஜனநாயகத்தின் உண்மையான பண்பாக முடியாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறியாதவர் அல்லர்.

அதேநேரம் இத்திருத்தத்தின் சட்டபூர்வத் தன்மை மற்றும் அரசியலமைப்பு ரீதியான பாதிப்புகள் மிகவும் ஆழமானவை. அரசியலமைப்பின் 3ஆம் பிரிவின்படி, இலங்கைக் குடியரசின் இறையாண்மை மக்களிடம் உரித்தாயிருப்பதுடன், 4(இ) பிரிவின் கீழ் மக்களின் நீதித்துறை அதிகாரம் அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஏ.வி.என் பெரோ எதிர் சட்டமா அதிபர் (இலக்கம் 30/2022) வழக்கு மற்றும் 2022ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூல வழக்குகளில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின்படி, நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறையின் தலையீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட சுயாதீனமான நீதித்துறை இல்லையெனில், மக்களின் இறையாண்மைக்கோ அல்லது உரிமைகளுக்கோ எவ்வித அர்த்தமும் இல்லாமல் போய்விடும் என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கியமாக, பதவியிலிருக்கும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதிலோ அல்லது பதவிக்காலத்திலோ நேரடி அல்லது மறைமுகப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தமும், நீதித்துறையின் சுயாதீனத்தைச் சிதைப்பதாக அமையும்.

இது மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்கும் செயலாகும் என்பதால், அரசியலமைப்பின் 3ஆம் பிரிவை நேரடியாக மீறுகிறது. எனவே, இத்தகைய திருத்தத்திற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் மட்டும் போதாது; அரசியலமைப்பின் 85(1) ஆம் பிரிவின் பிரகாரம் இது கட்டாயமாக சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற சட்டபூர்வமான கோரிக்கை வலுப்பெற்றுள்ளது.

நீதிமன்ற நடத்தை பற்றிய சர்வதேச பெங்களூர் கோட்பாடுகள் (2002) மற்றும் சர்வதேச நீதித்துறை சுயாதீனத் தரநிலைகளின்படி, நீதித்துறை என்பது உண்மையிலேயே பக்கச்சார்பின்றி இயங்குவது மட்டுமன்றி, அது பக்கச்சார்பற்றதாக பொதுமக்களின் பார்வைக்கு புலப்படவும் வேண்டும்

உண்மையான பக்கச்சார்பு நிலை நிரூபிக்கப்படாவிட்டாலும், நிறைவேற்றுத்துறை தனக்குச் சாதகமாகச் செயல்படக்கூடிய அல்லது குறிப்பிட்ட வழக்குகளைக் கையாளும் நீதிபதிகளுக்குச் சலுகை வழங்க முற்படுகிறது என்ற நியாயமான சந்தேகம் எழுந்தாலே, அது நீதித்துறை மீதான நம்பிக்கையை முழுமையாகத்தகர்த்து விடும்.

தற்போது உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு வழக்கு உட்பட பல முக்கிய அரசியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளன. இத்தகைய உணர்வுபூர்வமான சூழலில், பதவியிலிருக்கும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்த முனைவது, குறிப்பிட்ட நபர்களுக்குச் சலுகை வழங்கி அவர்களைத் தக்கவைக்கும் முயற்சியோ என்ற நியாயமான ஐயத்தைச் சமூகத்தில் தோற்றுவித்துள்ளது.

'இது தனிநபர்களை மையமாகக் கொண்ட சலுகை அல்ல, மாறாக நீதிமன்றக் கட்டமைப்பை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் முயற்சி' என ஜனாதிபதி அநுரகுமார தன்னிலை விளக்கம் அளித்த போதிலும், கால நேரம் மற்றும் சூழல் சார்ந்த சந்தேகங்களை அரசாங்கத்தால் முழுமையாகத் துடைத்தெறிய முடியவில்லை.

அரசாங்கத்தின் இந்த தன்னிச்சையான போக்கிற்கு நாட்டின் உயர்மட்ட பௌத்த மதபீடங்களான முப்பீட மாநாயக்க தேரர்களும் தமது கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளனர். நாட்டின் நீதி நிர்வாகத்தின் சுயாதீனத்தில் தீவிரமான சந்தேகங்களை தோற்றுவிக்கக் கூடிய இத்திருத்தத்தைத் தவிர்க்குமாறு மகாநாயக்க தேரர்கள் கூட்டாக ஜனாதிபதியிடம் கையொப்பமிட்டு கடிதம் அனுப்பியிருந்தனர்.

எனினும், அக்கடிதத்திற்கு அரசாங்கத்திடமிருந்து முறையான பதிலோ அல்லது குறைந்தபட்சம் கடிதம் கிடைத்தமைக்கான ஒப்புகையோ கூட வழங்கப்படவில்லை என மல்வத்து மகாநாயக்க திப்பொடுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் பகிரங்கமாகக் கவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதிக்கு அத்தகைய கடிதம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்று சில அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் பேசுவது தமக்கு வியப்பளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



நாட்டின் தலைவர்களுக்கு மகா சங்கத்தினர் அறிவுரை வழங்குவது மன்னர்கள் காலம் தொட்டு வரும் பாரம்பரியம் என்ற நிலையில், அரசாங்கம் அதனை அலட்சியப்படுத்துவதும், பாராளுமன்றத்தில் மறைக்க முயல்வதும் வெளிப்படைத்தன்மையற்ற ஆட்சியின் வெளிப்பாடாகும். (அரசாட்சியில் மாநாயக்கர்களின் தலையீட்டை கட்டுரையாளர் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளவில்லை)

'பொருத்தமற்ற சட்டங்களை இயற்றுவதன் மூலம் சமூகத்தில் அமைதியின்மையும், அரசு ஸ்திரமற்ற தன்மையும் ஏற்படுமானால், அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விலகி நிற்பதே தலைவரின் பொறுப்பு' என்ற மாநாயக்க தேரர்களின் எச்சரிக்கை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

மறுபுறம், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தமக்கே உரித்தான பாணியில் தமது நகர்வுகளை நியாயப்படுத்த முயல்கிறார். நீதித்துறை, புலனாய்வு அமைப்புகளில் நிலவும் கடுமையான ஆட்குறைபாடு, வழக்குகளின் தேக்கநிலை, கீழ் நீதிமன்றங்களில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவைப் பலப்படுத்துதல் போன்ற பரந்த நிர்வாகச் சீர்திருத்தங்களின் ஒரு அங்கமாகவே இத்திருத்தத்தை அவர் சித்தரிக்கிறார்.

இலஞ்ச ஆணைக்குழுவின் கிளைகளை அதிகரிப்பது, பொலிஸ் சேவைக்கு புதிதாக 10,000 பேரை

தொடர்ச்சி: பக்கம் 19



# வீரமுனையில் கோரப் படுகொலை! 36 ஆண்டுகளாகியும் நீடிக்கும் அவலம்!

பா.அரியநேத்திரன்

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை தொகுதியில் பூர்வீக அழகிய தமிழ் கிராமம் வீரமுனை. இந்த ஊருக்கு வடக்கே சொறிக்கல் முனையும் தெற்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் செழிப்பான வயல் நிலங்களும் அமைந்துள்ளன. வீரமுனை பகுதி தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். சம்மாந்துறைப் பிரதேசம் போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் தென் கடற்கரை யோரங்களிலிருந்து போர்த்துக்கேயரால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து குடியேறி வாழும் பிரதேசமாகும். இவ்விரண்டு பிரதேசங்களையும் இணைத்து சம்மாந்துறை நகரசபை அமைந்துள்ளது.



தொடர்சியாகவே முஸ்லிம்களால் இலக்கு வைத்து தாக்கப்படும் ஒரு தமிழ்க்கிராமமாகவே வீரமுனைக்கிராமம் இருந்தது. 1954ஆம் ஆண்டு தனிநபர்களுக்கிடையே நடைபெற்ற தகராற்றினால் சம்மாந்துறை முஸ்லிம்கள் ஒரு சிலரால் வீரமுனைப் பிரதேசம் தீயிட்டு எரிக்கப்பட்ட வரலாறும் உண்டு. இதனைத் தொடர்ந்து வீரமுனை மக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் கணபதிபுரம், வீரசோலை போன்ற புதிய கிராமங்களை உருவாக்கினார்கள்.

வீரமுனையில் 1990,ஆகஸ்ட் 12, கொடூரப்படு கொலைக்கு முன்னர் பல தமிழர்கள் பல வருடங்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்ட சம்பவங்கள் உண்டு.

**(1)15.03.1985 சதாசிவம் சண்முகராஜா - கமம் 23 வயது.**
**(2)25.10.1985 சின்னத்தம்பி நவரட்ணராசா - விவசாயம் 19, வயது.**
**(3) 08.09.1988 காளிக்குட்டி நவரெட்ணம் தொழிலாளி 23 வயது.**
**(4) 13.01.1989 சேதுமதி குணரட்ணம்- கமம் 33 வயது.**
**(5) 11.06.1990 கணபதிப்பிள்ளை கந்தசாமி - தொழிலாளி 27 வயது.**
**(6) 15.06.1990 பாலசந்திரபோஸ் சுபாஸ்சந்திரபோஸ் - தொழிலாளி 20 வயது.**
**(7) செல்லத்துரை விக்னேஸ்வரன் - கமம் 19 வயது.**
**(8) செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் - தச்சுத்தொழில் 19 வயது**
**(9) சிவராசா சதீஸ்குமார் - 19 வயது. (10) சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் - மாணவன் 18 வயது.**
**(10). சவரிமுத்து ரஞ்சன் - கமம் 22 வயது.**
**(11) சற்குணநாதன் ரஞ்சிதகுமார் - வியாபாரம் 22 வயது.**

1990 யூன் மாதம் மூன்றாம் வாரத்தில் இராணுவத்தினரால் வீரமுனைப் பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டது. சுற்றிவ ளைத்த இராணுவத்தினர் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களை அருகிலுள்ள வீரமுனைப்பிள்ளையார் ஆலயத் திற்குச் செல்லுமாறு பணித்தனர். ஆலயத்திற்குச் செல்லாது வீடுகளிலிருந்தவர்களை இராணுவத்தினர் சுட்டுப் பின்னர் வீட்டுடன் சேர்த்து எரித்தார்கள் வீதிகளில் நடமாடிய பலரும் இராணுவத்தினரால் சுடப்பட்டார்கள்,

20.06.1990 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு கனரக வாகனங்களில் வீரமுனைப் பிள்ளையார் கோயிலுக்கு வந்து இறங்கிய இராணுவத்தினர் வீரமுனைப் பிரதேசத்தில் பல பிரதேசத்திலுமிருந்து தஞ்சமடைந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைச் சுற்றிவளைத்து பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் கோயிலின் பின் வீதியில் ஒன்று சேருமாறு பணித்தார்கள், இவர்களில் அறுபத்தொன்பது இளைஞர்களை உறவினர்களின் முன்னி லையில் கைதுசெய்து அழைத்துச்சென்றனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சம்மாந்துறையில் உள்ள மார்ஜன் பாடசா லைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவர்களில் ஐம்பது பேர்வரை இராணுவத்தினரால் சம்மாந்துறையிலுள்ள மலைக்காட்டுக்குள் உயிருடன் எரிக்கப்பட்டனர். மிகுதிப் பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

29.06.1990 ஆம் திகதி மீண்டும் மக்கள் தங்கி யிருந்த கோயிலுக்கு வந்த இராணுவத்தினர் அங்கிருந்த வர்களில் பலரைக் கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்து சென்றார்கள். இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. வீரமுனைப் பிள்ளையார் கோயிலில் தஞ்ச மடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவ அச்சுறுத்தலிலிருந்து தப்புவதற்காக இடம் பெயர்ந்து காரைதீவு மகாவித்தியாலயத்தில் தங்கி இருந்தனர். அங்கு சுற்றி வளைத்த இராணுவத்தினர் பாடசாலையில் தங்கியிருந்தவர்களில் பதினொரு இளைஞர்களைக் கைதுசெய்து இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென் றார்கள். இவர்களிலும் எவருமே திரும்பி வரவில்லை.



05.07.1990 மீண்டும் பாடசாலைக்கு வந்த அதிரடிப் படையினர் அங்கிருந்த இளைஞர்கள் பதின்மூன்று பேரைக் கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். காரைதீவு மகா வித்தியாலயத்தில் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சித்திர வதைகளின் பின்னர் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப் பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களைத் தேடிச்சென்ற உறவினர்களும் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளனார்கள். இதனைத் தொடர்ந்து மக்கள் மீண்டும் வீரமுனைக்கு அருகிலுள்ள அகதி முகாமிற்குத் திரும்பி னார்கள்.

10.07.1990. அன்றும் வீரமுனை அகதிமுகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் பதினைந்து இளைஞர் களைக் கைதுசெய்து, இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று கடுமையான சித்திரவதைகளின் பின்னர் அவர் களையும் உயிருடன் எரித்தார்கள்.

16.07.1990 அன்று வீரமுனை அகதி முகாமிலிருந்து தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற பெண்களில் எட்டு இளம்பெண்கள் மல்வத்தையிலிருந்த இராணுவ சோதனை நிலையத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்கள். இவர்களும் இராணுவத்தினரால் பின்னர் எரிக்கப்பட்டனர்.

26.07.1990 இல் மீண்டும் வீரமுனை அகதிமுகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் முப்பத்திரண்டு இளை ஞர்களைக் கைது செய்தார்கள் இவர்களில் இருபத்துமூன்று பேர் பாடசாலை மாணவர்கள் இவர்களில் எவருமே திரும்பிவரவில்லை. 29.07.1990ல் வீரமுனைப் பிரதேசத்தில் தமது குடும்பத்தினருடன் பயணம்செய்து கொண்டிருந்த எட்டுப் பாடசாலை ஆசிரியர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள் இவர்களில் எவரும் திரும்பிவரவில்லை.

01.08.1990 ஆம் திகதி வீரமுனையிலுள்ள சவளக் கடை வீதி வழியாக நாவிதன் வெளிக்குச் சென்ற பதி னெட்டு பொதுமக்கள் இராணுவம், காவற்துறை மற்றும் ஊர்காவற்படையினரால் கைது செய்யப்பட்டார்கள். இவர்க ளில் ஒரு குழந்தையும் நான்கு பெண்களும் அடங்கு வர். இவர்கள் அனைவரும் வாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் துண்டுகளாக வெட்டப்பட்டு சவளக்கடை கோயிலுக்குள் போட்டு எரிக்கப்பட்டார்கள்.



இதன்தொடர்சியாகவே பாரிய இனப்படுகொலை யானது ஐக்கியதேசிய கட்சி அரசின் ஆர் பிரமதாச ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையி னர் மற்றும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய கொடூர தமிழினப்படுகொலையாகும்.

1990 யூன் நாலாம் வாரம் வீரமுனை அகதி முகாமிற் குக்கூரிய ஆயுதங்கள்துப்பாக்கிகளுடன்வந்த முஸ்லிம் குழு முகாமிலிருந்தவர்களை வெட்டியும் சுட்டும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பத்துப் பேர் உயிரிழந்தார்கள், பலர் காயமடைந்தார்கள். உயிரிழந்தவர்களில் கோயில் அறங்காவலர் தம்பிமுத்து சின்னத்துரை, இரண்டு குழந் தைகள், மூன்று பெண்கள் உள்ளடங்குவார்கள்.

இந்த முஸ்லிம்களின் தாக்குதலில் காயப்பட்டவர் கள் முதலில் சம்மாந்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் அனுமதிக்கப்படவி ல்லை. பின்னர் அம்பாறை வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டார்கள். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஏழு பேரில் மூன்று பேர் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டார்கள். மிகுதி நான்கு பேர் வீரமுனைக் குத்தப்பிவந்தார்கள் .வீரமுனையில் அறுநூறு வீடுகளும் வீரமுனைக்கு அருகிலுள்ள கிராமங்களான மல்வத்தை, மல்லிகைத்தீவு, நியூரவுண், கணபதிபுரம், வளாத்தப்பிட்டி ,சம்மாந்துறை ஆகிய கிராமங்களில் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்திரண்டு (1352) வீடுகளும் எரிக்கப்பட்டன.

1990,யூன் தொடக்கம் 1990,ஆகஸ்ட் வரை வீர முனை, காரைதீவு மற்றும் அயற்கிராமங்களிலுமாக இரு நூறிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள் அல்லது காணாமற் போனார்கள். இரண்டாயிரம் (2000) வீடுகள் வரை இராணுவத்தினரும், முஸ்லிம் குழுக்களும் இணைந்து எரித்தனர்.

சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த இனவன் செயல் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை பகுதிகளைச்

தொடர்ச்சி: பக்கம் 06

## வீரமுனையில் கோரப்... தொடர்ச்சி...

சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருட்டிண மிசன் பாடசாலை வளவினுள்ளும் 1990 யூன் மாதம் முதல் யூலை மாதம் வரை தஞ்சம் புகுந்திருந்தனர்.

இக்காலகட்டத்தில்தான் 1990,ஆகஸ்ட்,12 ம் நாளன்று இவற்றினுள் புகுந்த முஸ்லிம் ஊர்காவல்படைக் கும்பல் ஒன்று 400க்கும் அதிகமான தமிழ் பொதுமக்களை சுட்டும் வெட்டியும் தாக்கினர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 233 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதிகமானோர் படுகாயமுற்றனர். அவ்வேளையில் கடத்தப்பட்டோர் பற்றி எவ்விதத் தகவலும் இல்லை.

இந்த கொடூரப்படுகொலையில் கொல்லப்பட்டோரில் கிடைக்கப்பெற்ற விபரம்

01 இளையதம்பி கண பதிப்பிள்ளை.
02 இளையதம்பி செல்லம்மா.
03 இளையதம்பி சின்னப்பிள்ளை.
04 இராசையா பரமேஸ்வரி.
05 இராசையா சுபாசினி-மாணவி 16 வயது.
06 இராமநாதன் வாணிதாசன்.
07 இராமக்குட்டி பொன்னம்மா – 65 வயது.
08 இராசலிங்கம் அழகையா
09 இருளாண்டி அமிர்தலிங்கம் - மாணவன் 20 வயது.
10 யு.நடராஜா – 5 வயது குழந்தை.
11 நாகலிங்கம் தியாகராசா - மேசன் 31 வயது.
12 நாகலிங்கம் தவராசா.
13 நாகலிங்கம் மாரிமுத்து .
14 நமசிவாயம் தேவராசா .
15 நடராஜா உதயகுமார் – 7 வயது சிறுவன்.
16 நடராசா இளங்கோ.
17 நடராசா கிருபைராசா- தொழிலாளி 39 வயது.
18 நல்லதம்பி தவராசா.
19 நல்லதம்பி கோபால்.
20 நல்லதம்பி வடிவேல்.
21 நல்லதம்பி விக்னேஸ்வரன்.
22 க.கறுவல்தம்பி.
23 க.மாரிமுத்து.
24 க.அழகையா.
25 கனகரெட்ணம் யோகராசா.
26 கனகசபாபதி இளங்கோ .
27 கந்தையா நவரட்ணம் .
28 கந்தையா கணேசமூர்த்தி .
29 கந்தையா கணபதிப்பிள்ளை.
30 கந்தையா திசாநாயகம்.
31 கந்தையா தருமலிங்கம்.
32 கந்தக்குட்டி. பாக்கியராசா.
33 கந்தக்குட்டி. தருமலிங்கம்.
34 கந்தசாமி விஜயகுமார்.
35 கந்தவனம். கந்தசாமி
36 கந்தவனம். குமார்.
37 கந்தவனம் ஆறுமுகம்.
38 கந்தவனம் சோமசுந்தரம்.
39 காத்தமுத்து நாகேந்திரன்.
40 காத்தமுத்து சண்முகநாதன் - கமம் 40 வயது.
41 காளிக்குட்டி உலகநாதன்.
42 கதிர்காமத்தம்பி கருணாகரன்.
43 கதிரேசப்பிள்ளை சந்திரசேகர்.
44 கதிராமத்தம்பி இராசையா.
45 கதிரவேலு இராசலிங்கம் -கமம்.
46 கதிரவேல் இராஜேந்திரன் –
47 கதிரவேல் ராதிகாகிருஸ்னன்.
48 குமாரன் சின்னத்தம்பி.
49 குலேந்திரன் அஜந்தன் – 3 வயது குழந்தை.
50 கிருஸ்ணபிள்ளை கனகசூரியம்.
51 கிருஸ்ணபிள்ளை மோகனராஜ்.
52 கிருஸ்ணபிள்ளை சுந்தரலிங்கம்.
53 கிருஸ்ணபிள்ளை சிதம்பரமூர்த்தி
54 கிருஸ்ணபிள்ளை விஜயகுமாரி.
55 கிருபானந்தம் அமிர்தலிங்கம்.
56 கறுப்பையா சிவசாமி- கமம் 40 வயது.
57 கறுவல்தம்பி திருச்செல்வம்.
58 கணபதி குகநாதன் - தொழிலாளி 21 வயது.
59 கணபதி சந்திரன்.
60 கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி.
61 கணபதிப்பிள்ளை புஸ்பலதா.
62 கணபதிப்பிள்ளை பரசுராமன்.
63 கணபதிப்பிள்ளை தவராசா.
64 கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை.
65 கணபதிப்பிள்ளை சிவபாலன்- தொழிலாளி.
66 கணபதிப்பிள்ளை சிவலிங்கம் - சாரதி 49 வயது.
67 கணபதிப்பிள்ளை சண்முகநாதன்- தொழிலாளி 35 வயது.
68 கணபதிப்பிள்ளை சண்முகம்.
69 குணரெட்ணம் சிவகௌரி.
70 பாவில் சண்முகம்.
71 பாலன் மகேந்திரன்.
72 பாலன் கேதரன்.
73 பாலசுந்தரம்.
74 பாண்டியன் முனியாண்டி.
75 பத்மநாதன் விநாயமூர்த்தி.
76 பழனித்தம்பி மாணிக்கம் - 46 வயது.
77 பீ.ஜி.பியாந்தன்.
78 பீ.நந்தசிறி.
79 பி.மாரியான்.
80 பீ.சுசிபன்.
81 ரீ.மாதவன்.
82 ஐயாத்துரை மகேஸ்வரன்.
83 ஐயாத்துரை கோவிந்தன்.
84 கைலாயபிள்ளை தேவராசா மாணவி 8 வயது மாணவன்.
85 வை.இராசதுரை.
86 வை.பிரான்சிஸ்.
87 வைரமுத்து கற்பகம்.
88 வைரமுத்து கோபாலபிள்ளை.
89 வைரமுத்து தெய்வானை.
90 வைரமுத்து சிவம்.
91 தர்மலிங்கம் பொன்னுத்துரை.
92 தம்பிப்பிள்ளை இராசலிங்கம்.
93 தம்பிப்பிள்ளை கந்தையா.
94 தம்பிமுத்து கந்தையா- கமம் 77 வயது.
95 தம்பிமுத்து தயாபரன்.
96 தம்பிமுத்து சின்னத்துரை அறங்காவலர் 52 வயது
97 தம்பிமுத்து சிந்தாத்துரை- விவசாயம் 70வயது.
98 திருநாவுக்கரசு கணேசமூர்த்தி.
99 திருநாவுக்கரசு கருணாநிதி - விவசாயம் 18 வயது.
100 திருநாவுக்கரசு புஸ்பராசா.
101 தங்கநேசம் வேலுப்பிள்ளை.
102 தங்கராசா உதயசூரியன்.
103 தங்கராசா மனோகரன் 18 வயது.
104 தங்கராசா ராகினி.
105 மார்க்கண்டு தங்கவேல்.
106 மார்க்கண்டு யோகராசா.
107 மார்க்கண்டு சிவானந்தன் 29 வயது.
108 மாசிலாமணி தருமலிங்கம்.
109 மாசிலாமணி செல்வரட்ணம்.
110 மாசிலாமணி விநாயகமூர்த்தி விவசாயம் 26 வயது.
111 மாணிக்கம் பாலு.
112 மாணிக்கம் முருகேசப்பிள்ளை- கமம் 21
113 மாணிக்கம் ஜெகநாதன்.
114 முத்துலிங்கம் பாலபாஸ்கரன்.
115 முத்துலிங்கம் பரமேஸ்வரி ஆசிரியர் 32 வயது.
116 முத்துலிங்கம் செல்லையா.
117 முருகுப்பிள்ளை தங்கரெத்தினம்.
118 முருகுப்பிள்ளை தங்கராசா.
119 முருகுப்பிள்ளை ஞானம்மா.
120 மருதுரிஸ் செல்வராசா.
121 முருகேசு உதயகுமார்.
122 முருகேசு பாஸ்கரன்.
123 முருகேசப்பிள்ளை பத்மநாதன்.
124 மணியம் சோமசுந்தரம்.
125 ஆ.யோகநாதன்.
126 ஆர்.மயில்வாகனம் - 50 வயது.
127 அம்பாரக்குட்டி தியாகராஜா.
128 அழகையா இராமச்சந்திரன்.
129 அழகையா சாமித்தம்பி .
130 அழகையா சிவா.
131 அழகையா வரீசேனன்.
132 அழகையா ரகுநாதன் .
133 அரசரெத்தினம் கதிரமலை .
134 அரசரெட்ணம் மகேந்திரன் .
135 அரசரட்ணம் வள்ளியம்மை 58 வயது.
136 அருளப்பா இந்துருஜன்.
137 அருணாசலம் இராசரெட்ணம்.
138 அருணாசலம் சின்னப்பிள்ளை. 55 வயது
139 ஆறுமுகம் கந்தசாமி.
140 ஆறுமுகம் கலா.
141 ஆறுமுகம் தெய்வேந்திரம் - தச்சுத்தொழில் 34 வயது.
142 யோகராசா கிருபானந்தி.
143 கே.அழகையா.
144 கே.சிவலிங்கம் 48 வயது.
145 கே.ரவிச்சந்திரன்.
146 பொன்னம்பலம் இராஜேந்திரன்.
147 பொன்னம்பலம் இராசமணி.
148 பொன்னுச்சாமி கந்தசாமி - தொழிலாளி 24 வயது.
149 பொன்னுச்சாமி கணேசமூர்த்தி - ஆசிரியர் 26 வயது.
150 பொன்னையா உதயகுமார்.
151 பொன்னையா மகேஸ்வரன்.
152 பொன்னையா வள்ளியம்மை 67 வயது.
153 தேவநாயகம் மகேந்திரன்.
154 சொலமன் சகாயநாதன் .
155 செல்லையா கிருஸ்ணபிள்ளை.
156 செல்லையா அசோகன் - மின்சாரசபை ஊழியர் 24 வயது
157 செல்லையா சோமசுந்தரம்.
158 செல்லையா வடிவேல.
159 செல்வன் சிவநாதன்.
160 செல்லன் அருளம்மா.
161 செல்லத்துரை தர்மலிங்கம்.
162 செல்லத்தம்பி கருணாநிதி - கடதாசி ஆலை ஊழியர் 24 வயது.
163 வெள்ளையன் - மாணவன் 7 வயது.
164 வேல்முருகு முத்து.
165 வேலுப்பிள்ளை நாகேந்திரன்.
166 வேலுப்பிள்ளை காசியானந்தன்.
167 வேலுப்பிள்ளை கதிரமலை.
168 வேலுப்பிள்ளை திருச்செல்வம் தொழிலாளி 22 வயது.
169 வேலுப்பிள்ளை யோகராசா.
170 வேலுப்பிள்ளை தெய்வநாயகம் .
171 வேலுப்பிள்ளை சந்திரகுமார்.
172 வேலுப்பிள்ளை சுதாகரன்.
173 ரெட்ணம் செல்வராசா - கமம் 20 வயது.
174 சு.மனோகரன்.
175 சந்திரன் அருளப்பன்.
176 சுப்பிரமணியம் நடேஸ்வரன்.
177 சாமித்தம்பி கணபதிப்பிள்ளை.
178 சாமித்தம்பி குணசீலன்.
179 சாமித்தம்பி தங்கவேல் - மாணவன் 17 வயது.
180 சாமித்தம்பி சுப்பிரமணியம்.
181 சதாசிவம் புவனேந்திரன்.
182 சதாசிவம் தேவராசா - விவசாயம் 18 வயது.
183 சின்னத்துரை காளிக்குட்டி.
184 சின்னத்தம்பி குகதாஸ்.
185 சின்னத்தம்பி திலகேஸ்வரி.
186 சின்னத்தம்பி அண்ணாதாசன்.
187 சின்னத்தம்பி வன்னியசிங்கம்.
188 சின்னதம்பி ரவிச்சந்திரன் - சாரதி 22 வயது.
189 சின்னையா முத்தையா.
190 சீனித்தம்பி இந்திரன்.
191 சீனித்தம்பி தவசீலன்.
192 சீனித்தம்பி ஜெயசீலன்.
193 சீனித்தம்பி மாரிமுத்து.
194 சீனித்தம்பி வேல்முருகு.
195 சித்தாத்துரை காளிக்குட்டி - கமம் 47 வயது.
196 சித்தாத்துரை செல்வராசா.
197 சித்தாத்துரை சம்பந்தன் - விவசாயம் 24 வயது.
198 சித்தாத்துரை தவராசா.
199 சித்தாத்துரை தேவராசா.
200 சித்தாத்துரை வேவி.
201 சித்தாத்துரை சம்மந்தன்.
202 சித்திரவேல் பத்மநாதன்.
203 சிவனடியார் ரவிச்சந்திரன்.
204 சிவானந்தன் இந்திரன்.
205 சிவானந்தன் பாலச்சந்திரன்.
206 சிவானந்தன் ரவிச்சந்திரன்.
207 சிவஞானம் கணேசன் - விவசாயம் 24 வயது
208 சிவசம்பு தேவராசா.
209 சங்கரப்பிள்ளை அற்புதராசா.
210 சங்கரப்பிள்ளை வில்வராசா - விவசாயம் 20 வயது.
211 சாலமன் மோகனராஜன் சகாயநாதன் - வியாபாரம் 22 வயது.
212 சண்முகம் இளஞ்சேகர் - மாணவன் 10, வயது.
213 விநாயகமூர்த்தி பாலு.
214வீரக்குட்டி கிட்ணன்.
215 வீரபாண்டியன் ஜமுனா.
216 வள்ளியம்மை.
217 ராமன்.
218 ரவி தில்லையம்மா.
219 ஏ.ஈ.தேவதாசன்.
220 ஏ.கனகரெத்தினம்.
221 ஏ.பரமநாதன்.
222 ஏ.முருகேசபிள்ளை.
223 ஏ.சுபாசினி - மாணவி 17 வயது.
224 ஏ.சின்னப்பிள்ளை 50 வயது.
225 ஏ.சித்திரவேல்.
226 ஏ.சிவநேசன்.
227 ஏ.ஏ.சண்முகவேல்.
228 எஸ்.மாணிக்கம் 35 வயது.
229 என்.இராசன்.
230 என்.சந்திரகுமார்.
231 ஏகாம்பரம் தருமலிங்கம்.
232 எம்.முத்துக்குமார்.
233 எம்.அருள்மணி .

இந்த பட்டியலில் உள்ளவர்களை விட இன்னும் பலர் கொல்லப்பட்டபோதும் அவர்களுடைய பெயர் விபரங்கள் பெறமுடியவில்லை.

படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர்களை கவனித்தால் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் குடும்பமாக வும், மாணவர்கள், ஆசிரியர்கள்,அரச தொழிலாளர்கள், விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள், குழந்தைகள், சிறுவர் கள். இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள், கற்பிணித் தாய்மார்கள் என பலரும் அடங்கலாக இதில் படுகொலை செய்யப்பட்டனர்.

2026, ஆகஸ்ட், 12, ல் 36, ஆண்டுகள் கடந்தும் இது வரை நீதி இல்லாத தமிழினப்படுகொலைகளில் இதுவும் ஒன்றாகும்.

• • •




தீபச்செல்வன்

செஞ்சோலை இனப்படுகொலையின் வாயிலாக, ஒரே நாளில், சில மணித்துளிகளுக்குள் ஒருவரல்ல, இருவரல்ல, 53 மாணவிகளை இனப்படுகொலைக்குப் பலிகொடுத்தது ஈழ தேசம். சிங்களப் பேரினவாதத்தின் இனக்கொலைப் பசிக்கு எமது தேசத்தின் இளம் குருத்துக்கள் வாரிக்கொடுக்கப்பட்ட அந்தத் துயரத்தை காலம் கடந்தும் மறக்க முடியவில்லை. அந்தக் குழந்தைகளின் குருதி சிந்தப்பட்ட எம் தாய்மண் இன்றும் அவர்களின் பெயர்களைத் தேடுகிறது. இனப் படுகொலையாலும் போராட்டத்தாலும் இளையவர்களின் குருதி சிந்திய இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் தமது மண்ணுக்காகவும் அதன் மாண்புக்காகவும் வாழ வேண்டிய பொறுப்புண்டு.



ஒகஸ்ட் 14, செஞ்சோலைப் படுகொலையின் நினைவு நாள். ஈழத் தமிழர்களின் வரலாற்றில் செஞ்சோலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் மறக்க முடியாத கறுப்புப் பக்கமாக உள்ளது. 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14 ஆம் திகதி வழக்கம்போலவே பொழுது புலர்ந்தது. எதிர்காலத்தின் கனவுகளைச் சுமந்த பள்ளி மாணவிகள் தலைமைத்துவ மற்றும் முதலுதவிப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் சில நிமிடங்களில் அந்தப் பிஞ்சு உயிர்கள் விமானக் குண்டுகளுக்கு இரையாகின. அது ஒரு சாதாரண தாக்குதல் அல்ல. ஒரு தலைமுறையின் எதிர்காலத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்.

2006 ஒகஸ்ட் மாத ஆரம்பத்திலேயே வடக்கு மக்கள் மீண்டும் ஒரு கொடிய போரின் இருளுக்குள் தள்ளப்பட்டிருந்தனர். வடக்கிற்கான பாதைகள் மூடப்பட்டன. மக்கள் உணவு, மருந்து உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காகவே போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணம் தொடக்கம் வன்னி வரை மக்கள் அச்சத்திலும் இருட்டிலும் பசியிலும் வாழ்ந்தார்கள். அந்தச் சூழலில்தான் செஞ்சோலையில் இருந்த மாணவிகள் மீது அரச விமானப்படை குண்டுகளைப் பொழிந்தது.

### பாடசாலைகள்மீது குண்டுவீச்சு

சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்திலும் வடக்கு கிழக்கில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகளின் நிலைகள் என்று கூறிக்கொண்டு மக்கள் வாழ்ந்த பகுதிகள்மீதும், வீடுகள்மீதும், பாடசாலைகளுக்கு அருகிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு தாக்குதலுக்கும் பின்னால் ஒரு காரணம் கூறப்பட்டது. ஆனால் அந்தக் காரணங்களுக்குள் சிக்கியது சாதாரண மக்களின் உயிர்கள்தான்.

எல்லாமே புலிகளின் முகாம்கள் என்ற அரசின் விளக்கத்தைப் பதிவு செய்துகொண்டிருந்த சர்வதேச அமைப்புகளும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இருந்தன. ஆனால் தாக்குதல்களைத் தடுக்க முடியவில்லை. சர்வதேச கண்காணிப்பும் இருந்தது. சமாதான ஒப்பந்தமும் இருந்தது. இருந்தும் தமிழர் வாழ்விடங்கள் பாதுகாப்பாக இருக்கவில்லை. அந்தப் பின்னணியில்தான் செஞ்சோலை நடந்தது.

### இவர்களா பயங்கரவாதிகள்?

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியுடன் தலைமைத்துவம் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டது. அந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவிகள்மீதுதான் அரச விமானங்கள் குண்டுகளை வீசின. ஒரு கணத்தில் பிஞ்சு உடல்கள் சிதறின. சுமார் 50 மாணவிகள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். காயமடைந்த மாணவிகள் வவுனியா உள்ளிட்ட வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிலர் மேலதிக சிகிச்சைக்காக கண்டிக்கும் கொண்டு செல்லப்பட்டனர். உயிர் தப்பியவர்கள்கூட அச்சுறுத்தல்களுக்கும் விசாரணைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கம், கொல்லப்பட்டவர்கள் மாணவிகள் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் புலிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் கூறி அந்தப் படுகொலையை நியாயப்படுத்த முயன்றது. அந்தப் பிஞ்சு முகங்களைப் பார்த்து எப்படி பயங்கரவாதிகள் என்று சொல்ல முடியும்?

பாடசாலை மாணவிகளாகப் பயிற்சிக்காகச் சென்றவர்களை விமானக் குண்டுகளால் கொன்று விட்டு, அவர்களின் மரணத்திற்கே குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட கொடுமைதான் செஞ்சோலை. பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் ஐ.நா. அதிகாரிகளும் சம்பவத்தை ஆராய்ந்தனர். அங்கு கூடியிருந்தவர்கள் பாடசாலை மாணவர்கள் என்றும், தலைமைத்துவப் பயிற்சிக்காக அவர்கள் ஒன்றுகூடியிருந்தபோதே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பதிவுகள் வெளிவந்தன.

### காயப்பட்டவர்களைச் சந்தித்தேன்


இப்படுகொலை இடம்பெற்று ஓராண்டுக்குப் பின்னர் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிக்காக ஒரு ஆவணப்படம் தயாரிக்கும் பணியில் அந்த மாணவிகளின் வீடுகளுக்குச் சென்றேன். பெற்றோர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்தேன். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உயிர் தப்பிய மாணவர்கள் என பலரையும் சந்தித்தபோது செஞ்சோலை அவர்களுக்குள் ஏற்படுத்தியிருந்த காயத்தின் ஆழத்தை உணர முடிந்தது.

காலில் பெரும் காயமடைந்திருந்த ஒரு மாணவி பேச முடியாமல் அழுத காட்சி இன்றும் என்னை விட்டு அகலவில்லை. அந்த மாணவியும் பின்னர் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டார். செஞ்சோலைப் படுகொலை தொடர்பான ஆவணப்படத்தில் வாக்குமூலம் அளித்த மூன்று மாணவிகளும் பின்னர் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தார்கள்.

அவர்கள் 53 பேரும் நன்றாகப் படிக்கக்கூடிய மாணவிகள். அவர்களுக்குக் கனவுகள் இருந்தன. உயர்கல்வி கற்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. சமூகத்தில் உயர்ந்த இடங்களை அடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் இன்று வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், சமூகத் தலைவர்களாகவும் எம்மோடு இருந்திருப்பார்கள். ஆனால் அவர்களது எதிர்காலம் ஒரு விமானக் குண்டுடன் முடிக்கப்பட்டது.

### வாய்மூடி இருந்த சர்வதேசம்

செஞ்சோலைப் படுகொலைக்கு உலகம் உரிய பதிலை அளிக்கவில்லை. ஒரு நாட்டின் விமானப்படை பாடசாலை மாணவிகள்மீது குண்டுகளை வீசி 53 உயிர்களைப் பறித்தபோதும் சர்வதேச சமூகத்தின் குரல் போதியளவு எழவில்லை. அந்த மௌனம் பின்னர் நடந்த இன்னும் பெரிய அழிவுகளுக்கு ஒரு துணிவாக அமைந்தது.



மாணவர்களின் உயிர்களைப் பாதுகாக்க முடியாத சமூகம் அவர்களின் எதிர்காலத்தையும் பாதுகாக்க முடியாது. செஞ்சோலைக்குப் பின்னரும் பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். மக்கள் கொல்லப்பட்டார்கள். இறுதியில் முள்ளிவாய்க்காலில் ஒரு மக்கள் கூட்டமே முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டது. செஞ்சோலை ஒரு தனித்த சம்பவம் அல்ல. அது முள்ளிவாய்க்காலுக்கு சென்ற இருண்ட பாதையின் ஒரு முக்கியமான அடையாளம்.

### நீதிக்காக ஏங்கும் ஈழ நிலம்

தமிழ் மக்கள் கல்விக்காகப் போராடினார்கள். வேலை வாய்ப்புக்காகப் போராடினார்கள். சம உரிமைக்காகப் போராடினார்கள். ஆனால் எமது பிள்ளைகள் கல்வி கற்கச் சென்ற பாடசாலைகளிலேயே குண்டுகளுக்கு இரையாகினர். சந்திரிகா அரசின் காலத்தில் நாகர்கோவில் பாடசாலை மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 39 மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தபோதும் செஞ்சோலையில் 53 மாணவிகள் கொல்லப்பட்டார்கள். ஒரு தலைமுறையின் கல்விக்கூடங்களே தமிழர்களுக்கு பாதுகாப்பற்ற இடங்களாக மாற்றப்பட்டன.

இத்தகைய படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைத்திருந்தால், பின்னர் நிகழ்ந்த மாபெரும் அழிவுகளுக்கு முன்னரே உலகம் ஒரு எச்சரிக்கையை முன்வைத்திருக்க முடியும். ஆனால் உலகம் அமைதியாக இருந்தது. அந்த அமைதி தமிழர் மண்ணில் மேலும் குருதி சிந்துவதற்கான இடத்தை உருவாக்கியது. இன்று

தொடர்ச்சி: பக்கம் 20




கரிகாலன்

மனித உரிமைகளும் மனித மாண்புகளும் பாரதூரமாக மீறப்பட்ட வரலாற்றைக் கொண்ட சமூகங்களில், மனிதப் புதைகுழிகள் என்பவை வெறும் எலும்புக்கூடுகளின் புதைவிடங்கள் அல்ல.

அவை அதிகார அடக்குமுறைக்கும், சொல்லொணாத் துயரங்களுக்கும் ஊமைச் சாட்சிகளாக நிற்கும் வரலாற்றுத் தடயங்களாகும். சர்வதேச ரீதியில் பொஸ்னியா, ருவாண்டா, குவாத்தமாலா மற்றும் அர்ஜென்டினா போன்ற நாடுகளில் இனவழிப்புகள் இடம்பெற்றள.

இதன்போது நிகழ்ந்தேறிய போர்க் குற்றங்களால் ஆயிரக்கணக்கான மனிதர்கள் படுகொலை செய்யப்பட்டு மனிதப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டமை உலகறிந்த வரலாறு.



ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள 'காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம்' நெருங்கி வரும் இவ்வேளையில், இலங்கையின் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும், மனிதப் புதைகுழிகள் வழியே வெளிப்பட்டு வரும் அதிர்ச்சியூட்டும் உண்மைகளும் உலகத்தின் கவனத்தை மீண்டும் ஈர்த்துள்ளன.

குறிப்பாக, யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் இடம்பெற்று வரும் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் 100 நாட்களைக் கடந்துள்ள நிலையில், அங்கு மூன்றாம் கட்ட அகழ்வுகளின் போது 540க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும், மனித உரிமை ஆர்வலர்களையும் உறைய வைத்துள்ளது.

1990களின் பிற்பகுதியில் செம்மணியில் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டதாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள், இன்று அறிவியல் பூர்வமான சான்றுகளுடன் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

செம்மணி மட்டுமன்றி, மன்னார் ச.தொ.ச., கொக்குத்தொடுவாய், குருக்கள்மடம், மாத்தளை, சம்பூர் மற்றும் கொழும்பு என்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டு வருவது, இலங்கையின் ஆழமான போர்க்கால வரலாற்று இனஅழிப்பை அம்பலப்படுத்துகிறது.

இவ்வாறானதொரு பெருந்துயரத்தின் பின்னணியில், அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்திய வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நிராகரிப்பட்டுள்ள காணாமல்போனவர்களுக்கான அலுவலகம், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளில் கண்டெடுக்கப்படும் மனித எச்சங்களுக்கும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் தொடர்புகள் இருக்கும் என்ற நம்பிக்கையில் தாம் தடயவியல் மற்றும் தொல்லியல் பணிகளை அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், சர்வதேச விசாரணைகளை மக்கள் கோரிய போதிலும், இதனை உள்ளூர் பொறிமுறையினூடாக விரைவான சிறந்த தீர்வுகளாக வழங்க முடியுமா என்பதை ஆராய்ந்து வருவதாகவும் அதன் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், தம்மிடம் இற்றை வரையான 8 வருடகாலத்தில் காணாமல்போனோர் தொடர்பில் 23,352 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் பொலிஸ் மற்றும் முப்படைகளைச் சேர்ந்தவர்கள் பற்றிய முறைப்பாடுகளையும் இரட்டைப் பதிவுகளையும் நீக்கியதன் பின்னர் எஞ்சியிருந்த 14,966 முறைப்பாடுகளில் 9,072 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இதுவரையில் காணாமல்போன 31 பேர் உயிருடன் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்துள்ள போதிலும், அவர்களது தனியுரிமையைக் கருத்திற்கொண்டு மேலதிக விபரங்களை வெளிப்படுத்தமுடியாது என்றும் 7,726 முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து, சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு 200,000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவை வழங்குமாறு இழப்பீட்டு அலுவலகத்துக்குப் பரிந்துரைத்துள்ளதாகவும் கூறியுள்ளனா.

தமது பரிந்துரைகளின்படி, 5,427 குடும்பங்களுக்கு அக்கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பதுடன், எஞ்சிய குடும்பங்களுக்கான கொடுப்பனவு அடுத்துவரும் சில மாதங்களில் வழங்கப்படும். அத்தோடு இதுவரையான காலமும் 31 பேருடன் இயங்கிவந்த அலுவலகத்துக்குப் புதிதாக 69 ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவர்களில் 41 பேர் ஏற்கனவே இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றும் தன்னிலை விளக்கம் அளித்துள்ளதோடு எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்கில் யாழ்ப்பாணத்திலும், தெற்கில் மாத்தறையிலும் நினைவுகூரல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இருப்பினும், காணாமல்போனவர்களுக்கான அலுவலகத்தின் இந்தக் கூற்றுகளையும் அணுகுமுறையையும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களும் தமிழ் சமூகமும் முற்றாக நிராகரித்துள்ளனர். இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைகள் என்பவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதற்காக அன்றி, குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்கும், சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்கும் அரசாங்கங்களால் உருவாக்கப்பட்ட 'காலத்தைக் கடத்தும் கருவிகளே' என்பதை கடந்தகால அனுபவங்கள் நிரூபித்துள்ளன.

குற்றவியல் விசாரணை அதிகாரமோ, குற்றவாளிகளைத் தண்டிக்கும் வல்லமையோ இல்லாத ஒரு கட்டமைப்பால் எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தர முடியும் என்ற நியாயமான கேள்வியை உறவினர்கள் எழுப்புகின்றனர். மனிதப் புதைகுழிகளில் சிறுபிள்ளைகளின் எலும்புக்கூடுகளும், துப்பாக்கிச் தோட்டாக்கள் மற்றும் இராணுவச் சீருடைகளின் பாகங்களும் கண்டெடுக்கப்படும் சூழலில், அதனை வெறும் 'காணாமல்போனோர் பற்றிய ஆய்வாக' சுருக்குவது, இனப்படுகொலை மற்றும் போர்க்குற்ற மறைப்பிற்கான முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.

அர்ஜென்டினாவில் 'பிளாசா டி மேயோவின் தாயார்கள்' (Mothers of the Plaza de Mayo) தங்களின் காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளுக்காக தசாப்தங்களாக வீதியில் இறங்கிப் போராடி சர்வதேச நீதியைப் பெற்றது போல, இலங்கையிலும் தமிழ் தாய்மார்களும் உறவினர்களும் எவ்வித அச்சுறுத்தல்களுக்கும் வளையாமல் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிவதற்காக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதனடிப்படையில் தாயகச் செயலணி அமைப்பின் ஏற்பாட்டில் 'நீதியின் ஓலம்-2' எனும் தலைப்பில் வடக்கில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்ட மக்களுக்கும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் சர்வதேச நீதியைக் கோரியும், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தியும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழி அவலம் குறித்தும், தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இப்போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கெடுத்து தங்களின் பலமான எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றனர்.



உள்ளூர் பொறிமுறைகள் மீது எவ்வித நம்பிக்கையும் இல்லை என்பதையும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறை மூலமாக மட்டுமே தமக்கு உண்மையும் நீதியும் கிடைக்கும் என்பதையும் அவர்கள் உரக்கச் சொல்லி வருகின்றனர்.

உலகளவில் பொஸ்னியாவில் இடம்பெற்ற ஸ்ரெப் ரெனிக்கா படுகொலைகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் எவ்வாறு உண்மைகளை வெளிக்கொண்டுவந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுத்ததோ, அதேபோன்று இலங்கையிலும் சர்வதேசத்தின் நேரடிக் கண்காணிப்பிலான தடயவியல் மற்றும் அகழ்வாராய்ச்சிகள் மட்டுமே உண்மையான குற்றவாளிகளை அடையாளம் காண உதவும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளின் தொழில்முறை உதவிகளை உள்ளூர் அமைப்புகள் பெற முற்பட்டாலும், அரசியல் தலையீடுகளும் அதிகார வர்க்கத்தின் அழுத்தங்களும் விசாரணைகளின் சுயாதீனத்தை சீர்குலைத்து விடுவதாகவே வரலாற்று அனுபவங்கள் காட்டுகின்றன.

மன்னார் சதொச புதைகுழியின் கார்பன் பரிசோதனை முடிவுகள் மற்றும் கொக்குத்தொடுவாய் அகழ்வாராய்ச்சி முடிவுகள் அறிவிக்கப்பட்ட விதத்தில் நிலவிய வெளிப்படைத்தன்மையற்ற தன்மை இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

ஆகஸ்ட் 30 காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் நெருங்கும் இந்த தருணத்தில், தமிழ் தாயார்களின் 'நீதியின் ஓலம்' என்பது இலங்கை அரசாங்கத்தின் காதுகளை எட்டுகிறதோ இல்லையோ, சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியை உலுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

மனிதப் புதைகுழிகளில் இருந்து தோண்டியெடுக்

தொடர்ச்சி: பக்கம் 20




*** ஒஸ்லாப் ஐ.நா சாட்சியப் பொறிமுறை 2027 மார்ச்சில் நிறைவு! இது எந்தக் கட்சிக்குத் தெரியும்?**
*** செப்டம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர்!**
*** பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய தமிழரசுக் கட்சி!**

**அ.நிக்ஸன்**–பத்திரிகையார்

செம்மணி - அரியாலை சிந்துபாத்தி பொது மயானப் பகுதியில் இருந்து இதுவரை 540-இற்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகளும், எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் பேரினவாதப் போர் மௌனிக்கப்பட்ட பின்னரான சூழலில், வடக்கு-கிழக்கு தாயகப் பிரதேச எங்கும் தொடர்ச்சியாகப் பல மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.



ஆனால், இதுவரை உரிய சர்வதேச தரத்திலான விசாரணைகள் எதுவுமின்றி, இந்த இன அழிப்புச் சாட்சியங்கள் வெறுமனே கடந்துபோகும் பேசுபொருளாக மாத்திரமே திட்டமிட்டு சுருக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மிகச்சிறந்த உதாரணம், மன்னார் சதோசா மனிதப் புதைகுழியாகும். அங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அமெரிக்காவிற்கு கார்பன் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனால், அவை மன்னர் காலத்து பழமையான எலும்புகள் எனக்கூறி, அநீதியை மூடிமறைக்கும் வகையில் அந்த அறிக்கை அமைந்திருந்தது. பேராசிரியர் ராஜ் சோமதேவ போன்ற சிங்கள அகழ்வாராய்ச்சியாளர்கள் இந்த அமெரிக்க அறிக்கையை ஏற்க மறுத்தனர்.

இந்த அறிவியல் பூர்வமான முரண்பாடுகளினால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டக் கோரி மன்னார் நீதிமன்றத்தில் இன்றும் சட்டப் போராட்டம் தொடர்கிறது.




அதேநேரம், இலங்கை ஒற்றையாட்சி அரசின் உள்ளக நீதித்துறை மற்றும் விசாரணைப் பொறிமுறைகள் மீது தங்களுக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மிகத் தெளிவாகவும் பகிரங்கமாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இப் பின்னணியில், ஈழத் தமிழர்களின் குருதி காய்வதற்குள் தமிழ்த் தேசியக் கட்சிகள் மௌனம் காப்பது ஏன் என்ற பலத்த கேள்வி எழுகிறது? இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி போன்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த இன அழிப்புச் சாட்சியங்கள் குறித்துப் பாராமுகமாக இருந்துவிட்டு, தற்போது மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டணிகளை அமைத்துச் செயற்படுவதாக அறிவித்திருப்பது வேடிக்கை.

சர்வதேசப் பொறிமுறையை வலியுறுத்த வேண்டிய தமிழ்த் தலைமைகள், உலகமே நம்பிக்கையற்றது என்று சான்றளித்த இலங்கை ஒற்றையாட்சி அரசின் உள்ளக விசாரணைப் பொறிமுறைகளை மறைமுகமாக அங்கீகரிப்பது போன்ற தொனியில் அரசியல் செய்வது எந்த வகையில் நியாயமானது?

எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை குறித்த வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்காக ஐநா அமைத்துள்ள ‘ஒஸ்லாப்’ (OSLAP - Office of the High Commissioner for Human Rights Sri Lanka Accountability Project) எனப்படும் சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் கால அவகாசம் 2027 மார்ச்சில் நிறைவடையவுள்ளது.



ஆகவே, சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கிய கால அவகாசம் முடிவடைவதற்குள், உள்நாட்டில் ஏதோவொரு முன்னேற்றம் நடப்பது போன்றதொரு பொய்யான விம்பத்தைக் காண்பிக்க வேண்டிய கட்டாயம் அநுர அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அதற்காகவே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளும், திடீர் கைதுகளும், மரண தண்டனைத் தீர்ப்புகளும் அவசர அவசரமாக வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், போதைப்பொருள் ஒழிப்பு என்ற பெயரிலான கைதுகள், விசாரணைகள், சிறைச்சாலை மோதல்கள் மற்றும் அவை தொடர்பான கண்துடைப்பு விசாரணைகள் எனப் பல சர்வதேசத் திசைதிருப்பல் நகர்வுகள் தற்போதைய சூழலில் மிகக் கச்சிதமாக அரங்கேறி வருகின்றன.

அநுர அரசாங்கத்தின் சமகால அரசியல் அரங்கு மிக நுட்பமாக, அதேவேளை ஈழத்தமிழர்களை நோக்கி ஆபத்தானதொரு புவிசார் அரசியல் சதுரங்க ஆட்டத்தைக் காண்பித்து நிற்கிறது.

இந்த ஆபத்தான நுட்பம் எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சிக்கும் புரியவில்லையா? ”சுயநிர்ணய உரிமை” என்ற நியாயமான அரசியல் கோரிக்கைகளை நசுக்கவும், சர்வதேச பொறுப்புக் கூறலில் இருந்து தற்காத்துக் கொள்ளவும் ‘தேசிய பாதுகாப்பு’ என்ற காரணி மீண்டும் ஒருமுறை அரசியல் முதலீடாக்கப்பட்டுள்ளது.

ஏட்டிக்குப் போட்டியாக அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் ”தேசிய பாதுகாப்பு” என்பதைக் கவசமாக எடுத்துக்கொண்டு, இலங்கை ஒற்றையாட்சி அரசு என்ற கட்டமைப்பைப் பாதுகாக்கக்கூடிய அத்தனை காரியங்களையும் செய்து முடித்துள்ளனர்.

குறிப்பாக, காணி அபகரிப்பு, பௌத்தமயமாக்கல், தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாத்தல் போன்ற விவகாரங்கள் இலங்கை அரசின் சட்டரீதியான செயல் திட்டங்களாக மாறியுள்ளன.

இந்த விவகாரத்தில் சிங்கள அரசியல் தலைவர்களிடையே கட்சி அரசியல் வேறுபாடுகள் எதுவுமே இல்லை ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியோ, தங்களின் சொந்தக் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பாக ஒற்றையாட்சி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து விட்டுத் தீர்ப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது.



இத்தகைய தரங்கெட்ட அரசியல் இலட்சணத்தை வைத்துக்கொண்டு எப்படி சர்வதேச நீதியைக் கோர முடியும்? செம்மணி பற்றி எப்படிப் பேச முடியும்? அடுத்த ஆண்டு முடிவடையவுள்ள ஒஸ்லாப் சாட்சியப் பொறிமுறை பற்றியும், அடுத்து நகர்த்தவுள்ள சர்வதேச விசாரணை பற்றியும் தமிழரசுக் கட்சியால் எப்படி கோர முடியும்?

தற்போது எதிர்க்கட்சிகளாக உள்ள, ஆனால் முன்னைய அரசாங்கங்களில் அமைச்சுப் பதவிகளையும் அரச திணைக்களப் பதவிகளையும் வகித்த மலையகத் தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து, மாகாண சபைகளை நடத்துதல், காணி விவகாரங்கள் பற்றிப் பேசுதல், புதிய அரசியல் யாப்புக்கான பரிந்துரைகளைச் செய்தல் என்று பகிரங்கமாகக் கூறியுள்ள பின்னணியில், தாங்கள் எத்தகைய அரசியலை முன்னெடுக்கிறோம் என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளிப்படுத்த வேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் அந்தப் பொறுப்பு உண்டு. டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சியும், தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சி அமைத்துள்ள ஜே.வி.பியும் 1994 இல், முதன் முதலாக ஜனநாயக அரசியலுக்குள் பிரவேசித்தன.

சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு அப்போது ஆதரவும் வழங்கியிருந்தன. அவ்வாறானதொரு இணக்க அரசியலைச் செய்யும் தொனி, கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்தே தமிழரசுக் கட்சியிடம் வெளிப்படத் தொடங்கியது.

ஆகவே, நடப்பு 2026 ஆம் ஆண்டில், ”இணக்க அரசியல்”தான் தங்களின் அரசியல் நிலைப்பாடு என்பதைத் தமிழரசுக் கட்சி பகிரங்கமாக அறிவித்தால் சிறப்பாக இருக்கும்! அதேநேரம், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வா அல்லது இந்திய சமஸ்டி முறைமையா என்பதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்!

• • •




என்.சரவணன்

மகாவம்சத்தில் இடம்பெறும் இரு வருகைகள் பற்றிய புனைவுகளை பகிரங்கமாக விவாதிக்க வேண்டிய தருணம் இது. ஒன்று விஜயனின் வருகை; மற்றது புத்தரின் வருகை. இவை இரண்டும் “சிங்கள பௌத்த” பூர்வீக உரிமைகோரலுடன் எவ்வாறு பிணைந்திருக்கின்றன, எங்கே முரண்படுகின்றன என்பதை ஆராயாமல், இலங்கையின் இனவரலாற்றை புரிந்துகொள்ள முடியாது. இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு என்றும், ஏனையோர் வந்தேறு குடிகள், அந்நியர், கள்ளத் தோணிகள் என்றும் நிறுவப்பட்டுள்ள ஐதீகத்திற்கும் இக்கதையாடல்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மண்ணின் மைந்தர் யார், அந்நியர் யார் என்ற கருத்தாக்கம் இன்றும் அரசியல் மொழியில் உலாவருகிறது என்பதால், இதை தர்க்க ரீதியில் கேள்விக்குள்ளாக்குவது ஒரு வரலாற்று அவசியமாகிறது.


கௌதம புத்தர் தமது வாழ்நாளில் இலங்கைக்கு மூன்று முறை விஜயம் செய்தார் என்ற கதையாடல், பல நூற்றாண்டுகளாக இலங்கையின் மத அடையாளத்தின் முதன்மைத் தூணாக நிலைநிறுத்தப்பட்டு வந்துள்ளது. மகாவம்சம், தீபவம்சம் ஆகிய பாலி மொழி வம்ச நூல்களி லும், பூஜாவலிய, சமந்தபாசாதிகா, பூத்சரண போன்ற பிற்கால நூல்களிலும் இடம்பெறும் இந்த மூன்று விஜயங்களும் மஹியங்கனை, நாககதீபம், களனி உள்ளிட்ட பதினாறு புனித தலங்களுடன் (சொலஸ்மஸ்தான) பிணைக்கப்பட்டுள்ளன. ஆயினும், நவீன வரலாற்று ஆய்வியல், தொல்லியல் தரவுகள், புவியியல் யதார்த்தம், பௌத்த மூல நூல்களின் தர்க்க ரீதியில் பரிசீலிக்கும்போது, புத்தர் இலங்கைக்கு ஒருபோதும் வரவில்லை என்ற முடிவே மிகத் தெளிவாக முன்வைக்கப்படுகிறது. இந்த முரண் பாட்டை வெளிக்கொணர்வதும், அது எந்த அரசியல்-மத நோக்கத்திற்காகக் கட்டமைக்கப்பட்டது என்பதை ஆராய் வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திரிபிடகத்தில் கூட சான்றில்லை

புத்தரின் வருகை குறித்த வாதத்தில் மையமான இடத்தைப் பெறவேண்டியது திரிபிடகமே. பௌத்த தர்மத்தின் மிகப் பழமையான, முதன்மையான மூல நூலாகக் கருதப்படுவது பாலி திரிபிடகம் ஆகும். புத்தர் காலமான உடனேயே கூடிய முதலாவது சங்காயனாவிலும், நூறு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இரண்டாவது சங்காயனாவிலும் வாய் மொழியாகத் தொகுக்கப்பட்டு, பிற்காலத்தில் இலங்கையின் மாத்தளை அலுவிஹாரையில் ஏட்டுப் பிரதியாக எழுதப்பட்ட இந்நூல்தொகுப்பு, விநயப் பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதில் புத்தரின் 45 ஆண்டுகால தர்ம பிரசார வாழ்க்கையின் நாளாந்த நடமாட்டங்கள் வியப்பூட்டும் அளவு நுணுக்கமாகப் பதிவாகியுள்ளன.

திரிபிடகத்தில் என்கிற இந்த தர்க்கம் மிக முக்கியமானது, ஆனால் பெரும்பாலும் மத ஐதீக மோகத்தால் புறக்கணிக்கப்படும் சான்று.

சுத்த பிடகத்தின் நிகாயங்களில், புத்தர் தங்கி யிருந்த விகாரைகள், சாவத்தியில் ஜேதவனம், அனாதபி ண்டிகனின் ஆராமம், ராஜகிரகத்தில் வேளுவனம், வேசாலியில் மகாவனம் என பெயர் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் சந்தித்த மன்னர்கள் (பிம்பிசாரன், பசேனதி), அவர் உரையாடிய தத்துவவாதிகள் பற்றி மட்டுமல்லாது பயணங்களின் காலமும் பருவமும் கூட சூத்திரங்களில் விவரிக்கப்படுகின்றன. குறிப்பாக மகாபரிநிப்பான சுத்தத்தில், புத்தரின் இறுதி எட்டு மாத பயணம் ராஜகிரகத்திலிருந்து வேசாலி, பாவா வழியாக குசிநாரா வரை நாளாந்த நடைபாதையாக, தங்கும் இடங்கள் உட்பட விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு விரிவான, நுணுக்கமான பயணப் பதிவு வைத்திருக்கும் ஒரு மூல நூல், இலங்கைக்கு மூன்று முறை கடல் கடந்து சென்ற ஒரு பயணத்தை மட்டும் எப்படி தவிர்த்திருக்க முடியும். அவ்வாறு முற்றிலும் தவிர்க்கும் என்பது வரலாற்று ஆய்வியல் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாதது. இது வெறும் ‘குறிப்பிடப்படவில்லை’ என்று எளிதாக கடந்துவிடக் கூடிய விடயமல்ல; விரிவான பதிவுக்கு நடுவே காணப்படுகிற குறிப்பிடத்தக்க வெற்றிடம் என்பதே இதன் ஆய்வியல் முக்கியத்துவம்.




மேலும், விநயப் பிடகத்தில் ‘மஜ்ஜிமதேச’ (நடுநாடு) என்ற எல்லைக்கோடு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. புத்தர் பிரசாரம் செய்த மஜ்ஜிமதேச எல்லைக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களை ‘பச்சந்திம ஜனபத’ (எல்லைப்புற நாடுகள்) என விநயம் தனியாகக் குறிப்பிட்டு, அங்கு பிக்குகள் ஒப்பந்தம் ஏற்படுத்தும் விதிமுறைகளில் தளர்வுகள் அளிக்கிறது. ஏனெனில் அப்பகுதிகளுக்குச் செல்வதே அரிதான, கடினமான ஒன்றாகக் கருதப்பட்டது. இலங்கை தீவு இந்த மஜ்ஜிமதேச எல்லைக்கு முற்றிலும் வெளியே, கடல் கடந்த தொலைவில் அமைந்திருந்தது. புத்தர் தமது சொந்த சங்கத்தின் விநய விதிகளே எல்லைப்புறமாகக் கருதிய ஒரு நிலப்பரப்பிற்கு மூன்று முறை தானே நேரடியாகச் சென்றார் என்பது, திரிபிடகம் தன்னளவில் கட்டமைக்கும் புவியியல் உலகத்திற்கு நேர் முரணானது. திரிபிடகத்தை உரையாடலின் மூல சான்றாக கொள்ளாமல் இக்கேள்வியை அணுகுவதே பிழை எனலாம்.

பாலி திரிபிடகத்தையும், சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட தொடக்ககால பௌத்த ஆகமங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, புத்தரின் நடவடிக்கைகள் அனைத்தும் வடஇந்தியப் பகுதிகளுக்குள்ளேயே அமைந் திருந்தன என்பது தெளிவாகிறது.

திரிபிடகத்தில் இல்லாத ஒரு செய்தி, 800 ஆண்டு களுக்குப் பிறகு இலங்கையில் எழுதப்பட்ட மகாவம்சத்தில் மட்டும் இடம்பெறுகிறது என்றால், அது முழுக்க முழுக்க இலங்கையில் உருவாக்கப்பட்ட பிற்காலப் புனைவு என்பதை வரலாற்று அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## பயண எல்லையும் புவியியல் யதார்த்தமும்

புத்தர் தமது 35வது வயதில் ஞானமடைந்து 80வது வயதில் பரிநிர்வாணம் அடையும் வரையிலான 45 ஆண்டுகால தம்ம போதனை வாழ்க்கையில், வடஇந்திய கங்கைச் சமவெளியில் அமைந்த மகத, கோசல, வஜ்ஜி, வத்ஸ முதலிய பதினாறு மகாஜனபதங்களை மட்டுமே சுற்றி வந்தார் என்பதை திரிபிடகமும் நவீன வரலாற்று ஆய்வுகளும் ஒருமித்து உறுதிப்படுத்துகின்றன. அக்காலத்தில் நீண்டதூரப் பயணங்கள் அனைத்தும் பாதயாத்திரையாகவே அமைந்தன;கடல்கடந்தபயணங்களுக்கானவழிமுறைகளோ அவசியமோ புத்தரின் பிரசார நோக்கத்திலோ இருந்ததாக எந்த மூலமும் காட்டவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர் வட இந்தியாவைவிட்டு வேறெங்கும் பயணித்ததோ, ஏன் கடல்கடந்ததோ கூட கிடையாது. பரந்த இந்தியத் துணைக்கண்டத்தின் வடபகுதியை மட்டுமே சுற்றிய ஒருவர், ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள, கடல் கடந்த ஒரு தீவுக்கு மூன்று முறை பயணித்தார் எனக் கூறுவது, அக்கால புவியியல் மற்றும் பயணச் சாத்தியக்கூறுகளுக்கு முற்றிலும் முரணானது.

## அறிஞர்களின் மறுப்பு

புத்தரின் இலங்கை வருகை ஒரு புராணப் புனைவு என்பதை நிறுவுவதில் தொல்லியலாளர்களின் பங்களிப்பு முக்கியமானது. இலங்கை தொல்லியல் துறையின் பிதாமகரும், 1940 முதல் 1956 வரை தொல்லியல் ஆணை யராகவும் பணியாற்றிய பேராசிரியர் சேனரத் பரணவிதான, புத்தர் இலங்கைக்கு மூன்று முறை விஜயம் செய்தார் என்றும் ஸ்ரீபாத மலையில் பாதம் பதித்தார் என்றும் கூறப்படும் கதைகளுக்கு எந்தவிதமான தொல்லியல் அல்லது கல்வெட்டுச் சான்றும் இல்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டார். தாய்லாந்து, மியான்மர் போன்ற பிற பௌத்த நாடுகளிலும் புத்தர் தங்கள் நாட்டிற்கு விஜயம் செய்து பாதம் பதித்தார் என்ற இதே வடிவிலான புராணக் கதைகள் நிலவுவதைச் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் கதைகளும் அத்தகைய மத நாட்டுப்புற வாய்மொழிக் கதைகளின் ஒரு பகுதியே தவிர, வரலாற்று உண்மைகள் அல்ல எனத் துணிச்சலாக வெளிப்படுத்தினார். அதனால் அவர் இப்புனைவை வரட்டுத்தனமாக நம்பும் பெருவாரி பௌத்தமக்களின் அதிருப்தியாளராக இன்னமும் நீடித்து வருகிறார்.

இதற்கு இணையான வலுவான சான்று அசோக சக்கரவர்த்தியின் பாறைக் கல்வெட்டுகளையும் தூண் கல்வெட்டுகளையும் குறிப்பிட முடியும். அசோகர் தமது ஆட்சிக் காலத்தில் பல தேசங்களுக்கு பௌத்த தூதுக் குழுக்களை அனுப்பியது பற்றியும், இலங்கைக்குத் தம் மகன் மஹிந்த தேரரை அனுப்பியது பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அசோகரின் எந்தவொரு கல்வெட்டிலும் புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்தார் என்ற செய்தி இடம்பெற்றதில்லை. தீவிர பௌத்தராகவும் பௌத்த வரலாற்றைப் பேணுவதில் மிகுந்த அக்கறை கொண்டவராகவும் இருந்த அசோகர், அத்தகைய ஒரு முக்கிய நிகழ்வை தம் கல்வெட்டுகளில் பதிவு செய்யாமல் விட்டிருப்பார் என்பது நம்பத்தகுந்ததாக இல்லை.

## மகாவம்சமும் ‘தம்மதீப’ கருத்தாக்கமும்

மகாவம்சத்தின் தொடக்கத்தில் புத்தர் இலங்கைக்கு மூன்று முறை வந்ததாகப் பதிவு செய்கிறது.

1. மஹியங்கனை வருகை: இயக்கர் (Yakkhas) பழங் குடியினரை விரட்டியடித்தல்.
2. நாகதீபம் (யாழ்ப்பாணம்) வருகை: நாகர்களிடையே (Na-gas) ஏற்பட்ட மணியாசனம் தொடர்பான முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்குத்தல்.
3. கல்யாணி (களனி) & ஸ்ரீபாத வருகை: நாக அரசனின் அழைப்பை ஏற்று வந்து பாதச்சுவடைப் பதித்தல்.

தொடர்ச்சி: பக்கம் 20




**செஞ்சோலை படுகொலை நடந்து இருபது ஆண்டுகள் — 14 ஆகஸ்ட் 2026**

**அனைவருக்கும் வணக்கம்.**

பேச்சைத் தொடங்கும் முன், நாம் இன்று கூடியிருக்கும் நிலத்தின் பாரம்பரிய மக்களை அங்கீகரிப்பதோடு, கடந்த கால மற்றும் தற்போதைய மூத்த குடிமக்களுக்கு எனது மரியாதையைச் செலுத்துகிறேன். இந்த நிலம் ஒருபோதும் பிறருக்கு விட்டுக்கொடுக்கப் படவில்லை என்பதையும், இதன் மீதான இறையாண்மை ஒருபோதும் கைவிடப்படவில்லை என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஈழத் தமிழர்களாகிய நாங்கள், ஆதிவாசி மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவுவாசி (Aboriginal and Torres Strait Islander) மக்களின் தங்கள் நிலத்துடனான தொடர்ச்சியான பிணைப்பை அங்கீகரிக்கிறோம். இது எப்போதும் ஆதிவாசிகளின் நிலமாகவே இருந்தது, இனியும் அப்படித்தான் இருக்கும்.

இன்று, 14 ஆகஸ்ட் 2026 அன்று, செஞ்சோலை படுகொலை நடந்து இருபது ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, ஈழத் தமிழர்களாகிய நாம் இங்கு கூடியுள்ளோம். படுகொலை செய்யப்பட்ட அந்த இளம் தமிழ் சிறுமிகளை நினைவுகூரவும், அதேவேளையில் இருபது ஆண்டுகால மௌனம், தண்டனையிலிருந்து தப்பித்தல் மற்றும் அரசியல் அலட்சியம் ஆகியவை தமிழ் தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கான இடத்தை ஒருபோதும் அழித்துவிடாது என்பதையும், எங்கள் மக்கள் மீதான இனப்படுகொலைக்கான நீதியைக் கோரும் எங்கள் குரலை அடக்கிவிடாது என்பதையும் மீண்டும் உறுதிப்படுத்தவும் கூடியுள்ளோம்.

ஒரு குழந்தை வளர்ந்து பெரியவராவதற்கும், கல்வியை முடிப்பதற்கும், தொழில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும், குடும்பத்தை உருவாக்கி அடுத்த தலைமுறையை வடிவமைக்கத் தொடங்குவதற்கும் இருபது ஆண்டுகள் போதுமான காலமாகும்; இதுவே இந்த நினைவு நாளை மிகவும் வேதனையானதாக மாற்றுகிறது: செஞ்சோலை சிறுமிகளுக்கும் அந்த இருபது ஆண்டுகள் கிடைத்திருக்க வேண்டும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் ஈழத்தின் காலைப் பொழுதில், முதலுதவி மற்றும் பேரிடர் காலத் தயார்நிலை குறித்த பயிற்சிக்காகக் கூடியிருந்த இளம் தமிழ் சிறுமிகளால் செஞ்சோலை நிறைந்திருந்தது.

இடப்பெயர்வு மற்றும் இராணுவ வன்முறையால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட குழந்தைகள் அவர்கள்; ஆயினும், அவர்கள் தொடர்ந்து கல்வி பயின்றனர், நட்புறவுகளை வளர்த்தனர் மற்றும் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளைக் கண்டனர். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள, பெரும் இழப்புகளைச் சந்தித்த தமிழ் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகவே செஞ்சோலை நிறுவப்பட்டிருந்தது; அது அவர்களுக்குக் கல்வி, தங்குமிடம், தொழிற்பயிற்சி மற்றும் ஒரு சொந்த இடமாகத் திகழ்ந்தது.

அவர்கள் போராளிகள் அல்ல; அவர்கள் ஆயுதங்களை ஏந்தவில்லை, இராணுவ சீருடைகளை அணியவில்லை; அவர்கள் தமிழ் ஈழத்தின் மகள்கள்; உயிர்களைப் பறிக்க அல்ல, மாறாக உயிர்களைக் காப்பாற்றக் கற்றுக் கொள்ளவே அவர்கள் அங்கு சென்றிருந்தனர். ஆயினும், 2006 ஆகஸ்ட் 14 அன்று, இலங்கை விமானப்படையின் கிஃபிர் ரகப் போர் விமானங்கள் செஞ்சோலையைத் தாக்கின. அந்தப் படுகொலையை ஆவணப்படுத்தும் தகவல்களின்படி, 250 கிலோகிராம் எடையுள்ள பதினாறு குண்டுகள் வீசப்பட்டதாகவும், அதில் ஐம்பத்து மூன்று சிறுமிகளும் மூன்று பணியாளர்களும் கொல்லப்பட்டதாகவும், நூற்றுக் கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த ஐம்பத்து மூன்று சிறுமிகளும் இன்று நம்மிடையே ஆசிரியர்களாக, மருத்துவர்களாக, வழக்கறிஞர்களாக, தாய்மார்களாக, கலைஞர்களாக, சட்ட ஆலோசகர்களாக மற்றும் தலைவர்களாக நின்று, தங்கள் சமூகங்களை வலுப்படுத்தி, தமிழ் ஈழத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க உதவியிருக்க வேண்டும். மாறாக, அவர்கள் நமது தேசத்தின் கூட்டு நினைவில் என்றென்றும் இளமையாகவே இருக்கிறார்கள். இருபது ஆண்டுகள் கழிந்த பின்னரும், நெடுங்காலத்திற்கு முன்பே பதிலளிக்கப் பட்டிருக்க வேண்டிய ஒரு கேள்வியை நாம் இன்னும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்: அவர்களுக்கான நீதி எங்கே?

நாம் செஞ்சோலையைப் பற்றிப் பேசும்போது, அந்த நடவடிக்கை தொடர்பான தகவல்களில் அடையாளம் காணப்பட்டவர்களைப் பற்றியும் பேச வேண்டும். ஏனெனில், போர் விமானங்கள் தாமாகவே இலக்குகளைத் தேர்ந்தெடுப்பதில்லை, குண்டுகள் தாமாகவே வீசப்படுவதில்லை, இராணுவ நடவடிக்கைகள் தாமாகவே அங்கீகரிக்கப்படுவதில்லை.

செல்வி **ரேணுகா இன்பகுமார்**
வழக்கறிஞர், நியூ சவுத் வேல்ஸ்
தமிழ் அகதிகள் பேரவையின்
செய்தித் தொடர்பாளர்

இந்த ஆவணத்தின்படி, ஸ்குவாட்ரன் லீடர் வஜிரா ஜயகோடி தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவராகவும், "மொனார்க்" என்று அழைக்கப்படும் ஃபிளைட் லெப்டினன்ட் மோனாத் பெரேரா இந்த நடவடிக்கையில் பங்கேற்றவராகவும் அடையாளம் காணப்படுகின்றனர்; மேலும், கட்டளை அமைப்பிற்குள் அப்போதைய 10-வது ஃபைட்டர் ஸ்குவாட்ரனின் தளபதியாக இருந்த ஏர் வைஸ் மார்ஷல் சுதர்ஷன பத்திரானாவும், வான்வழிக் கட்டளையின் உயர் மட்டத்தில் அப்போதைய இலங்கை விமானப்படையின் தளபதியாக இருந்த ஏர் மார்ஷல் ரொஷான் குனதிலகவும் இருந்தனர்.

இலங்கை போர் விமானிகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் குறித்த விவாதங்களில் ஏர் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம, விங் கமாண்டர் ஷெஹான் பெர்னாண்டோ, விங் கமாண்டர் சம்பத் விக்ரமரத்ன, ஸ்குவாட்ரன் லீடர் பிரியந்த உதயகுமார, ஃப்ளைட் லெப்டினன்ட் பிரபத் விஜேகோன் மற்றும் ஃப்ளைட் லெப்டினன்ட் தினேஷ் நாகசேன ஆகியோரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன; இருப்பினும், இக்குழுவில் உள்ள ஒவ்வொருவரும் செஞ்சோலை மீதான தாக்குதலில் நேரடியாகப் பங்கேற்றனர் என்பதை அந்த ஆவணங்கள் உறுதிப்படுத்தவில்லை.

அரசியல் மட்டத்தில், அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அப்போதைய ஜனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இருந்தனர்.

இந்தப் பெயர்கள் முக்கியமானவை; ஏனெனில் சர்வதேச குற்றவியல் சட்டம் தனிநபர் பொறுப்பை அங்கீகரிக்கிறது. சான்றுகள் மற்றும் தொடர்புடைய சட்டத் தேவைகள் பூர்த்தியாகும் பட்சத்தில், தாக்குதலை நேரடியாகச் செயல்படுத்தியவர்களுக்கு அப்பால், சர்வதேசக் குற்றங்களுக்கு உத்தரவிட்டவர்கள், அதற்குத் துணை நின்றவர்கள் அல்லது பங்களித்தவர்கள் மற்றும் கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் மீதும் பொறுப்பு சுமத்தப்படலாம்.

இராணுவப் பதவிகளால் பொறுப்பைத் துடைத்தெறிய முடியாது; பதக்கங்களால் சான்றுகளை அழிக்க முடியாது; அரசியல் அதிகாரத்தால் வரலாற்றை மாற்றி எழுத முடியாது; இருபது ஆண்டுகள் கடந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரும் உரிமையை இல்லாமலாக்க முடியாது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, 'தமிழ் இனப் படுகொலை' என்று நாம் அங்கீகரிக்கும் பரந்த வரலாற்றிலிருந்து செஞ்சோலை நிகழ்வை ஒருபோதும் பிரித்துப் பார்க்க முடியாது.

எங்கள் வரலாறு, பல தசாப்தங்களாக நீடித்த தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள், படுகொலைகள், வலிந்துகாணாமல் ஆக்கப்படல்கள், இடம்பெயர்வுகள் மற்றும் அழிவுகள் ஆகியவற்றைக் கடந்து, முள்ளிவாய்க்காலில் எங்கள் மக்கள் அனுபவித்த பேரழிவுகரமான கொடூரங்களில் உச்சம் தொட்டது.

இனப்படுகொலை என்பது தனிப்பட்ட உயிர்களை மட்டும் அழிப்பதல்ல; அது ஒரு மக்களின் தொடர்ச்சி, அவர்களின் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றின் மீதும் தாக்குதல் நடத்துகிறது.

இதுவே செஞ்சோலை நிகழ்வை மிகவும் துயரமானதாக மாற்றுகிறது; ஏனெனில் அந்த இளம் பெண்கள் அத்தகைய எதிர்காலத்தையே பிரதிநிதித்துவப்படுத்தினர் — அவர்கள் தமிழ் ஈழத்தின் அடுத்த தலைமுறையாகத் திகழ்ந்தனர்.

இன்றும் கூட, எங்கள் தாயகத்தின் மண் உலகிற்கு விடையளிக்கப்படாத கேள்விகளை முன்வைத்துக் கொண்டே இருக்கிறது. யாழ்ப்பாணத்தின் செம்மணியில் மனித எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்ட நிகழ்வு, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இரகசியமாகப் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரங்கள் குறித்த தீர்க்கப்படாத வரலாற்றை மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடி பல தசாப்தங்களைக் கழித்த தமிழ்க் குடும்பங்களுக்கு, இக்கண்டுபிடிப்புகள் வெறும் அனுதாபத்தை மட்டும் கோரவில்லை; மாறாக, சான்றுகளைப் பாதுகாத்தல், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், சுயாதீன தடயவியல் ஆய்வு மற்றும் நம்பகமான விசாரணை ஆகியவற்றை அவை கோருகின்றன.

மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டு வருகையில், எங்கள் மக்களை எப்படி மறக்குமாறு கூற முடியும்? தங்கள் பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருக்கும் குடும்பங்களிடம், கடந்த காலம் முடிந்துவிட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்? உண்மை நிலைநாட்டப்பட்டு நீதி வழங்கப்படுவதற்கு முன்பே நல்லிணக்கத்தை எவ்வாறு கோர முடியும்? செஞ்சோலை முதல் செம்மணி வரையிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் முதல் முள்ளிவாய்க்கால் வரையிலும், எங்கள் கோரிக்கை ஒன்றுதான்: உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதி.

ஆனால், தமிழ் ஈழத்தின் வரலாற்றை வெறும் துயரத்தின் வரலாறாக மட்டுமே நமது இளைஞர்களுக்குக் கற்பிக்கக் கூடாது.

அது எதிர்ப்பு, வாழ்வுக்கான போராட்டம், தியாகம் மற்றும் அழிந்துபோக மறுக்கும் அசாத்தியமான மன உறுதி ஆகியவற்றின் வரலாறும் கூட. தமிழ் தேசத்தின் கண்ணியம், அடையாளம் மற்றும் அரசியல் அபிலாஷைகளை விட்டுக் கொடுக்க முந்தைய தலைமுறைகள் மறுத்துவிட்டன; எங்கள் மக்களின் பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்திற்குச் சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் அவசியம் என்று நம்பிய தலைமுறைகளின் போராட்டத்திலிருந்தே, எங்கள் சமூகத்தால் விடுதலைப் போராளிகளாகப் போற்றப்படுபவர்கள் உருவானார்கள்.

மரணத்தைப் பெருமைப்படுத்துவதன் மூலம் அல்ல, மாறாக அவர்களின் போராட்டத்தை உருவாக்கிய வரலாற்றைப் புரிந்துகொள்வதன் மூலமும், எவ்வளவோ

**தொடர்ச்சி: பக்கம் 19**




கிழக்கு மாகாணத்தின் மிகவும் பேசுபொருளாக கடந்த காலத்தில் இருந்து இன்று மறக்கப்பட்ட நிலையில் உள்ள வீரமுனைபடுகொலை நினைவேந்தல் அந்த கிராம மக்களினால் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் தமிழர்கள் மீது நடந்த படுகொலைகள் குறித்து கடந்தவாரம் எழுதியிருந்தேன்.அந்த கட்டுரையில் வீரமுனை படுகொலை தொடர்பில் குறிப்பிட்டிருந்தாலும் வீரமுனைப்படுகொலையின் நோக்கம்,அதன்மூலம் சிங்கள பேரிவாத சக்திகளும் முஸ்லிம் அடிப்படைவாதிகளும் அடைய நினைத்த விடயங்களை எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள வீரமுனை கிராமத்தில் 1990-ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், இலங்கை உள்நாட்டுப் போரின் கருப்புப் பக்கங்களில் ஒன்றாகும்.

1990-ஆம் ஆண்டு ஜூன் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில், வீரமுனை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி மற்றும் சொறிக்கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் பொதுமக்கள் பாதுகாப்பிற்காக வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோவில் மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர்.

1990 ஆகஸ்ட் 12 அன்று, விசேட அதிரடிப்படையினர் ஆலயம் மற்றும் பாடசாலையினை சுற்றிவளைத்து பாதுகாப்பளிக்கும்கோயிலுக்குள்ளும்பாடசாலைகளுக்குள்ளும் துப்பாக்கிகள், கத்தி கோடாரிகளுடன் புகுந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் மிலேசத்தனமாக தாக்குதல்களை நடாத்தியிருந்தனர். இதன்போது சிறுவர்களை தூக்கி பாடசாலை சுவர்களில் அடித்து கொலைசெய்தனர்.வயோதிபர்கள், கர்ப்பிணிகள் என பாராது நடந்த இந்த கொடூர நிகழ்வில் 85க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் இதன்போது படுகாயமடைந்த நிலையில் அம்பாறை வைத்தியசாலைக்குகொண்டுசென்ற24க்கும்அதிகமானோர் வைத்தியசாலையிலிருந்து காணாமல்போயிருந்தனர்.இவ்வாறான துயரச்சம்பங்கள் இந்த நாட்டில் மட்டுமல்ல எந்த நாட்டிலும் இடம்பெறாத சம்பங்களை இந்த வீரமுனை மண் எதிர்கொண்டுவந்தது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் வீரமுனை கிராமம், பழம்பெரும் வரலாற்றுப் பாரம்பரியமும் தனித்துவமான பண்பாட்டு அடையாளமும் கொண்ட தொன்மையான தமிழ் கிராமங்களில் ஒன்றாகும். காலப்போக்கில் பல்வேறு அரசியல், சமூக மாற்றங்களையும் யுத்த அவலங்களையும் சந்தித்தபோதிலும், வீரமுனை தனது வரலாற்றுத் தடங்களை இன்றும் சுமந்து நிற்கின்றது.

சம்மாந்துறையென்ற கிராமம் உருவாகுவதற்கு முன்பாகவே வீரமுனை என்ற கிராமம் உருவாகி அதன்மூலம் பொருளாதார மையமாக விவசாயத்தினையும் கொண்டதாக இருந்துவருகின்றது.வீரமுனை ஊடாக வர்த்தக நோக்கத்திற்காக வந்த இஸ்லாமியர்கள் வீரமுனைக்கு அருகில் குடியேறி சம்மாந்துறையென்ற கிராமத்தில் வாழ்ந்த தமிழர்களுடன் இணைந்தார்கள். சம்மாந்துறையென்ற கிராமம் தமிழர்கள் வாழ்ந்த பகுதியாக காணப்பட்ட நிலையில் கண்டி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், கிழக்குக் கரையோரப் பகுதிகள் கண்டி இராச்சியத்தின் வணிக வாசல்களாக இயங்கின. போர்த்துகீசியர், ஒல்லாந்தர் (டச்சு) ஆட்சிக் காலங்களில் கரையோரப் பகுதிகளில் நிலவிய அரசியல் நெருக்கடிகளின் போது, கண்டி மன்னர்கள் வர்த்தகர்களையும் குடிமக்களையும் உட்பகுதியான சம்மாந்துறை போன்ற பிராந்தியங்களில் குடியேற அனுமதித்தனர்.அவ்வாறு குடியேறியவர்களே இஸ்லாமியர்களாக இன்று சம்மாந்துறையிலிருந்துவருகின்றனர்.

இவர்களுக்கும் தமிழர்களுக்குமான உறவுமுறைகள் இருந்துவந்தபோதிலும் இவர்கள் மீது 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தே பிரித்தாளும் தந்திரத்தினை சிங்கள பௌத்த பேரினவாதம் முன்னெடுக்க தொடங்கியது. குறிப்பாக வணிக நோக்கத்திற்காக வந்த இஸ்லாமியர்களிடம் வீரமுனை மக்களின் பொருளாதார மையமாக இருந்த விவசாய நிலங்களை அபகரிப்பதற்கான திட்டங்கள் விதைக்கப்பட்டு அதன் அறுவடைகள் 1954ஆம் ஆண்டு வீரமுனை மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டன.

1954-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முஸ்லிம் காடையர்களை பயன்படுத்தி வீரமுனை கிராமத்தின் பெரும்பாலான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதன் விளைவாக இக்கிராமத்தின் மக்கள் இடம்பெயர்ந்து வீரச்சோலை, மல்வத்தை, கணபதிபுரம் போன்ற துணைச் சிற்றூர்களை உருவாக்கி குடியேறினார்கள்.வீரமுனை கிராமத்தினை அபகரிப்பதற்கு அன்று முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பலிக்காத நிலையில் தொடர்ந்து இரண்டு இனங்கிடையே புகைந்த நிலையிலேயே இருந்தன.

சம்மாந்துறை பிரதேசம் தனி முஸ்லிம் பிரதேசமாக காணப்படவில்லை.அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்கள் 1954ஆம் ஆண்டு துரத்தியடிக்கப்பட்டு அவர்களது காணிகள் அபகரிக்கப்பட்டன.இன்றும் சம்மாந்துறையின் பல பகுதிகளில் தமிழர்கள் எச்சங்களாக வாழ்கின்றார்கள். முழுமையான அடக்குமுறைகளுடனேயே இன்றும் தமிழர்கள் வாழ்கின்றனர்.



இவ்வாறான நிலையிலேயே வீரமுனை கிராமம் தொடர்ச்சியாக இலக்குவைக்கப்பட்டுவருகின்றது.வீரமுனை கிராமத்தினைப்பொறுத்த வரையில் வீரமுனை ஆலயத்திற்கும் வீரமுனை கிராமத்தில் உள்ள மக்களுக்குமான நெற்செய்கை காணிகள் அம்பாறை வரையிலான பகுதிகளில் விரிந்து பரந்து கிடக்கின்றன.ஆயிரக்கணக்கான விவசாயகாணிகள் வளமான காணிகளாக காணப்பட்ட நிலையில் அந்த காணிகளை அபகரித்து வீரமுனை மக்களை முழுமையாக அங்கிருந்து அகற்றுவதற்கான செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவந்தன.

இந்த நிலையிலேயே வீரமுனை மக்களை இலக்கு வைப்பதற்கான சந்தர்ப்பங்களை இஸ்லாமிய கடும்போக்காளர்கள் பயன்படுத்த முயற்சிகளை முன்னெடுத்துவந்தனர்.

குறிப்பாக 1990ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட படுகொலைகள் ஏதோ உணர்ச்சிவசத்தில் நடந்த படுகொலைகள் அல்ல.மாறாக நன்கு திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட படுகொலைகளாகும்.வீரமுனை என்ற கிராமத்தினை அகற்றுவதற்கு பல முயற்சிகளில் இதுவும் ஒன்று. வீரமுனை கிராமத்தினை அகற்றுவதற்கு முன்பாக அதனை சூழவிருந்த கிராமங்களை அகற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற நூறுவீதமாக தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளை அகற்றுவதற்காக அங்கிருந்த தமிழர்களை அகற்றமுற்பட்டபோது அவர்கள் இடம்பெயர்ந்து அவர்களின் தாய்க்கிராமமான வீரமுனையில் அகதிகளாக ஆலயத்திலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருந்தனர்.
1990 வைகாசி மாதத்திற்கு பின்னர் பல இடங்களில் தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர்.

## மட்டு.நகரான்

வயல்களில்,வீதிகளில் என பல இடங்களில் தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி பகுதி மக்கள் வீரமுனையில் இடம்பெயர்ந்திருந்த நிலையில் வீரமுனை மக்களும் ஜூன் மாதம் அளவில் இடம்பெயர்ந்து ஆலயத்திற்குள்ளும் பாடசாலைகளுக்குள்ளும் செல்லும் நிலையேற்பட்டது.இதற்கான செயற்பாடுகளை முஸ்லிம் ஊர்காவல் படையினர் தொடர்ச்சியாக ஏற்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னரே பல சம்பவங்கள் இடம்பெறத் தொடங்கின.இராணுவத்தினர் அடிக்கடி வருகைதந்து பாடசாலையினையும் ஆலயத்தினையும் சுற்றிவளைப்பார்கள் அதன்போது லொறியொன்றில் கொண்டுவரப்படும் தலையாட்டிகள் முன்பாக அங்குள்ள இளைஞர்கள்,ஆண்கள் கொண்டுசெல்லப்படுவார்கள்.தலையாட்டியாக வந்தவர்கள் இஸ்லாமிய ஊர்காவல் படையினர் என சம்பங்களை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கி;ன்றனர்.

இதிலும் விசேடம் என்னவென்றால் தலையாட்டியாக வருபவர்கள் பெரும்பாலும் வீரமுனை கிராமத்திலும் அதனை சூழவுள்ள கிராமத்திலும் பேர்போன விவசாயிகள், ஏனைய தொழில்துறைகளில் ஈடுபடுவர்கள், கிராமத்தில் அக்கரையுடையவர்கள், கிராமத்தில் உள்ள கற்றவர்களை மட்டுமே காட்டிக்கொடுக்கும் நிலைமை காணப்பட்டது.அவ்வாறு பல தடவைகள் சுற்றிவளைக்கப்பட்டு கொஞ்சம்கொஞ்சமாக நூற்றுக்கணக்கானவர்கள் கொண்டுசெல்லப்பட்டு காணாமல்ஆக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று வீரமுனையை சூழவுள்ள தமிழ் கிராமங்களில் இடம்பெயராமல் வீடுகளில் இருந்தவர்கள் அங்கயே படுகொலைசெய்யப்பட்டனர், பல தமிழ் பெண்கள் கர்ப்பழிக்கப்பட்டு படுகொலைசெய்யப்பட்டிருந்தனர்.

இறுதியாக 1990-08-12ஆம் திகதி மதியவேளையில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் புகுந்த பெருமளவான துப்பாக்கிகள்,கத்தி கோடாரிகளுடன் புகுந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் படையினர் தமது கொலைவெறித்தாக்குதலை நடாத்தினர்.இதன்போது படுகொலைகள் புரியவந்த முஸ்லிம் ஊர்காவல் படையினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட வீரமுனையின் முதல் பெண் பட்டதாரி ஆசிரியரான பரமா என்னும் பெண்ணும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த கொடூர நிகழ்வில் 85க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் இதன்போது படுகாயமடைந்த நிலையில் அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற 24க்கும் அதிகமானோர் வைத்தியசாலையிலிருந்து காணாமல்போயிருந்தனர்.இந்த காணாமல்போனவர்களின் பட்டியிலில் வீரமுனையின் அன்றைய கிராம தலைவராக இருந்த முதியவரும் இருந்தார் என்பதே கவலையான விடயம்.

இந்த தாக்குதல் நடைபெற்ற அன்றைய தினமே வீரமுனை முகாம்களில் இருந்தவர்கள் இருந்த ஆடைகளுடன் பஸ்களில் ஏற்பட்டு திருக்கோவில், தம்பிலுவில் போன்ற பகுதிகளுக்கு கொண்டுசென்று அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.நீண்ட தூரத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளில் அவர்களைக் கொண்டு வைத்துவிட்டு அவர்களை அங்குள்ள காட்டுப்பகுதிகளில் குடியேற்றுவதற்கும் வீரமுனை கிராமத்தினை முழுமையாக அபகரிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் அன்றைய காலத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராகயிருந்தவரும் இன்றைய தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர்நாயகமுமாக இருக்கின்ற கோவிந்த கருணாகரம் ஜனா அவர்கள் பிரேமதாசவுடன் பேசி மிக கடுமையான போராட்டத்திற்கு மத்தியில் மீண்டும் வீரமுனையில் தமிழ் மக்களை குடியேற்றியதுடன் முஸ்லிம் காடையர்களின்

தொடர்ச்சி: பக்கம் 13




## கோபிகை

கொஞ்ச நேரம் துரை அண்ணையை சந்தோசப்படுத்தினாய் எண்டால் போதும் "குளிர் உடலெங்கும் விறுவிறுவென்று பரவுவது போல ஒருவித அச்சமும் அருவருப்புமான உணர்வு ஏற்பட்டது,அவளுக்கு எங்கிருந்து அப்படி ஒரு கோபம் வந்தது என்று தெரியவில்லை, " அடி செருப்பால நாயே, நீ எல்லாம் புருசனாடா? முதல்ல ஆம்பிளையா நீ, ஆராவது இப்பிடி கட்டின மனுஷியை விப்பானோ" கத்தினாள்.சத்தத்தில் பிள்ளைகள் முழித்துவிட, " சத்தம் போடாதை.... அண்ணைக்கு விளங்கினாலும்.... " " என்ன மனுசனடா அவன்...." " சும்மா சீன் காட்டாதை.... இதிலை என்ன கிடக்கு? " கணவனின் அந்த வார்த்தைகள் அவளை ஏதோ எல்லாம் செய்தது. கையில் இருந்த எட்டு நாட்களேயான கைக்குழந்தையை பாயிலே கிடத்தி விட்டு, தலையில் கைகளால் அடித்துக்கொண்டே ஒப்பாரி வைத்து அழுதாள்.பிள்ளைகள் குழம்பிப்போன நித்திரை கலக்கத்தில் விழிகள் பிதுங்க தாயைப் பார்த்தனர்.

" உடனே வெளியே நின்றவர்களில் ஒருத்தன் எட்டிப் பார்த்து, சங்கர் நீ என்ன சொன்னனி, இதென்ன நடக்கிது? என்று கொஞ்சம் ஏமாற்றம் கலந்த கோபத்தோடு கேட்டான். அவனுடைய பார்வை உள் பக்கமாக வாசலில் கதவோடு சாய்ந்து அழுதுகொண்டிருந்த வெண்ணிலாவையே மொய்க்கிறது என் பதை அவளுடைய உள்ளுணர்வு உணர்த்தியது. 'கணவன் தன்னை விற்று, அவர்களிடம் எதையோ வாங்கியிருக்கிறான்' என்கிற உண்மையை அப்போது நன்றாகவே புரிந்து கொண்டாள்.

உடனே வெளியே ஒடிப்போன இவளுடைய கணவன், ஏதோ இரகசியமாக கதைப்பதும் அவர்கள் உள்ளே எட்டிப் பார்ப்பதும் இவளுடைய கண்ணீரால் நிறைந்து கிடந்த கண்களில் ஓரமாகத் தெரிந்தது.

மின்னல் போல, மூளையில் அந்த எண்ணம் பளிச்சிட்டது. ' ஓ.... 14 வயதான மகளை...' ' கடவுளே மகளை விற்கப்போகிறானோ' இதயம் தடதடவென்று அடித்தது இவளுக்கு." சரி, வா... முதல் வெளியில போய் வருவம்... " அந்த நான்கு உருவங்களும் இருளில் மறைந்து கரைந்தன. மூளை மரத்துப் போனது இவளுக்கு, கனத்துக்கிடந்த மனதில் ஒன்றுமே தோன்றவில்லை,' இல்லை.... ஏதாவது செய்ய வேணும்.

உடனடியாக கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்தவள், அவசரமாக பிள்ளைகளை எழுப்பினாள். கைப் பையை எடுத்து துளாவிய போது, நூறு ரூபாய் தாள்கள் நான்கு தாள்கள் தெரியவும், பையை கையிலே எடுத்துக் கொண்டு, மூன்று வயதான சின் மகளை மூத்த மகளிடம் கொடுத்து ' தங்கச்சியை கவனமா கொண்டு வாம்மா' என்று விட்டு, தான் கைக்குழந்தையை அணைத்து தூக்கியபடி பிள்ளைகளை முன்னால் விட்டு விட்டு பின்னால் நடந்து வந்தாள்.

மூன்று வீடு தள்ளியிருந்த விதவைப் பெண்ணான தன்னுடைய வேலைத்தளத்து தோழியிடம் மட்டும் விசயத்தைச் சொல்லி, இரவுக்கு அங்கு தங்குவதற்கு அனுமதி கேட்டாள். புஸ்பா, மிகவும் நல்ல பெண், ஆனால், சோலி சுறட்டு என்றால் எப்பவும் தூரத்தான் நிற்பாள், தோட்டவேலைக்கு ஒன்றாகப் போகிற போது, அவளுடைய சுபாவம் பற்றி வெண்ணிலாவுக்குத் தெரியும். வெண்ணிலாவின் கணவனை அவளுக்கு கண்ணிலேயே காட்டக்கூடாது, புருசன் இல்லை தானே என்று ஏதும் சேட்டை விட்டிருப்பான் போல என்று வெண்ணிலா இப்போது நினைத்துக் கொண்டாள்." பிறகு உன்ர மனுசன் இங்க வந்து ஏதும் பிரச்சனை செய்வான்... " தங்கவிட மறுத்த புஸ்பாவிடம், " புஸ்பா, இரவுக்கு ஒரு பொழுது தான், விடிய வெள்ளண்ண நாலு மணிக்கு வாற முதல் பஸ்ஸில நாங்கள் போடுவம், ரவுணுக்கு போய் தோட்டை அடைவுவைச்சிட்டு நாங்கள் போடுவம்... " ஏற்கவும் ஏலாமல் மறுக்கவும் ஏலாமல் நின்ற புஸ்பா,ஏதோ நினைத்தபடி " சரி, வாங்கோ என்றதும், நாங்கள் வீட்டுக்கு உள்ள வரேல்லை, உனக்கு ஏன் கஸ்ரம், அந்த பழைய தகரக்கொட்டிலடியில இருக்கிறம்.... "" கை குழந்தையை வைச்சுக்கொண்டு, பாம்பு பூச்சி கிடந்தாலும்.... " புஸ்பா மறுக்கவும் " அப்பிடி விதி இருந்தால் போய்ட்டுப் போறம்... ஆரேனும் கண்டால் உனக்கு கரைச்சல்.... நாங்கள் அதில படுக்கிறம்.... " விறாந்தையில் எரிந்து கொண்டிருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு அவர்களோடு நடந்து வந்தாள் புஸ்பா.

**முற்றும்**

### காசா மக்களுக்கு... தொடர்ச்சி...

செய்தல் ஆகியவற்றைச் செய்வதில் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது என்று OCHA சுட்டிக்காட்டியுள்ளது.

"மக்கள் நீர் சேகரிக்கும் இடங்களில் கடும் நெரிசலை எதிர்கொள்கின்றனர்; மேலும் நீரை வீட்டிற்குக் கொண்டு செல்வதற்குப் போதுமான கொள்கலன்கள் அவர்களிடம் இல்லை. பெரும்பாலும் குழந்தைகளே இந்த வேலையைச் செய்ய வேண்டியுள்ளது," என்று அந்த ஐ.நா. அமைப்பு கூறியது.

காசாவில் நான்கு பேரில் மூவர் நீர் விநியோக லாரிகளைச் சார்ந்தே உள்ளனர்; மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் கடந்த மாதம் காசா முழுவதும் 2,500-க்கும் மேற்பட்ட நீர் சேகரிப்பு இடங்களுக்கும், 100-க்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கும் தினமும் நீரை விநியோகித்தன.

காசாவில் உள்ள குடும்பங்களில் பாதி பேருக்கு மட்டுமே அடிப்படை சுகாதார வசதிகள் அல்லது தனிப்பட்ட சுகாதார வசதிகள் உள்ளன என்றும், அதே வேளையில் 9 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் வசிப்பிடங்களில் குப்பைகள் குவிந்து கிடக்கும் சூழலுக்கு ஆளாகியிருப்பதாகவும் OCHA மேலும் தெரிவித்துள்ளது.

### கிழக்கின் அழிக்கப்பட்ட ... தொடர்ச்சி...

நோக்கத்தினை தடுத்து நிறுத்தினார்.

இன்று 36வருடங்களை கடந்துள்ளபோதிலும் இந்த படுகொலைகள் குறித்து தமிழர்கள் தரப்பில் யாரும் பேசும் நிலையில்லை.இந்த படுகொலையினை ஆவணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கூட இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.வீரமுனை மக்கள் மட்டுமே தமதுஉறவுகளை தொடர்ந்து நினைவுகூறிவருகின்றனர்.

வீரமுனை தொடர்பில் எதிர்காலத்தில் பல்வேறு தளங்களில் பேசுபொருளாக கொண்டுவரவேண்டிய கட்டாய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.வீரமுனை மக்கள் மீது இன்றும் இஸ்லாமிய கடும்போக்காளர்களின் அழுத்தம் என்பது இருந்தேவருகின்றது.வீரமுனை என்பது நூறுவீதம் தமிழ் மக்கள் வாழும் நிலையில் அவர்களின் பாரம்பரிய கலாசார அடையாளத்தைப்பேணும் ஒரு அலங்கார வளைவினைக்கூட அமைக்கமுடியாத வகையில் முஸ்லிம் தீவிரவாத் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.வீரமுனைக்கிராமத்தின் அடையாளத்தினை சிதைப்பதற்கு திட்டமிட்ட வகையில் இன்றும் அதே இஸ்லாமிய தீவிரவாதம் செயற்பட்டுவருகின்றது.

இன நல்லுறவு,இன ஐக்கியம் என்பது ஒரு தரப்பிடம் மட்டும் வருவதல்ல.மாறாக இரு தரப்பும் பரஸ்பர விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதன் மூலமே இன ஐக்கியமும் பரஸ்பரமும் ஏற்படும்.இதனை தமிழர்கள் மட்டும் செய்யவேண்டும் என்பது இன ஐக்கியத்தினை ஒருபோதும் ஏற்படுத்தாது.

வீரமுனை கிராமம் என்பது வெறும் புவியியல் எல்லை மட்டுமல்ல் அது கிழக்கு ,லங்கைத் தமிழர்களின் பண்டைய குடிவழி வரலாறு, தாய்வழிச் சமூகக் கட்டமைப்பு மற்றும் அநீதிகளுக்கு மத்தியிலும் நிலத்துடனும் பண்பாட்டுடனும் பிணைந்து வாழும் உறுதியின் வரலாற் றுத்தடமாகும்.அதனை பேசுபொருளாக மாற்றி வீரமுனைக் கிராம மக்களின் உரிமையினை பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும்.

• • •

### 27 ஆண்டுகளுக்குப்... தொடர்ச்சி...

பகுதிகள் மற்றும் வடமேற்கு ஆப்பிரிக்கா ஆகியவற்றில் பகுதி சூரிய கிரகணம் தெரிந்தது. பிரபஞ்சம் தனது அற்புதத்தை வெளிப்படுத்தியது; கிரகணம் முடிந்த சில மணிநேரங்களிலேயே விண்கல் மழையும் உச்சத்தை எட்டியது.

1999-க்குப் பிறகு மிகப்பெரிய சூரிய கிரகணத்தை இங்கிலாந்து கண்டது. வானிலை ஆய்வு மையத்தின் தகவலின்படி, இவ்வளவு சிறப்பான ஒரு கிரகணம் 2081-ஆம் ஆண்டு வரை இங்கிலாந்திலிருந்து மீண்டும் காணப்படாது. 1999-க்குப் பிறகு முதல் முறையாக, ஆகஸ்ட் 12 அன்று மேற்கு ஐரோப்பாவின் நிலப்பரப்பில் முழு சூரிய கிரகணம் தெரிந்தது.

ஐஸ்லாந்து மற்றும் ஸ்பெயினில் மக்கள் திரண்டு பார்க்க முழு சூரிய கிரகணம் நிகழ்ந்தது. 290-300 கி.மீ அகலமுள்ள பாதையில் முழு கிரகண நிலை ஐரோப்பா முழுவதும் நகர்ந்து சென்றது. 27 ஆண்டுகளில் ஐரோப்பா தனது முதல் முழு சூரிய கிரகணத்தை அனுபவித்தது.

சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் கடந்து சென்று சூரிய ஒளியை மறைத்ததால்இ ஒரு அற்புதமான வானியல் காட்சி உருவானது. இங்கிலாந்தின் பெரும்பாலான பகுதிகளில் சூரியனின் 90ூ-க்கும் அதிகமான பகுதி மறைக்கப்பட்டது.

சந்திரன் சூரியனை இரண்டு நிமிடங்களுக்கும் குறைவாக முழுமையாக மறைத்ததால்இ சூரியனின் ஒளிவட்டம் தெரிந்தது. வானம் சிறிது நேரம் இருண்ட போது, பார்வையிடும் இடங்களில் கூடியிருந்த மக்கள் உற்சாகமடைந்தனர். ஐரோப்பாவின் பரந்த பகுதிகளில் இந்த கிரகணம் தெரிந்தது; ஆனால் இந்தியா இதன் பார்வைப் பாதைக்கு வெளியே அமைந்திருந்தது. அடுத்த முழு சூரிய கிரகணம் 2027-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2-ஆம் தேதி நிகழவுள்ளது; அப்போது தென் ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவின் சில பகுதிகளில் முழுமையான கிரகணக் காட்சி தெரியும்.

### திருக்கேதீஸ்வரம் ... தொடர்ச்சி...

நேரத்தில் "இது தொல்பொருள் திணைக்களத்திற்குரிய இடம்" என்று பெயர்ப்பலகை நாட்டியுள்ளது.

அந்த பெயர்ப்பலகையில் ஆலய வளாகத்தில் ஒரு அபிவிருத்தியும் மேற் கொள்ளக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறு இரவு நேரத்தில் இவ்வாறு செய்ய முடியும். இந்த ஆலயம் பாடல் பெற்ற திருத்தலமாகும் என்று அவர் விசனம் வெளியிட்டார். ஆலயச் சூழல் தொல்பொருளுடன் தொடர்புடையது என்பதில் மாற்றுக்கருத்தில்லை

ஆனால், ஆலய நிர்வாகத்திற்கு தெரியாமல் குறித்த பெயர்ப்பலகையை நாட்டி யது மட்டுமல்லாமல், அந்த பெயர்ப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் கூட அந்த ஆலயத்தின் உண்மையான வரலாற்றை மாற்றியமைப்பதாக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

குறித்த ஆலய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மகாலிங்கம் தொடர்பாகவும் நந்தி தொடர்பாகவும் எதுவும் குறிப்பிடப்படாமல் முற்றிலுமாக வரலாறு மறைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியுமா? என்றும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார். ஏற்கனவே அங்கு அகழ்வாராய்ச்சிகள் நடந்த இடங்களில் சில பதாகைகள் தொல்பொருள் திணைக்களத்தால் நாட்டப்பட்டிருக்கின்றது.

அதற்கு மேலதிகமாகவே இவை தற்போது யாருக் கும் அறியப்படுத்தப்படாமல் நாட்டப்பட்டுள்ளது. ஆகவே, இந்த விடயத்தினை கவனத்திலெடுத்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரிடம் பாராளுமன்ற உறுப்பினர்

### ஆரம்பமானது "நீதியின்... தொடர்ச்சி...

எனும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று முதல் 16ம் திகதி வரை செம்மணி மனிதப்புதைகுழி அவலம் குறித்தும், தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை செம்மணி மனிதப்புதைகுழிக்கு அண்மையில் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற் பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என்று பலரும் பங்கேற்றுள்ளனர்.

• • •



# மலையகத் தமிழ்ப் பாடசாலைகளில் தொடரும் சீர்கேடுகள் – நிர்வாக அழுத்தத்தில் முடங்கும் எதிர்காலம்

மருதன் ராம்

இன்றைய காலகட்டத்தில், இலங்கையின் மலையகப் பிராந்தியத்தில் குறிப்பாக மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பெரும்பாலான தமிழ்ப் பாடசாலைகளில் நிலவி வரும் முறையற்ற நிர்வாகச் செயற்பாடுகளும், கல்வித் துறை அதிகாரிகளின் தன்னிச்சையான தலையீடுகளும் ஒட்டுமொத்தக் கல்விக் கட்டமைப்பையே பேரழிவை நோக்கித் தள்ளியுள்ளன. கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கு முதன்மை முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பாடசாலைகள், இன்று தேவையற்ற ஆடம்பர விழாக்களுக்கும், சிரேஷ்ட அதிகாரிகளின் காகிதக் கணக்குகளை நிரப்புவதற்கான ஆவணப் பதிவுகளுக்குமான தளங்களாக மாறி வருகின்றன. இதனால், மாணவர்களின் அடிப்படை உரிமையான தரமான கல்வியும், ஆசிரியர்களின் தொழில்சார் கண்ணியமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மலையகப் பகுதிகளில் உள்ள பல பாடசாலைகளில் மனித வளமும் நேர முகாமைத்துவமும் முறையான திட்ட மிடலின்றிப் பயன்படுத்தப்படுவதன் விளைவாக, ஆசிரியர்களும் மாணவர்களும் தொடர்ச்சியான மன உளைச்சலுக்கும் பாதுகாப்பற்ற சூழலுக்கும் தள்ளப்படுகின்றனர். வழக்கமான பாடசாலை வேலை நாட்களைத் தாண்டி, விடுமுறைக் காலங்களிலும் காலை, மாலை மற்றும் இரவு வேளைகளிலும் கட்டாய வகுப்புகளை நடத்துமாறு ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகின்றனர். இது பாரிய பணிச்சுமையை உருவாக்குவதாக ஆசிரியர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கனமழை மற்றும் இயற்கை அனர்த்தங்களின்போதும் கூட மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலைகளுக்கு வரவழைக்கும் ஆபத்தான போக்கு அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், நடப்பு இரண்டாம் தவணை விடுமுறையிலும் மேலதிக வகுப்புகளை நடத்துமாறு சில வலயக் கல்விப் பணிமனைகள் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இலங்கை ஆசிரியர் சங்கம் இத்தகைய நடைமுறைகளுக்குக் கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்துள்ளதோடு, ஆசிரியர்-மாணவர் நலன் சார்ந்த குரல்களையும் தொடர்ந்து பதிவு செய்து வருகிறது. கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இது தொடர்பான தமது கண்டனத்தை வெளியிட்டார். அத்துடன், இவ்வாறான விடயங்களில் கல்வி அமைச்சு உடனடியாகத் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதேநேரம், ஒருபுறம் கடுமையான பொருளாதார நெருக்கடி, மறுபுறம் இயற்கை அனர்த்தங்களால் வாழ்வாதார இழப்பு என மலையக மக்கள் தவிக்கும் வேளையில், பாடசாலைகளில் இடம்பெறும் சட்டவிரோத நிதி வசூல்கள் பெற்றோருக்கு மீளமுடியாத சுமையாக மாறுகின்றன. குறிப்பாக, தேவையற்ற வாகனப் பேரணிகள், பிரம்மாண்ட அலங்காரப் பணிகள் மற்றும் அதிபர்களின் அலுவலக வசதிகளை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காகப் பெற்றோரிடமிருந்து பெருந் தொகை வசூலிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில், மாணவர்களைக் கௌரவிப்பதாகக் கூறி நிதி சேகரிக்கப்பட்டு, ஆசிரி யைகளுக் குக் கைக்கடிகாரங்களும் ஆசிரியர்களுக்குக் கழுத்துப்பட்டிகளும் பரிசளிக்கப்பட்ட சம்பவங்களும் பதிவா கியுள்ளன. பாடசாலைகளுக்கு இடையேயும் அதிபர்களுக்கு இடையேயும் நிலவும் ஆரோக்கியமற்ற போட்டியினால், மாணவர்களின் அத்தியாவசிய கற்றல் நேரமும் பெற்றோர் வழங்கும் சொற்ப நிதியும் வீணடிக்கப்படுகின்றன.

மாணவர்கள் அமர்வதற்கோ அல்லது ஆசிரியர்கள் உணவருந்துவதற்கோ போதிய அடிப்படை வசதிகள் இல்லாத பல பாடசாலைகளில், அதிபர்களின் அறைகள் மட்டும் சொகுசு வசதிகளுடன் மாற்றியமைக்கப்படுவது கல்வித் துறையின் பேரவலமாகும்.

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு மற்றும் கற்றல் உபகரணங்களின் பற்றாக்குறை கல்வியின் தரத்தை நேரடியாகப் பாதிக்கிறது. சில பாடசாலைகளில் ஒரு வகுப்பறையில் 54 முதல் 55 மாணவர்கள் வரை நெருக்கடியாகக் கல்வி கற்கும் அசாதாரண சூழல் நிலவுகிறது. ஆசிரியர் மற்றும் நாற்காலி பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி, 20 மாணவர்களைக் கொண்ட சிறிய வகுப்புகளைப் பிரித்து, ஏற்கனவே அதிக மாணவர்களைக் கொண்ட வகுப்புகளுடன் இணைப்பது கற்றல் சூழலை மேலும் மோசமாக்குகிறது.

இதேவேளை, இரண்டாம் தவணை நிறைவடைந்த நிலையிலும், தரம் 9 மாணவர்களுக்கு பாடநூல்கள் கூட முழுமையாக வழங்கப்படவில்லை. நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட ஒரு பாடசாலையில், முதலாம் தவணை நிறைவடைந்தும் கற்பிக்கப்பட வேண்டிய 6 பாட அலகுகளில் 1 மட்டுமே கற்பிக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். பெற்றோர் சந்திப்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் இதனை ஒப்புக்கொண்ட போதிலும், வலயக் கல்விப் பணிமனையோ அல்லது பாடசாலை நிர்வாகமோ இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.



இவ்வாறு பாடசாலை கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் குழப்பங்கள் நிலவுகின்ற சூழலில், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வினாத்தாள்களிலும் சிக்கல்கள் இருப்பதை இலங்கை ஆசிரியர் சங்கம் வெளிப்படுத்தியுள்ளது. குறிப்பாக, மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும் தவணைப் பரீட்சை வினாத்தாள்களில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதோடு, மிகப்பெரிய மோசடிகளும் இடம்பெறுகின்றன.

பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதி பயன்படுத்தப்படுகின்ற போதிலும், வலய மட்ட வினாத்தாள்களைத் தயாரிக்கும் முழுப் பொறுப்பும் ஆசிரியர்கள் மீதே சுமத்தப்படுகிறது. பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ‘வளவாளர்கள்’ என்ற பெயரில் தங்களது கடமைகளில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் தங்களது சொந்தப் பணிகளில் ஈடுபடுவதும், பாடங்கள் கற்பிக்கப்படாமலேயே தவணைகள் நிறைவடைவதும் தொடர்கிறது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடகவியலாளர் சந்திப்பில் வெளியிட்ட முக்கிய தகவல் கல்வித் துறையின் அலட்சியத்தை அம்பலப்படுத்தியுள்ளது. மத்திய மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தர தமிழ் மொழி மூலத் தவணைப் பரீட்சை வினாத்தாளானது, 2019 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட வினாத்தாளின் அச்சுப்பிறழாத நகலாகும் என்ற செய்தியை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

முதலாம் வினாத்தாளின் 24 ஆம் வினாவில் இருந்து, 2 மற்றும் 3 ஆம் பகுதி வினாத்தாள்கள் முழுவதும் அப்படியே நகலெடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுமக்களின் வரிப்பணம் பெருமளவில் செலவிடப்படும் பரீட்சைகளில், அதிகாரிகள் இவ்வளவு பொறுப்பற்ற முறையில் செயற்படுவது ஒட்டுமொத்தப் பரீட்சை முறைமையையும் கேலிக்கூத்தாக்கும் மோசடியாகும் என்று ஜோசப் ஸ்டாலின் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

கல்வி அதிகாரிகளுக்கும் அதிபர்களுக்கும் சாதகமாகச் செயல்படும் நபர்களுக்கே பரீட்சைக் கடமைகள், வளவாளர் பொறுப்புகள் மற்றும் சிறப்பு விடுமுறைச் சலுகைகள் அள்ளிக் கொடுக்கப்படுகின்றன. பரீட்சை வினாத்தாள்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தங்களது பொறுப்புகளில் இருந்து புறக்கணித்துச் செல்வது மாணவர்களை நேரடியாகப் பாதிக்கிறது.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தங்களது கடமைகளில் இருந்து விலகிச் செல்வதால், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் கூட கல்வித் திணைக்களத்தின் படிவங்களை நிரப்பப் பயன்படுத்தப்படுகின்றனர். இதனால் அவர்களால் வழக்கமான வகுப்புகளுக்குச் செல்ல முடிவதில்லை. அளவுக்கு அதிகமான வேலைப்பளுவால், வினாத்தாள் திருத்தம் மற்றும் பதிவேடு பராமரிப்பில் மாணவர்களைப் பயன்படுத்தும் அவலமும் நடக்கிறது.

திணைக்களங்களில் சமர்ப்பிக்கப்படும் கோப்புகள் முறையாகப் பராமரிக்கப்படாமல் தொலைந்து போவதால், ஆசிரியர்கள் தங்களின் ஓய்வூதியக் காலத்தில் சேவைப் பதிவுகளுக்காகப் பாடசாலை பாடசாலையாக அலைந்து திரியும் நிலை ஏற்படுகிறது. இதில் தவறுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் நேர்மையான ஆசிரியர்கள் மீது “கற்பிக்கத் தெரியாது”, “அதிக விடுமுறை எடுக்கிறார்கள்” எனப் பெற்றோர்களிடம் தவறான பிரசாரம் செய்து பழிவாங்கும் போக்கும் நிலவுகிறது.

மத்திய மாகாணத்தில் இவ்வாறான போக்கு தொடர்ச்சியாக நிலவுகின்ற சூழலில், இது குறித்து அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தத் தவறுகின்றனர். குறிப்பாக, மத்திய மாகாணத்தில் தமிழர் ஒருவருக்கு வழங்கப்பட்டு வந்த மேலதிகக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவியே தற்போது இல்லாமல் போயுள்ளது. இதனால் தமிழ் மொழி மூல பாடசாலை ஆசிரியர்கள் தங்களது பணிகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்த நிலையில், போலியான ஆடம்பரக் கொண்டாட்டங்களையும் காகித அளவிலான சாதனைப் பதிவுகளையும் விடுத்து, மாணவர்களின் உண்மை யான கற்றலுக்கும் ஆசிரியர்களின் தொழில்சார் கண்ணியத்திற்கும் முன்னுரிமை அளிக்கும் கல்வி நிர்வாகமே இன்றைய உடனடித் தேவையாகும். மத்திய மாகாணத் தவணைப் பரீட்சை முறைகேடுகள், நிதி துஷ்பிரயோகங்கள் மற்றும் முறையற்ற ஆசிரியர் இடமாற்றக் கொள்கைகளுக்கு எதிராக அரசாங்கம் உடனடியாகச் சுயாதீன விசாரணைக் குழுவொன்றை அமைக்க வேண்டும்.

அனர்த்த காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் மாணவர்கள், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தெளிவான தேசிய வழிகாட்டல்கள் உருவாக்கப்பட வேண்டும். வினாத்தாள் நகல் எடுப்பு மோசடியில் ஈடுபட்ட பொறுப்பற்ற அதிகாரிகள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, முறைகேடுகளைத் தட்டிக்கேட்கும் நேர்மையான ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். போலியான பெருமைகளையும் நிர்வாக அழுத்தங்களையும் ஒழித்து, பொறுப்புக்கூறல் மிக்க வெளிப்படையான கல்வி நிர்வாகத்தை மலையகப் பாடசாலைகளில் உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கத்தினதும் மாகாணக் கல்வி அமைச்சுக்களினதும் தலையாய கடமையாகும்.

• • •




# இலங்கையில் இந்தியாவின் புதிய நகர்வு: தமிழர் அரசியல் தீர்வை வலியுறுத்திய விக்ரம் மிஸ்ரி

மொழியாக்கம்: **ஸ்ரீவன் புஸ்பராஜா**

**05.08.2026 அன்று இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி அவர்கள் இலங்கை உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை அரச தலைவருடனும் அமைச்சர்களுடனும் பல்வேறுபட்ட விடயங்களைப் பேசியிருந்தார். அவரது பயணம் பற்றி விடயங்களையும் பேசப்பட்ட விடயங்களையும் இந்திய வெளிவிகார அமைச்சு உத்தியோக பூர்வமாக அறிக்கையொன்றை ஆங்கிலத்தில் வெளியிட்டது. அந்த அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு இலக்கு மின்னிதழ் நேயர்களுக்காக...**

### 05 ஆகஸ்ட், 2026 இந்திய வெளியுறவுச் செயலாளரின் இலங்கைப் பயணம்

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி அவர்கள் 2026 ஆகஸ்ட் 05 அன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டார். வெளியுறவுச் செயலாளராக அவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதல் தனிப்பட்ட பயணம் இதுவாகும். இதற்கு முன்னர், 2025 ஏப்ரலில் இந்தியப் பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் 2026 ஏப்ரலில் இந்தியப் பிரதி ஜனாதிபதி மாண்புமிகு திரு சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோரின் பயணங்களின் போது, தூதுக்குழுவில் ஒருவராக அவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பயணத்தின் போது, வெளியுறவுச் செயலாளர் அவர்கள் இலங்கை ஜனாதிபதி மாண்புமிகு திரு. அனுர குமார திசநாயக்க, இலங்கை பிரதமர் மாண்புமிகு டாக்டர் ஹரினி அமரசூரிய மற்றும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் மாண்புமிகு திரு. விஜித்த ஹேரத் ஆகியோரைச் சந்தித்தார். மேலும், வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா செயலாளர் மாண்புமிகு திருமதி அருணி ரணராஜா அவர்களுடனும் அவர் கலந்துரையாடினார். வெளிநாட்டுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சஜித் பிரேமதாச அவர்களைச் சந்தித்ததுடன், இலங்கைத் தமிழ் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழ் (IOT) சமூகத் தலைவர்களுடன் தனித்தனியாகவும் சந்திப்புகளை நடத்தினார்.

தனது சந்திப்புகளின் போது, வெளிநாட்டுச் செயலாளர், இந்தியாவின் ‘அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை’ கொள்கை மற்றும் ‘மகாசாகர்’ தொலைநோக்குப் பார்வையின் கீழ் இலங்கைக்கு இந்தியா தனது அசைக்க முடியாத ஒத்துழைப்பை வழங்கும் என மீண்டும் உறுதிப்படுத்தினார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு விவகாரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பான தற்போதைய ஒத்துழைப்பு குறித்து இரு தரப்பினரும் விரிவான ஆய்வு மேற்கொண்டனர்.

டித்வா புயலைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான புனரமைப்புத் தொகுப்புத் திட்டம் உட்பட, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்துள்ளனர். குறிப்பாக, தொடருந்துத் திட்டங்களுக்காக 250 மில்லியன் அமெரிக்க டாலர் மற்றும் கால்நடை வளர்ப்பு மற்றும் பிற முன்னுரிமைத் தேவைகளுக்காக 100 மில்லியன் அமெரிக்க டாலர் என இந்திய ரூபாய் மதிப்பில் இரண்டு கடன் வசதிகள் தொடர்பான ஒப்பந்தங்கள் எட்டப்பட்டதை அவர்கள் வரவேற்றனர்.

இந்திய எக்ஸிம் (EXIM) வங்கிக்கும் இலங்கை நிதி அமைச்சகத்திற்கும் இடையே எட்டப்பட்ட இந்த ஒப்பந்தங்கள், இலங்கை ஜனாதிபதி முன்னிலையில் பரிமாறப்பட்டன. இலங்கை ஜனாதிபதியுடன், இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி செயலாளர் மற்றும் இந்திய உயர் ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர். டித்வா புயல் புனரமைப்பு உதவியின் கீழ் 100 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்தின் கீழ் சேதமடைந்த வீடுகளைப் புனரமைத்தல் மற்றும் நிரந்தரப் பாலங்களைக் கட்டுதல் ஆகிய பணிகள் விரைவில் தொடங்கும் என்பதையும் இரு தரப்பினரும் குறிப்பிட்டனர்.

2026 ஜூலை 13 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட அடிப்படையில், இடமாற்றம் செய்யப்பட்ட தெனியாய மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குதல், மற்றும் தீவு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு உபகரணங்களை வழங்குதல் ஆகியவற்றிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கான தீவு தழுவிய பேரிடர் எச்சரிக்கை அமைப்பை கூடிய விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கும் இரு தரப்பினரும் பணியாற்றி வருகின்றனர். 5 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்தின் கீழ் வடக்கு தொடருந்து வழித்தடத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து தொடருந்துச் சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டதில் அவர்கள் திருப்தி தெரிவித்தனர்.



மின்சாரக் கட்டமைப்பு இணைப்புத் திட்டம், சம்பூர் சூரிய சக்தித் திட்டம் மற்றும் திருகோணமலையை ஒரு மின்சக்திமையமாகமேம்படுத்துதல்உள்ளிட்டமின்உற்பத்தித் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர். இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயல்முறையை கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

61.5 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள காங்கேசன்துறை துறைமுகத் திட்டத்தின் புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமாறும் அவர் பணித்தார். 2025 ஏப்ரலில் இலங்கைக்கு இந்தியப் பிரதமர் மேற்கொண்ட பயணத்தின்போது அளிக்கப் பட்ட வாக்குறுதியை நினைவுகூர்ந்து, 1990-ஆம் ஆண்டின் சுவா செரிய (Suwa Seriya) நோயாளியூர்திச் சேவையின் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

கடந்த ஆண்டு பிரதமரின் பயணத்தின்போது அறிவிக்கப்பட்ட திறன் மேம்பாட்டு முயற்சியும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு அதன் முதல் ஆண்டில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 1000 க்கும் மேற்பட்ட இலங்கைத் தொழில் வல்லுநர்களை உள்ளடக்கியுள்ளது என்பதையும் அவர்கள் திருப்தியுடன் குறிப்பிட்டனர்.

தோட்டத் தொழிலாளருக்கான இந்திய வீட்டுவசதித் திட்டத்தின் நான்காம் கட்டச் செயலாக்கத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்களைக் குறிப்பிட்ட வெளியுறவுச் செயலர், 2017-ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தந்தபோது அறிவிக்கப்பட்ட, இந்தியத் தோட்ட சமூகத்தினருக்கான 10,000 வீடுகளின் கட்டுமானத்தைச் செயல்படுத்துவது உட்பட, அவர்களுக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதை விரைவுபடுத்துமாறு இலங்கைத் தரப்பை வலியுறுத்தினார்.

பொருளாதார விடயங்களில் இரு நாடுகளின் கூட்டாண்மையை வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற ஆரம்பகட்ட கலந்துரையாடல்களையும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது குறித்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லும் முடிவையும் இரு தரப்பினரும் வரவேற்றனர். இந்தியா-இலங்கை சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்ததையும் அவர்கள் வரவேற்றனர்.

இரு தரப்பிலும் தேவையான உள் நடைமுறைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பயணத்தின் போது, மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் வெளியுறவுச் செயலாளர் விவாதித்ததோடு, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்கு இலங்கையின் ஒத்துழைப்பையும் கோரினார். பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இருதரப்பு வழிமுறைகள் தொடர்ந்து செயல்பட்டு வரும் வேளையில், மீனவர்களின் வாழ்வாதாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அணுகுமுறையே நமது செயல்பாட்டிற்குத் தொடர்ந்து வழிகாட்ட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்துவதற்காக இலங்கை அரசு முன்னெடுப்புகளை மேற்கொள் வேண்டுமென்றும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் இலங்கையின் அரசியலமைப்பு விதிகளை முழுமையாகச் செயல்படுத்துமாறும் இலங்கைத் தலைமையை வெளியுறவுச் செயலாளரைக் கேட்டுக்கொண்டார். மேலும், இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பாதகமான எந்த வகையிலும் இலங்கையின் நிலப்பரப்பு பயன்படுத்த அனுமதிக்கப்படாது என்று 2024 டிசம்பர் மாத கூட்டு அறிக்கையில் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க வழங்கிய உறுதிமொழிகளை அவர் வரவேற்றதோடு, இது நமது இரு நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான வளர்ச்சிகளை நிறைவேற்றும் வகையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு விரிவான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப ஒரு வலுவான அடித்தளத்தை வழங்குகிறது என்றும் தெரிவித்தார்.

2024 டிசம்பரில் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்கவின் பயணத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலும், 2025 ஏப்ரலில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் பயணத்தின் போது கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் வகுக்கப்பட்டுள்ளபடி, நமது தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையைச் செயல்படுத்துவதில் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை வெளியுறவுச் செயலாளரின் பயணம் மீண்டும் உறுதிப்படுத்தியது.

• • •

www.ilakku.org | info@ilakku. org | © 2026 இலக்கு இணையம்




அரசியல் அடையாளம் (Political Identity) என்பது வெறுமனே ஒரு மொழிரீதியான முரண்பாடுகளுடன் தீர்க்கப்படாத சுயநிர்ணயக் கோரிக்கையைக் கொண்டுள்ள அரசற்ற தேசிய இனங்கள் மற்றும் மக்களுக்காக, அவர்கள் தங்களை எவ்வாறு வரையறுக்கின்றனர் என்பது அவர்களின் சர்வதேசத் தெரிவுநிலை, இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் அரசியல் கோரிக்கைகளின் சர்வதேசப் வகிபங்கினை பாதிக்கக்கூடியது

பல தசாப்தங்களாக, தமிழர்களின் அரசியல் அடையாளக் கேள்வியானது இலங்கையினை பொறுத்தவரை யில் தீர்க்கப்படாத தேசிய இனப் பிரச்சினையுடன் ஆழமாக பிணைந்துள்ளது. புலம்பெயர் ஈழத் தமிழர்களில் பலர் சர்வதேச அளவில் தங்களை "இலங்கையர்ஃஇலங்கைத் தமிழர்"( Sri Lankan/Srilankan Tamil) என அடையாளப்படுத்துகின்றனர். இங்கு அரச அடையாளம் (state identity) மற்றும் தேசிய அடையாளம் (national Identity) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு மிக முக்கியமானது. முதலாவது; சொல் இலங்கை அரசுடன் தொடர்புடைய சட்டபூர்வமான குடியுரிமை அல்லது புவியியல் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடும்.



ஆனால், "ஈழத் தமிழர்"( Eelam tamil) என்பது பாரம்பரியத் தமிழ் தாயகம், வரலாற்றுத் தொடர்ச்சி, கூட்டு நினைவகம் மற்றும் சுயநிர்ணயத்திற்கான அரசியல் அபிலாசை ஆகியவற்றுடன் தொடர்புடைய தனித்துவமான தேசிய அடையாளத்தை வெளிப்படுத்துகிறது.

எனவே, "ஈழம் தமிழ்" (Eelam Tamil) என்ற சொல்லைப் பயன்படுத்துவது வெறுமனே ஒரு மொழித் தேர்வாக அல்லாமல், ஒரு மூலோபாய அரசியல் அடையாள வெளிப்பாடாக (Strategic political identity) புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

ஒரு இனமக்களின் தேசிய இனப் பிரச்சினை இன்னும் அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படாத நிலையில், அவர்களின் தனித்துவமான தேசிய அடையாளச் சொல்லாட்சியை கைவிடுவது, அவர்களின் அரசியல் கோரிக்கையின் சர்வதேசத் தெரிவுநிலையைத் தளர்த்தக் கூடியதாக இருக்கும்.

"இலங்கைத் தமிழர்" என்று தங்களை அடையாளப்படுத்தும் ஒவ்வொருவரும் தமிழர் சுயநிர்ணயக் கோரிக் கையை நிராகரிக்கின்றனர் என்று கூறுவது சரியானதல்ல. இருப்பினும், சர்வதேச உறவுகளில சொல்லியல் (terminology )—மிகவும் முக்கியமானது. ஒரு சமூகத்தின் அரசியல் பிரச்சினை, அந்தச் சமூகமே தன்னை எவ்வாறு வரையறுக்கிறது என்பதன் அடிப்படையிலும் சர்வதேச அளவில் புரிந்துகொள்ளப்படுகிறது.

புலம்பெயர் ஈழத்தமிழர் தங்களை தொடர்ந்து இலங்கை அரசின் அடையாளத்தின் ஊடாக மட்டுமே வெளிப்படுத்தினால்,சர்வதேச சமூகத்தில் இந்தப் பிரச்சினை படிப்படியாக "இலங்கைக்குள் வாழும் ஒரு சிறுபான்மை இனத்தின் உரிமைகள்" என்ற வரையறைக்குள் மட்டுமே பார்க்கப்படும் அபாயம் உள்ளது. அதனால், தீர்க்கப்படாத தேசிய சுயநிர்ணயக் கேள்வி (national question of self-determination) பின்னணிக்குத் தள்ளப்படலாம்.

இந்த நிலையில், பலஸ்தீன மக்களின் அனுபவம் மற்றும் உறுதியான நிலைப்பாடு ஒரு ஒப்பீட்டு ரீதியான எடுத்துக்காட்டாக அமைகிறது. சிக்கலான சட்ட மற்றும் அரசியல் சூழ்நிலைகளுக்கிடையிலும், பாலஸ்தீன மக்கள் சர்வதேச அரசியல் உரையாடல்களில் தங்களின் Palestinian national identity இனை தொடர்ந்து நிலைநிறுத்துகின்றனர். அந்த தேசிய அடையாளத்தைப் பாதுகாப்பது, அவர்களின் தேசிய அரசியல் பிரச்சினை சர்வதேச கவனத்தில் தொடர்வதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

ஈழத் தமிழர்களின் நிலை பாலஸ்தீனர்களின் நிலைமைக்கு முற்றிலும் ஒரே மாதிரியானது என்று கூறுவது சரியானதல்ல. ஆனால், தேசிய அடையாளச் சொல்லாட்சி சர்வதேச அரசியல் தெரிவுநிலையை எவ்வாறு உருவாக்குகிறது என்பதில் ,இந்த ஒப்பீடு முக்கியமானதாக இருக்கிறது.

இந்தச் செயல்முறையில் புலம்பெயர் ஈழத் தமிழர்களுக்கு ஒரு முக்கியமான மூலோபாயப் பங்கு உள்ளது. ஜனநாயக நாடுகளில் வாழும் புலம்பெயர் சமூகங்கள் பொதுவாக கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை, அரசியல் பங்கேற்பு மற்றும் அமைதியான அரசியல் செயற்பாடு போன்ற அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தக்கூடிய சூழலில் உள்ளனர்

இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்பது, ஈழத் தமிழர் அரசியல் சமூகம் வரலாற்று ரீதியாக எதிலிருந்து கட்டமைப்பு ரீதியான சுயாட்சியையும் அரசியல் தீர்வுகளையும் கோருகிறதோ, அந்த பெரும்பான்மைவாத அரசுக் கட்டமைப்பிற்கு அறியாமல் சட்டபூர்வத்தன்மையை அளிக்கிறது. சிங்கள அரசின் நிறுவன அடையாளத்தினை உள்வாங்குவதன் மூலம், புலம்பெயர் சமூகங்கள் தங்களின் தனித்துவமான தேசியப் போராட்டத்தை, ஒரு ஒற்றையாட்சி கட்டமைப்பினை கொண்ட பௌத்த இனவாத கட்டமைப்பிற்குள் சிறுபான்மையினர் என்ற அடையாளத்தினை குறைத்து மதிப்பிடும் அபாயத்தை எதிர்கொள்கின்றன.

இது பேரினவாத அரசின் ஆதரவு பெற்ற ஓரங்கட்டல் மற்றும் கட்டமைப்பு ரீதியான வன்முறைகள் தொடர்பான வரலாற்று ரீதியான நியாயமான கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்து, ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை உள்நாட்டுச் தீவிரவாத செயற்பாடாக மாற்றியுள்ளது. முதன்மையான அரசியல் இலக்கு நிறுவன ரீதியான இறையாண்மை அல்லது சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமையாக இருக்கும்போது, ஒரு பேரினவாத ஆதிக்கச் சக்தியின் பெயரிடலைப் பயன்படுத்துவது சர்வதேவ அரங்கில் சிங்கள பௌத்;த தீவிரவாத அரசுக்கெதிரான போராட்ட ஒருமைப்பாட்டைப் பலவீனப்படுத்துகிறது. இது ஒரு முக்கிய அரசியல் சமச்சீரின்மையை(political asymmetry) உருவாக்குகிறது.

சுயநிர்ணயக் கொள்கை நவீன சர்வதேச சட்டத்திலும் சர்வதேச அரசியலிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சாசனத்திலும் International Covenant on Civil and Political Rights (ICCPR) kw;Wk; International Covenant on Economic Social and Cultural Rights (ICESCR) ஆகிய சர்வதேச உடன்படிக்கைகளின் பொதுவான Article 1லும் பிரதிபலிக்கிறது.

எனினும், சர்வதேச சட்டம் ஒவ்வொரு சுயநிர்ணயக் கோரிக்கையையும் தானாகவே ஒருதலைப்பட்சமான சுதந்திர அரசை உருவாக்கும் சட்ட உரிமையாக மாற்றுவதில்லை. எனவே, "ஈழத் தமிழ்" என்ற சொல்லைப் பயன்படுத்துவதால் மட்டுமே சுதந்திரத்திற்கான சட்ட உரிமை உருவாகிறது என்ற வாதத்தினை குறிப்பிடவில்லை.

மாறாக, வலுவான வாதம் என்னவெனில், தேசிய அடையாளம் என்பது சுயநிர்ணயத்தின் அரசியல் பொருளைத் தொடர்ந்து பாதுகாக்கும் ஒரு கருவியாகும். ஒரு

A.M.L **லம்பேட்**

தேசிய சமூகமானது தாம் யார், எந்த வரலாற்றுச் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர், தங்களின் அரசியல் எதிர்காலம் என்ன என்பதைக் கூறும் திறனைத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

இந்த நோக்கில், "ஈழத் தமிழ்" என்பது அரசியல் தொடர்ச்சியைப் பாதுகாக்கும் ஒரு கருவியாகக் கருதப்பட வேண்டும். மறுபடியொருமுறை பாலஸ்தீன ஒப்பிடும் பொழுது இங்கு பயனுள்ள ஒப்பீட்டு எடுத்துக்காட்டை வழங்குகிறது. இருப்பினும், ஈழத் தமிழர் மற்றும் பாலஸ்தீன அரசியல் நிலைமைகள் சட்டரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் ஒன்றல்ல என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.



இடம்பெயர்வு, பிராந்தியப் பிளவு மற்றும் தீர்க்கப்படாத அரசுரிமை போன்ற சிக்கலான சூழ்நிலை களுக்கிடையிலும், பலஸ்தீன மக்கள் சர்வதேச இராஜதந்;திர ரிதீயில் தனித்துவமான Palestinian national identity தொடர்ந்து நிலைநிறுத்தியுள்ளனர். " Palestinian" என்ற தேசிய அடையாளத்தின் தொடர்ச்சியான பயன்பாடு, பலஸ்தீன தேசியக் கேள்வி அகதிகள், குடியுரிமை போன்ற மாற்று நிர்வாகப் பிரிவுகளுக்குள் முழுமையாக மறைந்து போகாமல் இருப்பதற்கு உதவியுள்ளது.

இங்கு புலம்பெயர்; சமூகத்திற்கு ஒரு தனித்துவமான மூலோபாய நிலை உள்ளது. இலங்கை அரசின் நேரடி சட்ட மற்றும் நிர்வாக அதிகாரத்திற்கு உட்பட்டு வாழும் தாயகமக்களுடன் ஒப்பிடும்போது, ஜனநாயக நாடுகளில் வாழும் புலம்பெயர் சமூகங்கள் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டங்களால் பாதுகாக்கப்படும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை, அரசியல் பங்கேற்பு மற்றும் அமைதியான அரசியல் செயற்பாடு போன்ற பரந்த அரசியல் வெளிகளைப் பயன்படுத்த முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்கள் இலங்கை அரசின் சட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு உட்பட்டுள்ளனர். குறிப்பாக பயங்கரவாத தடுப்புசட்டம் Prevention of Terrorism Act (PTA) கண்காணிப்பு, இராணுவமயமாக்கல் மற்றும் கருத்து வெளிப்பாட்டிற்கான உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட சூழல் தொடர்ந்து உள்ளது.

அதேசமயம், புலம்பெயர் தமிழர் சமூகம், நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான தொடர்பு, சிவில் சமூக அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஊடகங்கள், சட்ட நடவடிக்கைகள், அமைதியான போராட்டங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் வழியாகச் செயல்பட முடியும்.எனவே, புலம்பெயர் அரசியல் செயற்பாடு உள்நாட்டு அரசியல் வரம்புகளை வெறுமனே மீண்டும் உருவாக்குவதற்குப் பதிலாக, ஈழத் தமிழர் தேசியக் கேள்வியை சர்வதேச அளவில் வெளிப்படுத்தும் international advocacy space நிலைக்கு வெளியாக வளர வேண்டும்.

• • •




# இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இலங்கைக்கு மூலோபாயத் தெரிவுகள் உள்ளன - இஸ்ரேலிய நிபுணர்

தமிழில்: **ஆர்த்திகன்**

**பாகம் 1**

இந்தியாவின் 'பல்முனை இணைக்கக் கொள்கை' (multi-alignment), இலங்கையின் 'மூலோபாயச் செயல்பாடு' (strategic agency) மற்றும் இந்தியப் பெருங்கடலை வெறும் வல்லரசுகளின் போட்டி நடைபெறும் களமாக மட்டும் ஏன் பார்க்கக்கூடாது என்பது குறித்து டாக்டர் லாரன் டகன் அமோஸ் (Dr. Lauren Dagan Amoss) அவர்களின் கருத்துகள்.




டாக்டர் லாரன் டகன் அமோஸ் தனது கல்வி மற்றும் தொழில்முறை வாழ்க்கையின் பெரும்பகுதியைத் தெற்காசியாவிற்கு வெளியிலிருந்து இந்தியாவை ஆராய்வதிலும், நாட்டின் வெளியுறவுக் கொள்கை, பாதுகாப்பு சார்ந்த கணக்கீடுகள் மற்றும் முக்கிய வல்லரசுகளுடன் வளர்ந்து வரும் உறவுகள் ஆகியவற்றைப் படிப்பதிலும் செலவிட்டுள்ளார்.

இஸ்ரேலின் பார்-இலான் பல்கலைக்கழகத்தில் (Bar-Ilan University) விஞ்ஞானியாகவும், விரிவுரையாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் பணியாற்றும் இவர், குறிப்பாக இந்தியா-இஸ்ரேல் உறவு, மூலோபாயத் தன்னாட்சி (strategic autonomy), பல்முனை இணைக்கக் கொள்கை மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் பரந்த மூலோபாயச் சூழல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறார்.



இவரது முனைவர் பட்ட ஆய்வு இந்தியா-இஸ்ரேல் இடையிலான வெளியுறவுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியை ஆராய்ந்தது; அதேவேளையில், இவரது சமீபத்திய ஆய்வுகள் முக்கிய வல்லரசுகளுக்கு இடையே இந்தியா மேற்கொள்ளும் சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் 'நீலப் பொருளாதாரத்தின்' (blue economy) மூலோபாய முக்கியத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிவடைந்துள்ளன. வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி என்ற வழக்கமான கட்டமைப்பிற்குள் மட்டும் இந்தியாவைச் சுருக்கிப் பார்க்காமல், மூலோபாயத் தன்னாட்சி, பொருளாதார நலன்கள், பாதுகாப்புப் பங்களிப்புகள் மற்றும் பிராந்தியக் கணக்கீடுகள் ஆகியவை ஒன்றிணைக்கும் ஒரு சர்வதேச அமைப்பின் மையத்தில் இந்தியாவை நிறுத்தி இவரது ஆய்வுகள் அணுகுகின்றன.

டாக்டர் டகன் அமோஸுடன் நாங்கள் உரையாடுவது இது இரண்டாவது முறையாகும். இம்முறை, புவியியல், பாதுகாப்பு, இணைப்பு மற்றும் முரண்பட்ட நலன்கள் ஆகியவை ஒன்றிணைந்து வரும் ஒரு பிராந்தியத்தில், இந்தியப் பெருங்கடல், இலங்கை மற்றும் 'மூலோபாயத் தன்னாட்சி' ஆகியவற்றின் அர்த்தம் குறித்த விவாதத்தை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். ஒரு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டாக்டர் டகன் அமோஸ் இலங்கை வந்திருந்தபோது இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது; அவர் புறப்படுவதற்குச் சற்று முன்பு அவருடன் ஒரு சுருக்கமான உரையாடலையும் நாங்கள் மேற்கொண்டோம்.

அந்த ஆரம்பக்கட்ட உரையாடலைத் தொடர்ந்து, இப்போது விரிவான விவாதம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பல்முனை இணைக்கக் கொள்கை, இந்தியா-இஸ்ரேல் உறவுகளின் தொடர்ச்சியான வளர்ச்சி, இலங்கையின் மூலோபாயச் செயற்பாடு, இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளதால் அதற்குள்ள பொறுப்புகள், சிறிய நாடுகளுக்கு உள்ள தேர்வுகள் மற்றும் இப்பிராந்தியம் குறித்து உலகம் இன்னும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கக்கூடிய விஷயங்கள் ஆகியவை ஆராயப்படுகின்றன.




இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது பெரும்பாலும் மூலோபாயப் போட்டியின் அடிப்படையில் விவரிக்கப்படுகிறது; இதில் கூட்டாண்மைகள், பகைமைகள், கூட்டணிகள் மற்றும் செல்வாக்கு மண்டலங்கள் ஆகியவை விவாதத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துள்ளன. ஆனால் டாக்டர் லாரன் டகன் அமோஸ் இந்த விஷயத்தை ஒரு மாறுபட்ட கண்ணோட்டத்தில் அணுகுகிறார். அவரைப் பொறுத்தவரை, இந்தியா ஒரு வல்லரசுடனோ அல்லது மற்றொரு வல்லரசுடனோ தன்னை இணைத்துக்கொள்கிறதா என்பது முக்கியமல்ல; மாறாக, தனது சொந்த முடிவுகளை எடுப்பதற்கான சுதந்திரத்தை அது தக்கவைத்துக்கொள்கிறதா என்பதே முக்கியமானது.

இந்தியா உலகத்துடன் மேற்கொள்ளும் மாறிவரும் உறவுமுறையைப் புரிந்துகொள்வதற்கு இந்த வேறுபாட்டை அறிந்துகொள்வது அவசியம் என்று அவர் வாதிடுகிறார். பன்முக அணிசேர்தலே இறுதியில் ஒருவகை அணிசேர்தலாக மாற முடியுமா என்று கேட்கப்பட்டபோது, அமோஸ் இந்தப் பிரச்சினையை அடையாளச் சின்னங்களைச் சுற்றி அல்லாமல், உத்திசார் தன்னாட்சியைச் சுற்றியே முன்வைக்கிறார்.

"பன்முக அணிசேர்தல் என்பது வெறுமனே அணிசேர்தலைத் தவிர்ப்பது அல்ல," என்கிறார் அவர். "அது, வெவ்வேறு பிரச்சினைகளில் உள்ள வெவ்வேறு கூட்டாளிகளுடன் உத்திசார் தன்னாட்சியைப் பாதுகாப்பதும், பதிப்புரிமை சுதந்திரத்தைப் பேணுவதும் ஆகும்." இந்த வாக்கியம் ஒரு நேர்காணலின் போது பேசப்பட்டது, ஆனால் அதன் உள்ளார்ந்த வாதம் தெளிவாக உள்ளது. சுதந்திரமான முடிவுகளை எடுக்கும் சுதந்திரத்தை முழுமையாக விட்டுக் கொடுக்காமல், இந்தியாவால் வெவ்வேறு சக்திகளுடன் இணைந்து செயற்பட முடியும்.

ஒரு குறிப்பிட்ட விவகாரத்தில் இந்தியா ஒரு குறிப்பிட்ட நாடுகளின் குழுவுடன் மிக நெருக்கமாகச் செயல்படக்கூடிய சூழல்கள் இருப்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். இதற்கு 'இந்தோ-பசிபிக்' பிராந்திய விவகாரம் ஒரு எடுத்துக்காட்டு. இந்தியா அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது; ஆனால், இத்தகைய ஒத்துழைப்பு என்பது, இந்தியா தனது 'மூலோபாயத் தன்னாட்சியை' (strategic autonomy) கைவிட்டுவிட்டது என்றோ அல்லது வழக்கமான ஒரு கூட்டணி அமைப்பில் இணைந்துவிட்டது என்றோ தானாகவே அர்த்தமாகிவிடாது.



அமோஸைப் பொறுத்தவரை, அந்தப் பங்காளிகளுடன் கருத்து வேறுபாடு கொள்ளும் திறனை இந்தியா தக்கவைத்துள்ளதா என்பதே மிக முக்கியமான அளவுகோலாகும். "ஒரு நாடு தனது பங்காளிகளின் கோரிக்கைகளை மறுக்கும் திறனை இழக்கும்போதுதான், 'பல்முனை இணக்கப்பாடு' (multi-alignment) என்பது வெறும் 'ஒரு தரப்புடனான இணக்கப்பாடாக' (alignment) மாறுகிறது," என்று அவர் கூறுகிறார். "இந்தியா தனது சுதந்திரம், முடிவெடுக்கும் திறன் மற்றும் தனது சொந்த நலன்களுக்கு ஏற்ப பல்வேறு தரப்பினருடன் ஒத்துழைக்கும் திறனைத் தக்கவைத்துக் கொள்ளும் வரை, நான் இதை 'பல்முனை இணக்கப்பாடு' என்றே அழைப்பேன்." எனவே, இந்தியா எத்தனை கூட்டாண்மைகளைக் கொண்டுள்ளது என்பது மட்டுமல்ல கேள்வி; மாறாக, அந்தக் கூட்டாண்மைகள் இறுதியில் இந்தியாவின் செயல்பாட்டுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றனவா என்பதே முக்கியம்.

இந்த வேறுபாடே, அவரது ஆராய்ச்சியின் மையமாகவும் நமது முந்தைய உரையாடலின் முக்கியப் பகுதியாகவும் இருந்த 'இந்தியா-இஸ்ரேல் உறவு' குறித்த அவரது மதிப்பீட்டையும் வடிவமைக்கிறது. இந்தியா-இஸ்ரேல் உறவு என்பது முதன்மையாகப் பாதுகாப்பு மற்றும் ராணுவம் சார்ந்தது என்ற கருத்தை அவர் முற்றிலும் தவறானது என்று கருதுகிறார். பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு முக்கியமானது என்றும், வரலாற்று ரீதியாக அதுவே இந்த உறவின் வலுவான தூண்களில் ஒன்றாக இருந்து வருகிறது என்றும் அவர் கூறுகிறார்; ஆனால், அது மட்டுமே இந்த முழுமையான கூட்டாண்மையின் பரிமாணத்தை வரையறுத்துவிடாது.

"இன்று, இந்த உறவு மிகவும் பரந்துபட்டதாக உள்ளது," என்று கூறும் அமோஸ், விவசாயம், நீர் மேலாண்மை, தொழில்நுட்பம், இணையம் (cyber), குவாண்டம் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் பிற துறைகளில் நிலவும் ஒத்துழைப்பைச் சுட்டிக்காட்டுகிறார். எனவே, இந்தியா-இஸ்ரேல் உறவை வெறும் பாதுகாப்பு சார்ந்த உறவாக மட்டும் விவரிக்காமல், ஒரு "மூலோபாயக் கூட்டாண்மை" (strategic partnership) என்று அழைப்பதையே அவர் விரும்புகிறார்.

தொடர்ச்சி: பக்கம் 19




வேல்ஸில் இருந்து **அருஸ்**

1974-ல் ஹென்றி கிஸ்ஸிஞ்சரால் வடிவமைக்கப்பட்ட 100 வருட புவிசார் அரசியல் ஏற்பாட்டிற்குப் பிறகு, அமெரிக்காவால் வளைகுடா நாடுகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்கு ஈடாக, எண்ணெய் விற்பனை மூலம் கிடைத்த உபரி நிதியை அமெரிக்காவின் மத்திய அரசுக்கடனில் (federal debt) மீண்டும் முதலீடு செய்வதில் வளைகுடா நாடுகள் ஈடுபட்டன.




காலப்போக்கில், ‘சுற்றி வளைத்துத் தடுக்கும்’ (encirclement) மற்றும் ‘எதிரியை அச்சுறுத்தித் தடுக்கும்’ (deterrence) உத்திகள் மூலம் பாதுகாப்பை வழங்கும் அமெரிக்காவின் வெளிப்படையான மாதிரியின் கீழ், இப்பிராந்தியம் முழுவதும் பல அமெரிக்க இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டன. ஏறத்தாள 50,000 அமொழகடக படையினர் அந்த பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டனர்.

இந்த உத்தி தனது முதல் உண்மையான போர்க்களச் சோதனையில் தோல்வியடைந்தது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அமெரிக்காவிலும் ஆசியாவிலும் இக்கொள்கைக்காகச் செலவிடப்பட்ட அமெரிக்க வரி செலுத்துவோரின் பல நூறு பில்லியன் டாலர் பணம் வீணடிக்கப்பட்டது என்பதை இது நிரூபித்தது.



இந்த உத்தி தனது முதல் உண்மையான போர்க்களச் சோதனையில் ஈரானில் தோல்வியடைந்தது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அமெரிக்காவிலும் ஆசியாவிலும் இக்கொள்கைக்காகச் செலவிடப்பட்ட அமெரிக்க வரி செலுத்துவோரின் பல நூறு பில்லியன் டாலர் பணம் வீணடிக்கப்பட்டது என்பதை இது நிரூபித்துள்ளது.

அமெரிக்காவின் நிதியைத் தொடர்ந்து கரைத்துக் கொண்டிருக்கும் இந்த அணுகுமுறைஇ ஆசியாவில் இன்னும் அதிகப் பொருத்தமற்றதாகிவிட்டது; ஏனெனில், ஈரானியர்களை விடச் சீனர்கள் மிகப்பாரிய மற்றும் துல்லியமான ஏவுகணைத் திறனைக் கொண்டுள்ளனர். பொருளாதாரத்திலும் படைத்துறை ரீதியாகவும்அவர்கள் அமெரிக்காவுக்கு இணையானவர்கள்.

ஒரு மோதல் ஏற்பட்டால், அப்பிராந்தியத்தின் துறைமுகங்களை உரிய நேரத்தில் விட்டு வெளியேறத் தவறினால், அமெரிக்காவின் ஏழாவது கடற்படை ஒரு மணி நேரம் கூட தாக்குப்பிடிக்காது என்பதை கடந்த 6 மாதங்களில் பஹரைனில் உள்ள ஐந்தாவது கடற்படை தலைமையகம் சந்தித்த இழப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன.



கடந்த சில தசாப்தங்களாக மாற்றப்பட்டுச் செலவிடப்பட்ட திரட்டப்பட்ட மூலதனம், மற்றும் அமெரிக்க நிர்வாகத்துடன் அரபுத் தலைவர்கள் முறைப்படி ஏற்றுக் கொண்ட பல ஆண்டுகால எதிர்கால உறுதிப்பாடுகள் மூலம் முதலீடுகள் மற்றும் வணிக ஒப்பந்தங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போதுஇ வளைகுடா நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்ற மொத்த நிதி அளவு 3.5 டிரில்லியன் முதல் 4 டிரில்லியன் டாலர் ஆகும். அத்துடன் எதிர்காலத்திற்கான கூடுதல் வாக்குறுதிகளாக மேலும் 3 டிரில்லியன் டாலர் உள்ளது. சுமார் 7 டிரில்லியன் டாலர் அல்லது அதற்கும் அதிகமான மதிப்புள்ள ஒரு உறவு அமெரிக்காவுக்கு உள்ளது.

7 டிரில்லியன் டாலர் மதிப்பிலான உறவு இருந்தபோதிலும், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நெதன்யாகுவின் பேச்சைக் கேட்டு இப்பிராந்தியத்தில் ஒரு போரைத் ஆரம்பித்து அப்பகுதி முழுவதும் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியுள்ளார்.



அமெரிக்கத் தொழில்துறையில் ஜிசிசி நாடுகள் மேற்கொண்ட பாதுகாப்புத் துறை சார்ந்த செலவினம் மட்டும் சுமார் 1.0 முதல் 1.2 டிரில்லியன் டாலரை எட்டியுள்ளது. இதில் ஒரு முக்கியமான தகவல் என்னவென்றால், நேரடி இராணுவத் தளவாடங்களுக்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு 1 பில்லியன் டாலருக்கும், வளைகுடா நாடுகள் கூடுதல் 2 முதல் 3 பில்லியன் டாலர் வரையிலான தொகையை ‘வாழ்க்கைச் சுழற்சி ஒப்பந்தங்களுக்காக’ (lifecycle contracts) வழங்குகின்றன; இவ்வொப்பந்தங்கள் தொடர் பராமரிப்பு, மின்னணுப் போர்முறைக்கான உளவுத் தகவல், செயற்கைக்கோள்கள் மற்றும் C4ISR இணைய உள்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியவை. அரபுப் பாதுகாப்பின் உள்நாட்டு தளவாடங்களை நிர்வகிக்கும் அமெரிக்க தனியார் பாதுகாப்பு ஆலோசனை நிறுவனங்களுக்கு நேரடியாகச் செலுத்தப்பட்ட பில்லியன் கணக்கான தொகைகளோ, அல்லது இப்பகுதியில் உள்ள அமெரிக்கத் தளங்களைப் பராமரிப்பதற்காக மானியம் வழங்கப்பட்ட நேரடி செயல்பாட்டுச் செலவுகளோ இதில் அடங்கவில்லை.

ஆனால் தற்போது இந்தக் காலகட்டம் மாறி வருவதாகத் தெரிகிறது. ரியாத் தனது போரியல் பொருளாதார உத்திக்கு முறைப்படி ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி,’விஷன் 2030’-ஐத் தக்கவைப்பதற்காக, பொது முதலீட்டு நிதியத்திலிருந்து கிடைக்கும் மொத்த மூலதனத்தில் 80 சதவீதம் சவூதி பொருளாதாரத்தில் செலுத்தப்பட வேண்டும் என்றும், மீதமுள்ள 20 சதவீதம் மட்டுமே சர்வதேச ஒதுக்கீடுகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



அதேசமயம், சவூதி அரேபியா, துருக்கி மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளால் கையெழுத்திடப்பட்ட, அதிகாரப்பூர்வமாக மெக்கா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் எனப் பெயரிடப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில், ஒரு கூட்டுப் பாதுகாப்புப் பிரிவு உள்ளது: ஒரு உறுப்பு நாட்டின் மீதான ஆயுதத் தாக்குதல், அனைத்து நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படும்.அதாவது இந்த உடன்பாடு பாதுகாப்பு சார்ந்து அமெரிக்காவை மட்டும் தங்கியிருக்கும் நிலையை தவிர்ப்பதால் அமெரிக்காவின் படைத்துறை வர்த்தகம் கடும் பாதிப்பை சந்திக்கலாம்.

பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சகம் மற்றும் துருக்கிய அதிகாரிகளின் அதிகாரப்பூர்வ அறிக்கைகளின்படி, இந்த ஒப்பந்தம் கூட்டுத் தடுப்பாற்றலை வலுப்படுத்துவதையும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.இது எந்தவொரு குறிப்பிட்ட நாட்டையும் குறிவைக்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

நடைமுறையில், இது கடந்த ஆண்டு கையெழுத்திடப்பட்ட சவூதி-பாகிஸ்தான் இருதரப்பு ஒப்பந்தத்தின் ஒரு முறையான மேம்படுத்தலாகும், இது இப்போது அங்காராவையும் உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் உளவுத் தகவல்களைப் பகிர்தல், ஒருங்கிணைந்த பயிற்சி மற்றும் கூட்டுப் பாதுகாப்புத் தொழில் திட்டங்களுக்கு வழிவகுக்கின்றன.

சவூதி அரேபியா நிதி பலத்தை அளிக்கிறது, துருக்கி மேம்பட்ட இராணுவத் தொழில்நுட்பத்தை வழங்குகிறது, மற்றும் பாகிஸ்தான் போரில் அனுபவம் வாய்ந்த இராணுவத்தை வழங்குகிறது.சுவாரஸ்யமாக, பாகிஸ் தானுக்கும் துருக்கிக்கும் இடையிலான தொழில்நுட்பப் பரிமாற்றம், குறிப்பாக ட்ரோன் துறையில், சீனாவுக்கு ஏற்கனவே கவலையளிக்கும் ஒரு விஷயமாக உள்ளது,

தொடர்ச்சி: பக்கம் 19

## எங்கள் மகள்களின் ... தொடர்ச்சி...

தியாகம் செய்யப்பட்ட அந்த மக்கள், அடையாளம் மற்றும் தாயகத்தை அடுத்த தலைமுறையும் தொடர்ந்து பாதுகாப்பதை உறுதி செய்வதன் மூலமும் அவர்களின் தியாகங்களை நாம் மதிக்கிறோம்.

அந்தப் பொறுப்பு இப்போது குறிப்பாகத் தமிழ் இளைஞர் களுடையது. செஞ்சோலை, செம்மணி மற்றும் முள்ளிவாய்க்கால் ஆகியவற்றின் துயரத்தை மட்டும் நாம் மரபுரிமையாகப் பெறக்கூடாது; நமக்கு முன்னால் வாழ்ந்தவர்களின் துணிச்சல், மன உறுதி, ஒழுக்கம் மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். நமது தலைமுறை வலிமையானதாகவும், சிறந்த கல்வி அறிவு கொண்டதாகவும், நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் மாற வேண்டும்.

பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் சட்ட வல்லுநர்களாகவும், சான்றுகளைப் பாதுகாக்கும் ஆய்வாளர்களாகவும், இனப்படுகொலை மறுப்பைச் சவால் செய்யும் ஊடகவியலாளர்களாகவும், சர்வதேச அமைப்புகளில் குரல் கொடுப்பவர்களாகவும், இனிவரும் காலங்களில் எங்கள் மக்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்போது தமிழர்களின் குரல் இல்லாத நிலை ஒருபோதும் ஏற்படாது என்பதை உறுதி செய்யும் தலைவர்களாகவும் நாம் மாற வேண்டும்.

நமது தலைமுறைக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகள் முந்தைய தலைமுறையினருக்குக் கிடைத்தவற்றிலிருந்து மாறுபட்டவை; ஆனால், நமது வரலாற்றைப் பாதுகாத்தல், நமது மக்களை வலுப்படுத்துதல் மற்றும் தமிழ் ஈழம் அடுத்த தலைமுறையிலும் தொடர்ந்து வாழ்வதை உறுதி செய்தல் ஆகிய பொறுப்புகள் இன்றும் நம்மிடம் உள்ளன.

மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியது போல, "போரில் பெற்றோரை இழந்த குழந்தைகள் அநாதைகள் அல்ல; அவர்கள் தமிழ் தேசத்தின் குழந்தைகள். அந்தத் தேசமே அவர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் விளங்கும்."

செஞ்சோலை நிகழ்வு நடந்து இருபது ஆண்டுகள் கடந்த நிலையிலும், அந்த வார்த்தைகள் நம் ஒவ்வொருவர் மீதும் ஒரு பொறுப்பைச் சுமத்துகின்றன. அந்தச் சிறுமிகள் தமிழ் தேசத்தின் குழந்தைகளாக இருந்திருந்தால், அவர்களின் நினைவைப் போற்றுவதும், நீதிக்கான அவர்களின் போராட்டத்தைத் தொடர்வதும் நமது தலைமுறையின் கடமையாகும்.

இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுகள் மட்டுமல்ல நாம்; இனப்படுகொலையாலும் அழிக்க முடியாத ஒரு தேசத்தின் தொடர்ச்சி நாம்.

வரலாற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை 'செஞ்சோலை' நமக்கு நினைவூட்டட்டும்; மறைக்கப்பட வேண்டியதாகக் கருதப்பட்ட உண்மைகளை வெளிக்கொணரும் உறுதியை 'செம்மணி' நமக்கு அளிக்கட்டும்; சர்வதேச மௌனத்தின் விளைவுகளை 'முள்ளிவாய்க்கால்' நமக்கு உணர்த்தட்டும்; மேலும், நமது மக்களின் கண்ணியத்தையும் அரசியல் அடையாளத்தையும் காக்கச் செலுத் தப்பட்ட பெரும் விலையை, நமது விடுதலைப் போராட்டத்தில் செய்யப் பட்ட தியாகங்கள் நமக்கு நினைவூட்டட்டும்.

துயரத்தை மட்டுமல்ல, ஒரு மக்கள் கூட்டத்தையும், மொழியையும், தாயகத்தையும், வரலாற்றையும், அத்துடன் நீதி தேடுவதிலும் தமிழ் தேசத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதிலும் உள்ள நிறைவேற்றப்படாத பொறுப்பையும் நாம் மரபுரிமையாகப் பெற்றுள் ளோம்.

எனவே, இந்த நினைவு கூரும் நிகழ்வு முடிவடைவதுடன் நமது பொறுப்பும் முடிந்துவிடாது. நினைவுகூரலைச் செயலாகவும், துயரத்தை வலிமையாகவும், வாழ்வுரிமையை ஒரு நோக்கமாகவும் நாம் மாற்ற வேண்டும்; சான்றுகளைப் பாதுகாத்தல், இனப்படுகொலை மறுப்பை எதிர்த்தல், பொறுப்புக்கூறலை வலியுறுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை அவர்களுக்கு நீதி வழங்கத் தவறிய அமைப்புகளிடம் கொண்டு சேர்த்தல் ஆகியவற்றை நாம் மேற்கொள்ள வேண்டும்.

செஞ்சோலைச் சிறுமிகளை, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட எதிர்காலத்திற்காக மட்டுமல்லாமல், அவர்களுக்குப் பின் எழும்பும் தலைமுறைக்கு அவர்கள் அளிக்கும் உத்வேகத்திற்காகவும் நாம் நினைவுகூர வேண்டும். நமது மக்கள் கொல்லப்பட்டனர், இடம்பெயர்க் கப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர்; நமது மக்களையும் வரலாற்றையும் புதைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவர்களுடன் தமிழ் தேசம் புதைக்கப்படவில்லை; நமது உணர்விலிருந்து தமிழ் ஈழம் அழிக்கப்படவில்லை; நீதி, கண்ணியம், சுதந்திரம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான நமது கோரிக்கையும் மறையவில்லை.

எனவே, இருபது ஆண்டுகளுக்குப் பிறகும், 'செஞ்சோலை'யை ஒரு தோல்வியின் அடையாளமாக அல்லாமல், உறுதியான மனவுறுதியின் ஊற்றாகவே நாம் முன்னெடுத்துச் செல்கிறோம். அந்தச் சிறுமிகளுக்கு, அவர்கள் மறுக்கப்பட்ட அந்தப் பருவ வாழ்க்கையை நாம் வாழ்ந்து காட்டுவதன் மூலம் கடமைப்பட்டுள்ளோம்; காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக உண்மையைத்தேடும் பணியைத் தொடர்வதன் மூலம் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

ஒரு இனத்தை அழித்தொழிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி க்கு நாம் அளிக்கும் மிகச்சிறந்த பதில் என்னவென்றால், அந்த இனத்தின் குழந்தைகள் தாங்கள் யார் என்பதையும், எங்கிருந்து வந்தவர்கள் என்பதையும், எதை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு தங்களுக்கு உள்ளது என்பதையும் முழுமையாக உணர்ந்து எழுந்து வருவதை உறுதி செய்வதே ஆகும்.

செஞ்சோலை மாணவிகளுக்காகவும், செம்மணி யில் புதைக் கப்பட்டவர்களுக்காகவும், காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்காகவும், முள்ளிவாய்க்காலுக்காகவும், தமி ழின அழிப்பால் பாதிக்கப்பட்ட மற்றும் அதிலிருந்து மீண்ட ஒவ்வொருவருக்காகவும், நமது மக்களுக் கான போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்காகவும், இந்த வர லாற்றை இன்று முன்னெடுத்துச் செல்லும் ஒவ்வொரு இளம் ஈழத் தமிழருக்காகவும் நாம் உறுதியளிக்கிறோம்: நாம் நினைவுகூர்வோம், உண்மையை நிலைநிறுத்துவோம், நீதிக்காகப் போராடுவோம்; மேலும் நமது மக்களின் வரலாறு, அடையாளம் மற்றும் அபிலாஷைகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்வோம்.

• • •

## 22ஆவது திருத்தச்... தொடர்ச்சி...

ஆட்சேர்ப்பு செய்வது, சட்டமா அதிபர் திணைக்களத்தை வலுப்படுத்துவது மற்றும் நீதிபதிகளின் நலன்களைப் பேணுவது போன்ற பல சாதகமான திட்டங்களை அவர் முன்வைத்த போதிலும், அவை அனைத்தும் சாதாரண நிர்வாக சீர்திருத்தங்களே தவிர, அரசியலமைப்பு ரீதியாக உயர்மட்ட நீதிபதிகளின் வயதை உயர்த்தும் உணர்வு பூர்வமான தீர்மானத்திற்கு முழுமையான நியாயாதிக்கமாக அமைய முடியாது.

'சவால்களையும் உயிர் ஆபத்துக்களையும் எதிர் கொண்டேனும் மாற்றங்களைச் செய்யப் போவதாகவும், இந்த ஆபத்தான செயற்பாட்டினால் பதவி பறிபோகுமாயின் ஒதுங்கிச் செல்லத் தயார்' என்றும் ஜனாதிபதி உணர்ச்சி பூர்வமாகப் பேசியிருப்பது, அவரது உறுதியான அரசியல் நிலைப்பாட்டைக் காட்டுகின்றது.

ஆனால் ஜனநாயக நாட்டில் 'நோக்கம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அதனை அடையும் வழிமுறையும் சரியாக இருக்க வேண்டும்' என்ற கோட்பாட்டை மறுதலித்து செயற்பட முடியாது என்பது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். அதுமட்டுமன்றி, அவசியமான நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கும், அரசியலமைப்பு ரீதியான நீதித் துறைச் சுயாதீனச் சிதைவிற்கும் இடையிலான மெல்லிய வேறுபாட்டை அரசாங்கம் உணரத் தவறிவிட்டது.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் (வெனிஸ் ஆணைக்குழு) நல்லாட்சித் தரநிலைகளுக்கு முரணாக, அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள உரையாடல்களின்றி, அவசரகதியில் 22ஆவது திருத்தத்தைக் கொண்டுவர முயற்சிப்பது நாட்டின் சட்டத்தின் ஆட்சியைக் கடுமையாகப் பாதிக்கும்.

அரசாங்கம் தன்னிடம் உள்ள பாராளுமன்ற பெரும்பான்மை பலத்தை ஒரு அதிகார ஆயுதமாகப் பயன்படுத்தாமல், சட்டத்தரணிகள் சங்கம், நீதிபதிகள் சங்கம், சிவில் அமைப்புகள் மற்றும் மதத் தலைவர்களின் நியாயமான அச்சங்களைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

மக்களாட்சியின் பிரதான தூணான நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தமும், நீண்டகாலத்தில் நாட்டிற்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

எனவே, மக்களிடம் உள்ள இறையாண்மையை மதித்து, இத்திருத்தச் சட்டமூலத்தை சர்வஜன வாக்கெடுப்பிற்கு உட்படுத்துவதோ அல்லது தற்காலிகமாக நிறுத்திவைத்து, பரந்த கலந்தாலோசனைக்குப் பின்னரே அடுத்தகட்டத்திற்கு நகர்த்துவதோ மட்டுமே தற்போதைய நெருக்கடிக்குச் சரியான ஜனநாயகத் தீர்வாக அமைய முடியும். ஆனால் இதில் எந்த முறைமையையும் பின்பற்றுவதற்கு அநுரவும் அவரது தோழர்களும் தற்போதைக்கு தயாரில்லை என்பது தான் துரதிஷ்டவசமானது.

• • •

## வளைகுடா பிராந்தியத்தில் ... தொடர்ச்சி...

ஏனெனில் இத்துறைகளில் இவ்விரு நாடுகளும் நேரடியாகப் போட்டியிடுகின்றன.

சவூதி-பாகிஸ்தான் கூட்டணி நீண்டகாலமாக இருந்து வருகிறது, ஆனால் அது எப்போதும் மிகவும் நிலையற்றதாகவே இருந்துள்ளது. 2015-ல், ஏமனில் ஹூதிகளுடன் போரிட இஸ்லாமாபாத் படைகளை அனுப்பும் என்று ரியாத் எதிர்பார்த்தது, ஆனால் பாகிஸ்தான் நாடாளுமன்றம் நடுநிலைமைக்கு வாக்களித்தது.இந்த முடிவு சவூதி முடியாட்சியை மிகவும் எரிச்சலூட்டியது, இது தூதரக உறவுகளை முடக்குவதற்கும், கடன் வசதிகள் மற்றும் மானிய விலையில் வழங்கப்படும் எண்ணெய் விநியோகங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கும் வழிவகுத்தது.

மற்றொரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், சவூதி அரேபியா ஏமனில் உள்நாட்டுப் போரை மீண்டும் ஆரம்பித் திட்டமிட்டு வருகின்றது, இது தவிர்க்க முடியாமல் பதிலடித் தாக்குதல்களைத் தூண்டும். அவ்வாறு ஏற்பட்டால் அது கூட்டுப் பாதுகாப்புப் பிரிவைச் செயல்படுத்துமா? என்பது தான் இங்குள்ள கேள்வி அது கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடும்.

2025-ஆம் ஆண்டு இருதரப்பு ஒப்பந்தம், இஸ்லாமாபாத்தால் ஒரு நேரடியான பரிவர்த்தனைப் பரிமாற்றமாக வடிவமைக்கப்பட்டது: சவூதி அரேபியாவின் நலிவடைந்த பொருளாதாரத்தில் பாரிய, உடனடி முதலீடுகளுக்குப் பதிலாக, பாகிஸ்தான் அதற்கு முறையான இராணுவப் பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்கும்.

இருப்பினும், கையெழுத்திட்ட பல மாதங்களுக்குப் பிறகும், இஸ்லாமாபாத்தில் விரக்தி ஏற்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை முறைப்படுத்தி, சுமார் 8,000 துருப்புகள், போர் விமானங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளை சவூதி மண்ணில் நிலைநிறுத்திய போதிலும், ரியாத் வாக்குறுதியளித்த பயனுள்ள முதலீடுகள் ஒருபோதும் நிறைவேறவில்லை என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. சவூதியர்கள், கடுமையான IMF நிபந்தனைகளுக்கு உட்பட்ட அதிகாரத்துவ வைப்புகளுடன் தங்களை மட்டுப்படுத்திக் கொண்டு, நிதிப் பரிமாற்றங்களைத் தொடர்ந்து நிறுத்தி வைத்தனர்.

எனினும், மத்திய கிழக்கில் ஏற்பட்ட முழு அளவிலான இராணுவ மோதல் தீவிரமடைந்தது,அமெரிக்கா வால் வருங்காலத்தில் வளைகுடா நாடுகளை பாதுகாக்க முடியாது என்ற நம்பிக்கைகளின் வீழ்ச்சிதற்போது ரியாத்தின் பிழைப்புக்கான கணக்கீட்டை முற்றிலுமாக மாற்றிவிட்டது. பாகிஸ்தானுடனான உடைந்த நம்பிக்கையைச் சரிசெய்ய வும், ஒரு புதிய மூலோபாய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அதனை இணங்க வைக்கவும், சவூதி அரேபியா பொருளாதார ரீதியாக விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது.

• • •

## இந்தியப் பெருங்கடல் ... தொடர்ச்சி...

அதே வேளையில், இந்தக் கூட்டாண்மையை ஒரு முழுமையடைந்த திட்டமாகவும் அவர் கருதவில்லை. "இந்த உறவு இன்னும் தனது முழு ஆற்றலையும் எட்டவில்லை என்றே நான் கருதுகிறேன்," என்று அவர் கூறுகிறார். தொழில்நுட்பம், இணைப்பு வசதிகள், ஆராய்ச்சி, கல்வி, புத்தாக்கம் மற்றும் மக்களிடையேயான உறவுகள் ஆகியவை ஒத்துழைப்பை விரிவுபடுத்தக்கூடிய துறைகளாக உள்ளன. அவரது மதிப்பீட்டின்படி, இந்த உறவு "இன்னும் வளர்ந்து வரும் நிலையிலேயே" உள்ளது.

இலங்கையுடனான இந்தியாவின் உறவு குறித்த அவரது புரிதல், ராஜதந்திரத்தை விடவும் நிலையான ஒன்றிலிருந்து தொடங்குகிறது; அதுவே 'புவியியல்' ஆகும். இலங்கையின் மூலோபாயச் சூழலுக்குள் நுழையும் மற்றொரு வெளிச்சக்தி மட்டுமே இந்தியா அல்ல என்பதை கொழும்பு நன்கு புரிந்துகொண்டுள்ளது என்று அவர் கூறுகிறார். "புவியியல், வரலாறு, பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை இந்தியாவை இலங்கையின் மூலோபாயச் சூழலில் ஒரு நிரந்தரமான காரணியாக மாற்றுகின்றன."

ஆனால், இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது என்பது, இலங்கையை ஒரு செயலற்ற பங்கேற்பாளராகக் கருதுவதைக் குறிக்காது. அமோஸ் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் ஒரு விடயம், இலங்கையின் சொந்த உத்திசார்ந்த செயல் திறன் ஆகும். "இலங்கை, இந்தியா, சீனா, அமெரிக்கா அல்லது வேறு எந்த சக்திக்கும் வெறுமனே பதிலளித்துக் கொண்டிருக்கவில்லை," என்கிறார் அவர். அந்த நாட்டிற்கு அதன் சொந்த உள்நாட்டுக் கட்டுப்பாடுகள், பொருளாதார முன்னுரிமைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை நலன்கள் உள்ளன.

புது தில்லியைப் பொறுத்தவரை, இதன் பொருள், செல்வாக்கு மற்றும் பதிலளிப்புக்கு அப்பாற்பட்ட வகையில் இந்த உறவைப் புரிந்துகொள்வதாகும். "இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு ஒரு சிக்கலான வரலாற்றைக் கொண்டுள்ளது, அதை புறக்கணிக்க முடியாது," என்கிறார் அவர். ஆனால், இந்தியா ஒரு முக்கிய பிராந்திய சக்தியாக இருப்பதால், "இலங்கைக்காக மிகவும் சீரான மற்றும் நெகிழ்வான ஒரு உத்தியை உருவாக்குவதில் அதற்கு ஒரு சிறப்புப் பொறுப்பு உள்ளது" என்று அவர் வாதிடுகிறார்.

அந்தக் கருத்து இயல்பாகவே இலங்கையைச் சுற்றியுள்ள கடல் மற்றும் நீலப் பொருளாதாரம் என்ற கருத்தாக்கம் குறித்த கேள்விக்கு இட்டுச் செல்கிறது. அமோஸ் இந்த விடயத்தைப் பற்றி விவாதிப்பதில் எச்சரிக்கையாக இருக்கிறார், ஏனெனில், அவர் ஒப்புக்கொள்வது போல, அவர் இன்னும் இலங்கையைப் பற்றி கற்றுக்கொண்டிருக்கிறார். அவரது முதல் பயணம், ஒரு இறுதி மதிப்பீட்டைப் போன்ற எதையும் விட, ஒரு ஆரம்பக்கட்ட அபிப்ராயத்தையே அவருக்கு அளித்துள்ளது.

தொடரும்...

நன்றி: **சிறீலங்கன் கார்டியன்**

## இலங்கைக்கு புத்தர் ... தொடர்ச்சி...

அதுவும் புத்தர் ஆகாயத்தில் பறந்து வந்தார் என்பது போன்ற மாயாஜாலக் தன்மைகொண்ட சித்தரிப்புகளையும் அறிவியல் வரலாறு நிராகரிக்கிறது.

அவர் அவ்வாறு வரவில்லை எனில், மகாவம்சத்தில் இக்கதைகள் ஏன் சேர்க்கப்பட்டன என்ற கேள்வி இயல்பாக நமக்கு எழும். இதற்கான விடை இலங்கையின் சிங்கள பௌத்த அரசியலிலும், 'தம்மதீப' (பௌத்தத்தைப் பாதுகாக்கும் புனித பூமி) எனும் கருத்தியல் கட்டமைப்பிலும் உள்ளது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில், அனுராதபுரம் மகாவிகாரையில் மகாநாம தேரரால் எழுதப்பட்ட "மகாவம்சம்", தென்னிந்தியப் படையெடுப்புகளும் உள்நாட்டு அரசியல் சீர்குலைவும் நிலவிய ஒரு கொந்தளிப்பான காலகட்டத்தில் தோன்றியது. அக்காலத்தில் ஆட்சியிலிருந்த பௌத்த அரசுகளின் அதிகாரத்தை நியாயப்படுத்தவும், மக்களிடையே ஒரு ஒருங்கிணைந்த மதத்தேசியவாத அடையாளத்தை உருவாக்கவும், வரலாற்றுடன் புராணங்களைக் கலந்து கட்டமைக்க வேண்டிய அரசியல் தேவை இருந்தது.

இலங்கையை ஒரு "தர்மதீவாக", அதாவது பௌத்தத்தைப் பாதுகாக்கும் புனித பூமியாகக் கட்டியெழுப்ப வேண்டிய அரசியல், சித்தாந்தத் தேவை ஆளும் வர்க்கத்திற்கும் சங்க சமூகத்திற்கும் இருந்தது. இதற்காகவே, புத்தரே நேரில் வந்து இந்த மண்ணைப் புனிதப்படுத்தினார் என்ற கதையாடல் உருவாக்கப்பட்டது. இது பௌத்த அரசுகளின் அரசியல் ஆதிக்கத்திற்கும், ஆட்சி நியாயத்திற்கும் பயன்படுத்தப்பட்ட ஒரு அரசியல் கருத்தியலாக நிறுவப்பட்டது. எனவே, இயக்கர்களை நாகரிகமற்றவர்களாகவும், பௌத்தத்தை ஏற்பவர்களை நாகரிகமடைந்தவர்களாகவும் பிரித்துக் காட்டியதன் மூலம், அக்காலகட்ட சமூகத்தில் நிலவிய முரண்பாடுகள் மத ரீதியான கதையாடல்களாக உருமாற்றப்பட்டன.

புத்தர் பரிநிர்வாணம் அடையும் தருவாயில், தேவேந் திரனிடம் (சக்ர தெவியோ) இலங்கையைப் பாதுகாக்குமாறு கோரியதாகவும், பௌத்த தர்மம் நிலைத்து நிற்கும் புனித பூமியாக இலங்கையைத் தேர்ந்தெடுத்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது. பௌத்தத்தை ஐயாயிரம் ஆண்டுகள் பாதுகாக்கப்போகும் நாடு இலங்கை என்று புத்தர் அறிவித் ததாகவும் அதனைத் பேணுமுகமாக விஜயனையும் அவனது பரிவாரங்களையும் பாதுகாக்கும்படி சக்ர பகவானிடம் கேட்டுக்கொண்டதாகவும் அதே மகாவம்சத்தில் கூறப்படுகிறது.

இதன் மூலம் 'சிங்கள இனம் – பௌத்த மதம் – இலங்கைத் தீவு' ஆகிய மூன்றும் பிரிக்க முடியாதவாறு இணைக்கப்பட்டன. தர்மத்தை (தம்ம) பாதுகாக்கும் கடமை ஒப்படைக்கப்பட்ட நாடு என்பதால் "தம்மதீப" (தர்மத் தீவு) என்று அழைக்கப்படுவதுடன் அதுவே "தம்மதீப" கோட்பாடாகவும் நாம் வரைவிலக்கணப்படுத்துகிறோம்.

அதன்படி புத்தரே நேரடியாக வந்து ஆசீர்வதித்த நிலம் என்பதால், இலங்கையின் மீதான பூர்வாதிக்கம் பௌத்தர்களுக்கே உரியது என்ற அரசியல் நியாயப்படுத்தல் சாத்தியமானது. பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி போன்ற நவீன வரலாற்றாய்வாளர்கள் சுட்டிக்காட்டுவது போல, புத்தர் இலங்கைக்கு வந்தாரா இல்லையா என்பதைவிட, 'புத்தர் இலங்கைக்கு வந்தார்' என்ற கதையாடல் ஐந்தாம் நூற்றாண்டில் ஏன், யாருடைய அரசியல் நலன்களுக்காக உருவாக்கப்பட்டது என்பதே முதன்மையான ஆய்வுக் கேள்வியாக இருக்க வேண்டும். தொல்லியலாளர் ஆர்.ஏ.எல். எச். குணவர்தனவும், 'தி பீப்பிள் ஒஃப் தி லயன்' எனும் தமது ஆய்வுரையில், சிங்கள அடையாள வரலாறு எவ்வாறு பிற்கால அரசியல் தேவைகளால் மறுவடிவமைக்கப்பட்டது என்பதை விளக்குகிறார்.

மகாவம்சத்தின் கதையாடலில் இயக்கர்கள் நாகரிகமற்றவர்களாகவும் புத்தரின் வல்லமையால் விரட்டியடிக்கப்பட்டவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். இது உண்மையான இயக்கர்களைப் பற்றிய நடுநிலைக் கதையல்ல; மாறாக, இலங்கையில் ஏற்கெனவே வாழ்ந்த சுதேசியப் பழங்குடி சமூகங்களை விளிம்புநிலைப்படுத்தி, வட இந்தியாவிலிருந்து வந்த குடியேற்றவாசிகளின் மேலாதிக்கத்துக்கு வலு சேர்ப்பதற்காக எழுதப்பட்ட ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலாகும். அதிகாரத்தில் உள்ள வெற்றியாளர்களின் பார்வையில் எழுதப்படும் வரலாற்றுப் பதிவுகள் எப்போதும் தமது ஆதிக்கத்தை நியாயப்படுத்த மதப் புனிதத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

### இயக்கர் பற்றிய வரலாற்றுப் புனைவு ஏன்?

மகாவம்சத்தில் புத்தர் விரட்டியடித்ததாகக் கூறப்படும் 'இயக்கர்' யார் என்ற கேள்வி வெறும் புராணவியல் ஆர்வத்தின் அடிப்படையிலானதல்ல; அது இன்றைய இலங்கை அரசியலின் மையத்திலேயே அமர்ந்திருக்கும் ஒரு கேள்வி. மகாவம்சம் இயக்கர்களை நாகரிகமற்ற, மனிதத் தன்மையற்ற உயிரினங்களாகச் சித்தரிக்கிறது; புத்தர் தமது ஆன்மிக வல்லமையால் அவர்களை அச்சுறுத்தி, மந்திரப்படி விரட்டி, கடலுக்கு அப்பாலுள்ள கிரி என்னும் தீவிற்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது. ஆனால் ஒப்பீட்டு தொல்குடி ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது என்னவெனில், 'இயக்க', 'நாக' என்பன புராண உயிரினங்கள் அல்ல; இலங்கையிலும் தென்னிந்தியப் பகுதிகளிலும் பரவலாக வழிபடப்பட்ட, விவசாயத்திற்கு முந்திய அல்லது ஆரம்பகால விவசாய சமூகங்களைக் குறிக்கும் பழந்தமிழ்/திராவிட வழிபாட்டு அடையாளங்களே.

நாகதீபம், நயினாதீவு உள்ளிட்ட வடஇலங்கைப் பகுதிகளில் இன்றும் தொடரும் நாக வழிபாடு மரபுகள், தமிழ்ப் பாரம்பரியத்துடன் நேரடித் தொடர்புடையவை என்பதை மானுடவியலாளர்கள் பலரும் பதிவு செய்துள்ளனர். இந்நிலையில், மகாவம்சம் இப்பழங்குடி/முன்னோடி சமூகங்களை 'அரக்கத்தன்மையுடையோர்' என சித்தரித்து, புத்தர் அவர்களை வெற்றி கொண்டதாகக் கூறுவது, வட இந்தியாவிலிருந்து வந்த குடியேறிகளின் (விஜயன் பரம்பரையினர்) மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் ஒரு பிற்கால இலக்கிய உத்தியே தவிர, அக்கால இனவரைவியல் உண்மையைப் பிரதிபலிப்பதல்ல.

இந்தச் சித்தரிப்பு இன்றைய 'மண்ணின் மைந்தர்' அரசியலுடன் நேரடியாகப் பின்னிப் பிணைந்துள்ளது என்பதே இதன் தீவிரத்தன்மையின் நீட்சி எனலாம். இயக்கர்/நாகர் ஆகியோரை புத்தர் வருகைக்கு முன் 'வெறும் விலங்குகளுக்கு நிகரானவர்கள்' எனச் சித்தரிக்கும் அதே கட்டமைப்பு, சிங்கள பௌத்தரே இலங்கையின் 'உண்மையான', 'முதன்மை' வாரிசுகள் என்றும், ஏனையோர் பிற்காலத்தில் வந்தேறியவர்கள் என்றும் நிலைநிறுத்த பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தொல்லியல் - மொழியியல் சான்றுகள் காட்டுவது வேறு: இலங்கையின் மிகப் பழைய குடியேற்ற அடுக்குகளில் திராவிட மொழிக் குடும்பத்துடன் தொடர்புடைய தொல்குடி இருப்பு உண்டு என்பதை பல தொல்லியலாளர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர். இயக்கர்/நாகர் கதையை அரசியல் நோக்கிலிருந்து விடுவித்து, ஒரு தொல்குடி வரலாற்று ஆய்வுப் பொருளாகப் புதிதாக அணுகுவதே, தமிழில் இதுவரை மேற்கொள்ளப்படாத ஒரு முக்கிய ஆய்வுத் திசையாகும்.

### மகாவம்சம் : உரை மாறுபாடுகள்

மகாவம்சம் என்பது ஒரே காலகட்டத்தில் எழுதப்பட்ட ஒரு நிலையான நூலல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் மகாநாம தேரரால் தொடங்கப்பட்ட மூல மகாவம்சத்தைத் தொடர்ந்து, பன்னிரண்டாம், பதினான்காம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் சூளவம்சம் என்ற பெயரில் தொடர் பகுதிகள் சேர்க்கப்பட்டன. வில்ஹெல்ம் கைகர் (Wilhelm Geiger) 1912இல் மேற்கொண்ட ஆங்கில மொழிபெயர்ப்பு இன்றும் கல்விப் புலத்தில் நியமப் பதிப்பாகப் பயன்படுத்தப்படுகிறது; ஆனால் அது ஒரு குறிப்பிட்ட பாலி கையெழுத்துப் பிரதி மரபை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. பல்வேறு பிரதிகளுக்கிடையே மூன்று வருகைக் கதையின் விவரணையில் சிறு வேறுபாடுகள் இருப்பதை பாலி இலக்கிய ஆய்வாளர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர். இக்கதை எந்தப் பிரதியில் முதன்முதலில் தோன்றுகிறது, எக்காலகட்டத்தில் அது கூடுதலாக விவரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது என்பதை உரை-விமர்சன முறையில் காலவரிசைப்படுத்தும் ஆய்வு இதுவரை நம் மத்தியில் மேற்கொள்ளப்பட்டதில்லை.

### தர்க்கரீதியான முரண்பாடு

மகாவம்சத்தின் கூற்றுப்படி, புத்தர் இலங்கைக்கு மூன்று முறை வருகை தந்து பதினாறு புனித இடங்களுக்குச் சென்று, அங்கிருந்த இயக்கர்களையும் நாகர்களையும் சந்தித்துப் பிரசாரம் செய்தார். ஆனால் வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, புத்தர் மறைந்து சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகே, அசோக சக்கரவர்த்தியின் புதல்வரான அரஹத் மஹிந்த தேரர் இலங்கை வந்து தேவநம்பியதீசன் மன்னனுக்குப் பௌத்தத்தைப் போதித்து, இலங்கையில் பௌத்த சாசனத்தை நிறுவினார். ஞானமும் ஒப்பற்ற பிரசார ஆற்றலும் கொண்ட புத்தர் தாமே மூன்று முறை நேரில் வந்து பிரசாரம் செய்தும் பௌத்த சங்கத்தை நிறுவ முடியாமல் போனார்; ஆனால் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த மஹிந்த தேரரால் அதை உடனடியாகச் செய்ய முடிந்தது என்று ஏற்றுக்கொள்வது, ஒரு தர்ம பிரசாரகராகப் புத்தரின் ஆற்றலையே கேள்விக்குள்ளாக்குகிறது. புத்தர் இலங்கைக்கு வந்து பிரசாரத்தில் தோற்றார் எனச் சித்தரிப்பதைவிட, அவர் ஒருபோதும் வரவேயில்லை என்பதை ஏற்றுக்கொள்வதே அவரது தத்துவத்திற்கும் ஆளுமைக்கும் செய்யப்படும் உண்மையான கௌரவம் என்பேன்.

பௌத்த தத்துவம் என்பது பகுத்தறிவையும், காரிய, காரணத் தொடர்பையும், சான்றுகளையும் முதன்மைப் படுத்தும் ஒரு வாழ்வியல் நெறி. புத்தரின் போதனைகளே தர்க்கத்திற்குப் பொருந்தாத நம்பிக்கைகளை அப்படியே ஏற்காதீர் எனக் கூறுகின்றன.

திரிபிடகத்தின் நுணுக்கமான மவுனம், விநயத்தின் மஜ்ஜிமதேச எல்லைவரையறை, அசோகரின் கல்வெட்டு மவுனம், தொல்லியல் ஆதாரமின்மை, பயணப் புவியியல் முரண்பாடு, இயக்கர்/நாகர் சித்தரிப்பின் பின்னணியிலுள்ள அரசியல் நோக்கம், மகாவம்சப் பதிப்புகளுக்கிடையேயான உரை வேறுபாடுகள், மூன்று வருகைக்குப் பின்னரும் மஹிந்த தேரரின் பணி தேவைப்பட்டதன் தர்க்க முரண்பாடு இந்த எட்டு தர்க்கங்களையும் ஒருங்கே நோக்கும்போது, கௌதம புத்தர் இலங்கைக்கு ஒருபோதும் விஜயம் செய்யவில்லை என்பதும், மகாவம்சத்தில் கூறப்படும் வருகைக் கதைகள் ஐந்தாம் நூற்றாண்டில் உருவான 'தம்மதீப' எனும் அரசியல்-மத சித்தாந்தத்தின் ஒரு பகுதியே என்பதும் தெளிவாகின்றன.

புராணங்களையும் மதநம்பிக்கைகளையும் வரலாற்று உண்மைகளிலிருந்து பிரித்துப் பார்ப்பதே ஒரு வரலாற்று அறிஞருக்கும், சிந்தனை தெளிவுள்ள சமூகத்திற்கும் அழகாகும். புத்தர் இலங்கைக்கு வரவில்லை என்பதை ஒப்புக்கொள்வது பௌத்த தர்மத்தின் மேன்மையைக் குறைக்காது; மாறாக, அது வரலாற்று உண்மையையும் புத்தரின் உண்மையான தத்துவத்தையும் கௌரவிக்கும் செயலாக அமையும்.

கடந்த காலத்தை எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதைப் பொறுத்தே எதிர்காலத்தையும் கட்டமைக்கிறோம். நாம் இலங்கையின் உண்மையான வரலாற்றைக் கற்றுக் கொள்ள வேண்டுமானால், "புத்தர் இலங்கைக்கு வந்தார்" என்ற கதையை முதலில் முற்றிலுமாக தவிர்த்தல் முன்நிபந்தனை ஆகிறது.

• • •

## செஞ்சோலைப் படு ... தொடர்ச்சி...

செஞ்சோலை மாணவிகளின் வயதில் இருக்கும் இளைய தலைமுறை, அவர்களின் புகைப்படங்களைப் பார்க்கிறது. அவர்கள் வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையை நினைக்கிறது. அவர்கள் அடைய வேண்டிய கனவுகளை நினைக்கிறது. அந்தக் கனவுகளோடு சேர்ந்து நீதியையும் கேட்கிறது.

செஞ்சோலையின் 53 மாணவிகளும் எமது நினைவில் வாழ வேண்டும். அவர்களின் பெயர்கள் மறக்கப் படக்கூடாது. அவர்களின் கொலைகள் மறைக்கப்படக்கூடாது. அவர்களின் மரணத்துக்கு நீதி கிடைக்க வேண்டும். நினைவுகூர்தல் என்பது வெறும் கண்ணீர் சிந்தும் நிகழ்வு அல்ல. மறைக்கப்பட்ட வரலாற்றை மீண்டும் மீண்டும் சொல்லும் போராட்டம். கொல்லப்பட்டவர்களின் பெயர்களை உயிருடன் வைத்திருக்கும் போராட்டம். எதிர்காலத்தில் இன்னொரு செஞ்சோலை நிகழாதபடி எமது பிள்ளைகளின் பாதுகாப்புக்காக எழும் போராட்டம். செஞ்சோலைப் பிள்ளைகளின் குருதி வீணாகவில்லை என்பதை உலகிற்கு சொல்லும் நாளாக ஒகஸ்ட் 14 இருக்கட்டும். அவர்களுக்கு நாம் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலி, அவர்களுக்கான நீதியைத் தொடர்ந்து கோருவதுதான்.

• • •

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு ... தொடர்ச்சி...

இன்று ஆளும் அரசு, "மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதி காரசபை" என்ற புதிய யோசனையை முன்வைத்து, சட்டபூர்வமாக அதை உருவாக்க முனைகிறது. இதன் மூலம் மலைநாட்டு காலநிலை, மண்சரிவு, நீர் பிடிப்பு, ஆகிய விஷயங்களுக்காக இதை செய்யப்போவதாகவும், அதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவப் போவதாகவும் கூறுகிறது.

மலைநாட்டின் நீர்வளங்கள், காடுகள், உயிரியல் பன் முகத்தன்மை மற்றும் சூழலியல் அமைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் மக்களின் வாழ்விட உரிமையும் காணி உரிமையும் பறிக்கப்படக்கூடாது. அதுவே இன்று நாம் கேட்கவேண்டிய முக்கியமான கேள்வியாகும்.

எமது முன்வைப்புகளை செவிமடுத்த, ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) குழுவினர், இந்த முக்கிய விவகாரங்களை தம் கவனத்துக்கு கொண்டுவந்தமைக்காக, தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு நன்றி தெரிவித்தனர்.

சிறுபான்மை மக்களின் காணி, கலாசார உரிமைகளை மறுக்கும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் தமது நிறுவனம், ஒருபோதும் துணை போகாது என்றும், இவற்றை தாம் அரசுடன் முன்னேடுக்கும் திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்துவதாகவும் உறுதி அளித்தனர்" என்று தெரிவித்துள்ளார்+

• • •

## சர்வதேச நீதிக்காய்... தொடர்ச்சி...

கப்படும் ஒவ்வொரு மனித எச்சமும், இலங்கையில் நிலைமாறுகால நீதி என்பது கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளதை உலகிற்கு உரக்கச் சொல்கிறது. காலம் கடத்தப்பட்ட நீதி என்பது மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமானது.

காணமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் போன்ற வலுவற்ற உள்ளூர் பொறிமுறைகளை நிராகரித்து, சர்வதேச நீதியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு போராடும் தமிழ் மக்களின் குரலுக்கு சர்வதேச சமூகம் இனிமேலும் செவிசாய்க்கத் தவறினால், அது மனித உரிமை என்ற சர்வதேச அடிப்படைக் கோட்பாட்டிற்கே பேரிழுக்காகும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

## தாமரை கோபுரம்

இலங்கையில் காணப்படுகின்ற மிக உயர்ந்த கோபுரம்( 1149 அடி) இதுவாகும். இது உலகில் காணப்படுகின்ற உயர்ந்த கோபுரங்களில் பதினொராவது இடத்தில் உள்ளது.
இதன் மேல் உயரத்தில் இருந்து பார்க்கும் பொழுது கொழும்பு நகரம் முழுவதையும் பார்த்து, அதன் அழகை ரசிக்க முடியும். சுற்றுலா பயணிகளுக்கு இது ஒரு சிறப்பான இடமாகவும் காணப்படுகின்றது.

**கூ. திகழினி**
**கன்னியா**



**இ.ஜோயல்**
**செல்வநாயகபுரம்**

## உழைப்பும் உயர்வும்

ஒரு சிறிய கிராமத்தில் அர்ஜுன் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. பாடசாலைக்கு கட்டணம் கூட கட்ட முடியாத நிலை. ஆனாலும் அர்ஜுனுக்கு ஒரே கனவு — பெரிய பொறியியலாளராக வர வேண்டும் என்பதுதான்.

இதனால் பகல் முழுவதும் கொல்லையில் வேலை செய்துவிட்டு, இரவில் விளக்கு வெளிச்சத்தில் படித்தான். சிறுக சிறுக பணம் சேமித்தான். அவனது உறவினர்கள் , சமுதாயத்தினர் எல்லாம் “உன்னால முடியாது” என்று சொன்னார்கள். ஆனால் அவன் உழைப்பை நிறுத்தவே இல்லை. நண்பர்களிடம் புத்தகங்களை வாங்கி படித்தான் .
தனியார் பரீட்சார்த்தி என்பதன் ஊடாக உயர்தர பரீட்சைக்கு தோற்றி அதிக புள்ளிகளைப் பெற்றான். பொறியியலாளராக படிப்பதற்கான வாய்ப்பை பெற்றான்.

ஆண்டுகள் ஓடின. அர்ஜுன் கடுமையாக உழைத்து ஒரு பெரிய நிறுவனம் ஒன்றை நிறுவினான். அன்று எவ்வூரில் அவமானப்பட்டானோ
இன்று அதே ஊரில் அவன்தான் நூறு பேருக்கு வேலை கொடுக்கிறான்.

உண்மையான உழைப்பு ஒருநாள் நிச்சயம் உயர்வை கொடுக்கும். கனவு பெரிதாக இருந்தால், கஷ்டமும் சிறிதாகிவிடும். ஆகவே, விடாமுயற்சியும் உழைப்பும் இருந்தால் எந்த உயரத்தையும் தொடலாம்.



**மு. ஷனா**
**விளாங்குளம்**



# தாயகமும் வாழ்வும்





